கல்கி



KALKI 30.9.1962 30 காசு


அன்றாடம் அணியும் ஆடைகளுக்கு
அத்தனை வெண்மையும் பொலிவும்
அளிப்பது ஸன்லைட்
SUNLIGHT
SOAP
கண் நிறைந்த தூய்மை.
வெண்மை. களையான பொலிவு:
கைமேல் ஸன்லைட் சலவைப் பலன்.
இல்லத்திலேயே சலவை செய்ய எல்லாத்
துணிகளுக்கும் எற்றது...
ஸன்லைட் – நுரைவளமுள்ள தூய்மையான சோப்.
S. 32A-X52 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



சிகரெட் உற்பத்திக்கான ஆள்பலம், நிதி, பொருள் நிறைவு ஆகிய எவ்வளவோ வசதிகள் நம் நாட்டுக்கு உள்ளன. எனினும் பாரதத்திலே, சிகரெட்டுத் தொழில் தனக்குரிய உயர் நிலையை இன்னும் எய்த முடியவில்லையென்றால், அது இந்திய மூலதனம் கணங்கிப்போயிருக்கிறது என்பதனாலோ, அல்லது தேர்ச்சிவாய்ந்த தொழிலினம் இல்லாமையாலோ அல்ல. ஆனால் இந்தியாவில் வாணிபக் கூட்டுறவு அமைத்த அந்நியர்களின் ஏகபோக உரிமையாட்சியினால் தான்.
Rs.
இந்திய சிகரெட் தொழிலுக்கென்ன இடர்?
Panama
20
CIGARETTES
பனமா
ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது
GTC
பம்பாய்—57.
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.
GT. 709-A.TM
Greens' Advtg.

சுபகிருது, புரட்டாசி 14உ

கல்கி

செப்டம்பர் 30, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 22 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 9

வாழ்த்தி வழி கூறுகிறோம்

உலகுக்கெல்லாம் உகந்த உத்தமத் திருப்பணியினைப் புரிவதற்காக நம் அருமைத் தலைவர் ராஜாஜி அவர்கள் இம்மாதம் 25-ந் தேதியன்று அமெரிக்காவுக்குப் புறப்பட்டிருக்கிறார்கள். பதினேழாண்டுகளுக்கு முன் முதல் அணுகுண்டு வெடித்த நாளாக உலகை விஷமாக்கும் குரூரத்தைக் கண்டித்து எழுதி வந்த ராஜாஜி இப்போது அதனை அந்த முதல் அணுகுண்டை வெடித்த நாட்டிலேயே வாய்மொழியாக எடுத்துரைக்கச் செல்கிறார். நீண்ட நாட்களாக எதிர்பார்த்து வந்த இந்தப் பயணம் கடைசியில் வெகு அவசரத்தில் தொடங்கியுள்ளது.

காந்திஜி சமாதானக் கழகத்தின் ஆதரவில் அதன் தலைவர் ஸ்ரீ திவாகர் அவர்களுடனும், ஸ்ரீ சிவராவ் அவர்களுடனும் அமெரிக்கா செல்கிறார் ராஜாஜி. இம்மாதம் இருபத்தியெட்டாம் தேதியன்று அவர் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அவர்களுடன் பேச்சுநடத்துகிறார். இதன் முடிவை ஒட்டி அங்கிருந்து அவர் ருஷ்யாவுக்கும்செல்லக்கூடும்.

இந்த யாத்திரை நம் உள்ளங்களில் பால் வார்த்தாற் போல் ஆறுதலளிக்கிறது. பிரபஞ்ச வெளி முழுவதும் சூழ்ந்துள்ள நச்சுப் புகை மண்டலத்தைக் கண்டு நம் இதயத்தில் பரவிய இருள் மண்டலத்தில் நன்னம்பிக்கையின் ஒளிக்கீற்றுக்களைத் தூண்டியிருக்கிறார் ராஜாஜி.

" நான் அமெரிக்கா செல்வது உலக சமாதானம் என்ற பெரும் பயனை உத்தேசித்தல்ல. முழு ஆயுத பரிகரணத்தைக் கோரியும் இந்த யாத்திரை நடைபெறவில்லை. மேலும் அணுகுண்டு சோதனை செய்யாமல் நிறுத்துமாறு வல்லரசுகளைக் கேட்டுக் கொள்வதுதான் இந்தத் தூது மேற்கொண்டதன் லட்சியம்" என்று ராஜாஜி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தமது பணி இவ்வளவு சிறிய குறிக்கோளைக் கொண்டதே என்றும், அதிலும் அது வெற்றி பெறுமா என்பது ஐயமே என்றும் கூறியுள்ளார் ராஜாஜி. எனினும் மக்கள் எல்லோரும் இந்தப் பயணத்தைப் பேரார்வத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வல்லரசுகளின் பிடிவாத மனப்போக்கு மக்கள் அறிந்ததுதான். என்றாலும் ராஜாஜி எழுப்பும் சத்தியத்தின் குரல், தர்மத்தின் குரல், அஹிம்சையின் குரல் வல்லரசுகளின் இறுகிய உள்ளங்களை இளக்கலாகாதா என்றே மக்கள் இறைஞ்சுகிறார்கள். தள்ளாத பிராயத்தில் இந்தத் திருத் தொண்டை ஏற்றுள்ள அரசியல் முனிவரின் பணி சிறக்க வேண்டும் என வேண்டுகிறார்கள். எந்த ஒரு நாட்டுக்குமட்டுமின்றிப் பிரபஞ்ச முழுவதற்கும் — இன்று வாழ்வோருக்கு மட்டுமின்றி எதிர்கால சந்ததியினருக்கும்—பெரு நன்மை பயக்கும் புனிதப் பணி பலிதமாக வேணுமெனப் பிரார்த்திக்கிறார்கள்; அணுகுண்டு சோதனைகள் இனியேனும் நடைபெறாதிருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள்.

உலக மாந்தர் அனைவரின் இந்தப் பிரார்த்தனையும் ராஜாஜி அவர்களுடன் அமெரிக்கா செல்கிறது. கர்மத்தின் பலனைக் கருதாது உலகில் அறத்தையும், அன்பையும், அமைதியையும் நிலை நாட்டத் தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும்; ஒரு விதமான மனச் சார்புமின்றி உலக அரங்கில் உண்மையை எடுத்துரைக்க வேண்டும் என்ற காந்திய நெறியில், கண்ணன் காட்டிய வழியில், செல்லும் ராஜாஜியுடன் காந்தி மகானுடைய ஆசியும் கண்ணபிரானின் அருளும் துணை செல்லும்.

ஆண்டவனின் அருள் பலத்தோடு, அண்ணலின் ஆசிர்வாத பலத்தோடு, நம் எல்லோருடைய அன்பின் பலத்தையும் குறைவறப் பெற்றுள்ள ராஜாஜி அவர்கள் இந்தப் பயணத்தை வெற்றியுடன் முடித்துக்கொண்டு பூரண ஆரோக்கியத்துடன் திரும்பிவர நாவார, மனதார வாழ்த்துகிறோம்.

ஆத்ம சோதனைக்கு ஒரு நாள்


அண்ணல் காந்திஜியின் ஜயந்தித் திருநாள் நெருங்குகிறது.

தத்துவங்களுடன் பிணைந்த சடங்குகளையெல்லாம் பரிகசிக்கும் காங்கிரஸ் சர்க்கார், எந்தத் தத்துவங்களுக்காகக் காந்தி மகான் உயிர் வாழ்ந்து, உயிர் துறந்தாரோ அவற்றையெல்லாம் காற்றில் பறக்க விட்டு, காந்தி ஜயந்தியை ஒரு சடங்காக மட்டும் கொண்டாடப் போகிறது. மகாத்மா போற்றிப் பரப்பிய கோட்பாடுகளை மறந்து விட்டது மட்டுமின்றி அவற்றுக்கு நேர் மாறான கொள்கைகளை அன்று அமுலாக்கத் திட்டமிட்டிருக்கிறது அரசு.

'நிலச் சீர்திருத்தம்' என்ற பெயரில், சீராக இருந்த கிராம சமுதாய உறவுகளைச் சின்னபின்னமாக்கும் 'சோஷலிஸ' ஏற்பாட்டைக் காந்தி ஜயந்தி அன்று தமிழக சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வருவது அண்ணலின் நினைவுக்கு இழைக்கும் மகத்தான அபசாரமாகும்.

மக்கள் தனித்தனியே பெற்றுள்ள ஆற்றல்கள் எல்லாம் பிரகாசிக்க முடியாதபடி சர்க்கார் தலையிட்டால் அவற்றை அழித்து, ஒப்புரவு சமூகப் பிணைப்பையும் துண்டித்து, வயல்களில் பயிருக்குப் பதில் பகைமையையும், வோட்டுக்களையும் வேளாண்மை செய்யும் பலாத்காரப் பறிமுதல் செயலை, அஹிம்சாமூர்த்தி அவதரித்த நன்னாளில் அங்குரார்ப்பணம் செய்வது மன்னிக்க முடியாத அநீதியாகும்.

காங்கிரஸ்காரர்களை மன்னிக்கவேண்டியவர்கள் யார்? மக்களா? இல்லை. அவர்களுடைய மனச்சாட்சியே அவர்களை மன்னிக்குமா என்று அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அகக் குரலைக் கேட்பதற்கு உற்ற ஒருநாள் சத்திய ஜயந்தியான காந்தி ஜயந்தியாகும்.




அடிகள் அனவரதமும் எடுத்தியம்பிய மக்கள் சுதந்திரத்துக்கும், தர்ம கர்த்தா முறை சமுதாய அமைப்புக்கும், நாட்டை இயந்திரத் தொழில் மயமாக்காமல் மக்களையே மூலதனமாக வைத்து எளிமையாக வாழும் முறைக்கும், எந்த இக்கட்டிலும் உலக அரங்கில் உண்மையின் குரலை எழுப்பும் திறத்துக்கும், எப்போதும் ஆண்டவனின் ஆணையை மனத்தில் கொண்டு ஒழுக வேண்டிய நன்னடத்தைக்கும் இன்று காங்கிரஸ் சர்க்காரின் கீழ் நிகழ்ந்து வரும் காரியங்களுக்கும் இடையே எவ்வளவு பெருத்த இடைவெளியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அந்நியர்களிடமிருந்து விடுதலை பெற்றோமே ஒழிய அந்நிய நாடுகளின் உளுத்துப் போன அரசியல் கோட்பாடுகளிலிருந்து நாம் இன்னும் விடுதலை பெறவில்லை. இதுபற்றி காந்தி மகான் கூறுவதை ஆட்சியாளர் நினைவு கூர்வார்களா?

''மேல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த மயக்கு வார்த்தைகளுக்கும், வசீகர கோஷங்களுக்கும் நாம் ஆட்படாதிருப்போமாக! தனித் தன்மை வாய்ந்த ஏழை நாட்டு மரபு என்பது இன்று இல்லாமற் போய் விட்டதா என்ன? பொருளாதாரப் பிரச்னை குறித்து நம் நாட்டுக்கு ஏற்றபடி ஒரு தீர்வுகாண நம்மாலேயே இயலாதா என்ன? இவ்விஷயமாக மேல் நாட்டிலிருந்து கிடைக்கும் கொள்கைகளெல்லாம் பலாத்காரம் என்ற தார்ப் பூச்சு பெற்றவையே யாகும். அந்த மார்க்கங்கள் அடிநாசத்துக்கே இட்டுச் செல்கின்றன என்பதை நான் கண்டுள்ளபடியால்தான் அவற்றை எதிர்க்கிறேன். மேல் நாடுகள் கூறும் சோஷலிஸமோ அல்லது கம்யூனிஸமோதான் மக்களின் ஏழைமையைத் தீர்க்கும் இறுதி உபாயம் என்று நினைப்பது நிச்சயமாகத் தவறாகும்'' என்கிறார் காந்திஜி.

''நம் நாட்டுக்கு ஏற்றபடி நம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டும்'' என்று அண்ணல் கூறுகிறாரல்லவா? அதுதான் சுதந்திர வழி; சுதந்திரக் கட்சியின் வழியுமாகும்.



கலப்பட மயம்

சென்னை நகரம் பரபரப்படைந்திருக்கிறது. ''சென்னை ஹோட்டல்களில் 'விஷம்' கலந்த உணவு விற்கப்படுகிறதாமே!'' என்று பேசி அஞ்சி வருகிறார்கள் மக்கள். பத்திரிகைகளில் ஹோட்டல்களில் நிலவும் அசுத்த நிலையைப் படம் பிடித்து வெளியிடுகிறார்கள்.

ஹோட்டல்களில் மட்டும்தானா அசுத்தமான சூழ்நிலை இருக்கிறது? மதிய உணவுத் திட்டம் என்று அரசினர் அமுல் நடத்துகிறார்களே அது நல்லபடியாக நடத்தப்படுகிறதா? சங்கரன் கோவில் பக்கத்தில் ஒரு பள்ளியில் மதிய உணவு உட்கொண்ட குழந்தைகள் வயிற்றில் உணவு தங்காமல் பரிதாப நிலைக்கு உள்ளானதற்கும் அசுத்தமான முறையில் உணவு தயாரிக்கப்பட்டுப் பரிமாறியதே காரணம். இவற்றையெல்லாம் தடுக்கச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

உணவு தயாரிப்பவர்கள், உணவு தயாரிக்கும் இடம், உணவு தயாரிக்கும் பாத்திரங்கள் இவற்றிலிருந்து மட்டும்தானா விஷம் பரவுகிறது? இவ்வுணவு தயாரிப்பதற்காகக் கடைகளிலிருந்து வாங்கும் மூலப் பொருள்களான அரிசி, கோதுமை மாவு, துவரம் பருப்பு ஆகிய எல்லாமே 'விஷம்' கலந்த கலப்படப் பொருட்களாக அல்லவா உள்ளன? ஆகவே வீட்டிலேயே சுத்தமான சூழ்நிலையில் தயாரித்து உண்ணலாம் எனில், அதுவும் முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது!

இந்த விஷப் பொருள்களைச் சாப்பிடுவதனால் ஏற்படும் நோய்களுக்கு வைத்தியம் செய்து கொள்ளலாம் எனில், அந்த மருந்துகளாவது சுத்தமாக இருக்கும் என்று நம்பமுடிகிறதா? சமீபத்தில்கூட, இஞ்செக்ஷனுக்கான சுத்த நீர்க்குப்பியில் மரத்தூள் இருந்தது என்று செய்தி வந்திருக்கிறது!

இப்படி எதிலும் கலப்பட மயமாக இருக்கும் இந்த நாடு, எதிலும் உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று போதித்த காந்திமகான் வாழ்ந்த நாடுதானா?

என்ன சேதி?

ஊதாரித்தனத்துக்கு உதாரணம்

சித்தூர் தண்ணீர்த் தொட்டி விவகாரம் ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டிகாருவின் கோபத்துக்குச் சற்றும் மசிந்து கொடுக்கவில்லை!

சித்தூரில் குடிநீர் விநியோகிப்பதற்காக 70,000 ரூபாயில் கட்டப்பட்ட தொட்டி, கட்டி முடித்துத் திறந்து வைத்த நாளிலிருந்தே ஒழுகிக் கொண்டிருக்கிறது! தண்ணீர் அதில் தங்குவதே இல்லை.

சென்ற உபதேர்தலுக்குமுன் சித்தூருக்கு விஜயம் செய்த முதன் மந்திரியின் கவனத்துக்கு ஊர்ப் பொதுமக்கள் இவ்விஷயத்தைக் கொணர்ந்தார்கள். இந்த வெட்கக்கேடான நிலையைக் கண்டு மந்திரி பொருமினர். உடனே பழுது பார்க்கும்படி உத்தரவிட்டார்.

புதிதாகக் கட்டுவதற்கு என்ன செலவாகுமோ அந்த அளவு பழுது பார்ப்பதற்கும் ஆகும். ஆகவே, இருப்பதை இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டுவதே மேல் என்று என்ஜினீயர்கள் சொல்லிவிட்டார்கள்!

பொதுமக்களின் வரிப் பணம் காங்கிரஸ் சர்க்காரில் தண்ணீர்பட்டபாடாகிறது என்பதற்கு இது ஒரு சிறிய உதாரணமே!

என்னே ஒருமைப்பாடு!

தேசத்தில் ஒருமைப்பாடு வேண்டும் என்று எவ்வளவு அதிகமாகப் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறதோ, அவ்வளவு வேகமாகப் பிளவு சக்திகளும் தலை தூக்குகின்றன. நமது அண்டை ராஜ்யமாகிய மைசூரின் பெயரைக் 'கர்நாடகம்' என்று மாற்றிவிட வேண்டும் என்று தீவிரமான கிளர்ச்சி ஏற்பட்டு, அதைப் பற்றி ஒரு மசோதாகூட சட்டசபையில் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இதை எதிர்க்கும் சில சட்ட சபை அங்கத்தினர்கள் ராஜ்யத்தையே இரண்டாகப் பிரித்து மைசூர் வேண்டும் என்பவர்களுக்கு மைசூர் இருக்கட்டும், கர்நாடகம் வேண்டுமென்போருக்கு 'கர்நாடகம்' இருக்கட்டும் என்று எண்ணி, ராஜ்யப் பிரிவினைக்கு ஒரு மசோதா கொண்டு வந்துள்ளனர். இந்தக் கட்சி, பிரதி கட்சிகள் எல்லாம் எப்படியோ போகட்டும். மைசூர் என்று உலக முழுதும் புகழ் பெற்றுள்ள ராஜ்யத்தின் பெயரை ஏன் மாற்ற வேண்டுமென்பது தான் நமக்குப் புரியவில்லை.

மொரார்ஜி சாமியார் மீண்டும் யாத்திரை கிளம்பினார்!



தோட்டப் பகுதியில் தமிழரசுக் கட்சி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் வருடாந்திர மகாநாட்டில் இந்தியத் தோட்டத் தொழிலாளர் சம்பந்தமாக ஓர் அதிமுக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் விளைவுகளைப் பற்றி இந்திய வம்சாவளியினர்களான தோட்டத் தொழிலாளர்களின் தலைவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் ஓரளவு கவலை கொள்ளத் தலைப்பட்டிருக்கிறது என்பதைப் பிரதம மந்திரியின் சொற்பொழிவிலிருந்து வெளியாகி யிருக்கிறது. இது வரையில் தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் இலங்கைத் தமிழர் வசிக்கும் பிரதேசமெனப்படும் வடக்கு, கிழக்கு மாகாணங்களோடு கட்டுப்பட்டிருந்தது. கடந்த வருடம் தமிழரசுக் கட்சியினர் சத்தியாக்கிரகம் செய்தபொழுது அதில் தோட்டத் தொழிலாளரான, இந்திய வம்சாவளியினர்களான தமிழர்கள் பங்கு கொள்ளவில்லை. அவர்கள் இவ்வாறு பங்கு கொள்ளாமல் ஒதுங்கியிருந்ததற்கு நியாயமான பல காரணங்கள் இருக்கின்றன. தமிழரசுக் கட்சி இன்னொரு போராட்டம் நடத்துமானால் அதில் இந்திய வம்சாவளியினர்களையும் இழுத்துப் போட வேண்டும் என்று அந்தக் கட்சி நினைப்பதாகத் தோன்றுகிறது. இதற்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் செயல்பட்டு வந்த தமிழரசுக் கட்சி இப்பொழுது தோட்டப்பகுதிகளிலும் தமிழரசுக் கிளைக் காரியாலயங்களை நிறுவி அங்கத்தினர்களைத் திரட்டுவது என்று தீர்மானித்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் மன்னார் மகாநாட்டுக்கு ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸ் நேரில் சென்றிருந்து தோட்டப் பகுதிகளில் தமிழரசுக் கிளை ஆரம்பிக்கும் யோசனையைக் கைவிட வேண்டும் என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க இரண்டு காங்கிரஸ் ஸ்தாபனங்கள் இருக்கின்றன வென்றும் தமிழரசுக் கட்சி நிலைமையைக் குழப்பக் கூடாது என்றும் அவர் வாதாடினார். ஆனால் தமிழரசுக் கட்சியினர் கேட்கவில்லை. அந்தக் கட்சிக்குள்ளேயே ஓரளவு எதிர்ப்பு இருந்தும்கூடத் தோட்டப் பகுதிகளில் தமிழரசுக் கட்சிக் கிளைகளை ஆரம்பிப்பதென்ற தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் முனைந்திருக்கிறார்கள்.

நேருஜியின் விஜயம்

அடுத்த மாதம் பாரதப் பிரதமர் நேரு இலங்கைக்கு விஜயம் செய்கிறார். மூன்று நாட்கள் வரையில் அவர் இங்கு தங்குகிறார். அவ்வமயம் இலங்கை இந்தியப் பிரச்னைகளைப் பற்றிச் சம்பாஷணைகள் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக இந்தியாவுக்குத் திரும்புமாறு இங்குள்ள இந்திய வம்சாவளியினர்களைத் தூண்டச் சலுகைத் திட்டம் ஒன்றைப்பற்றிய பரிசீலனைகள் நடைபெற விரும்புவதாகத் தெரிய வருகிறது. இந்தியா திரும்பத் தயாராக இருப்பவர்களுக்கு இலங்கை அரசாங்கம் குடும்பத்துக்குச் சுமார் இரண்டாயிரம் ரூபாய் வீதம் கொடுக்க உத்தேசித்திருக்கிறது. இந்தத் திட்டத்தை அமுல் நடத்த நான்கு கோடி ரூபாய் ஆகும் என்று மதிப்பிட்டு அத்தொகையைக் கடனாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. இதை இந்தியா நிராகரித்து விட்டதென்றாலும் இலங்கை கைவிட்டதாகத் தெரியவில்லை. நேருஜி இங்கு வரும் பொழுது அவருடன் பேசி ஒரு முடிவு செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அஜீஸின் கேள்வி

இது சம்பந்தமாக ஜனாப் அஸீஸ் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அதில் விவேகமானதொரு யோசனையை அவர் தெரிவித்திருக்கிறார். இலங்கை அரசாங்கம் சலுகைத் திட்டம் தயாரிப்பதில் தவறில்லை. அதை அமுல் நடத்த இந்திய அரசாங்கத்திடம் கடன் கேட்பதிலோ அல்லது இந்திய அரசாங்கம் கடன் கொடுப்பதிலோ தவறில்லை. இலங்கை அரசாங்கம் கொடுக்கும் இரண்டாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்டு இந்தியாவுக்குப் போய்விட விரும்புகிறவர்கள் தாராளமாகப் போகட்டும். அவர்களைக் காங்கிரஸ் தடை செய்யாது. ஆனால் 'இலங்கை கொடுக்கும் பணம் வேண்டாம், இலங்கையே எங்கள் தாய்நாடு, இங்கேயே இருப்போ'மென்று சொல்லுகிறவர்களின் நிலைமை என்ன? இதை முதலில் தீர்மானிக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் சலுகைத் திட்டத்துக்கு ஒரு காலவரை ஏற்படுத்தி அந்தக் காலவரைக்குப் பின்னரும் இந்தியாவுக்குப் போகாமல் இலங்கையிலேயே தங்கியிருப்பவர்கள் அனைவருக்கும் இலங்கை அரசாங்கம் பிரஜாவுரிமையளிக்கச் சம்மதிக்க வேண்டும். அப்பொழுதுதான் சலுகைத் திட்டத்துக்கும் அதற்கு இந்தியா உதவி புரிவதற்கும் அர்த்தமுண்டு. சலுகைத் திட்டத்துக்குப் பின்னர் பாக்கியுள்ளவர்களை என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்காமல் சலுகைத் திட்டத்தை அமுல் செய்வதில் பிரயோசனமில்லை. - ரஜனி

'எங்கள் கதிர்காமம்'

சிவ பக்தர்களுடைய திவ்ய க்ஷேத்திரம் கதிர்காமம். அங்கு எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் மீது பாடிய செய்யுள்கள் கொண்ட தொகுப்பே இந்த நூல். போற்றத் தக்க முயற்சி. ஆனால் புத்தகத்தின் பின் அட்டையில் ராஜாஜியின் மதிப்புரையாக வரைந்திருப்பது அவர் எழுதித் தந்தது அல்ல. அவ்வாறு பிரசுரித்திருப்பது சரியல்ல.

[மேற்படி புத்தகத்தின் ஆசிரியர்: திரு சி. சின்னையா, சுதந்திரநாத அச்சகம், திருநெல்வேலி, இலங்கை. விலை: ரூ. 1.]

ஜயஜய சங்கர

தேனருவி போல் திகழ்ந்து வந்த 'ஜயஜய சங்கர' அதற்குள் முடிவடைந்து விட்டதே என மிகத் தாபமாயிருக்கிறது.

கண்களால் கண்டு, செவிகளால் கேட்டு, நாவினால் சுவைத்துப் பருகக் கூடிய செந்தேனை நுகர்ந்து வந்த எங்களைக் கதாசிரியர் இவ்வளவு சீக்கிரம் அதனை இழக்கச் செய்து விடுவாரென்று நினைக்கவில்லை. ஆயினும் அதன் ருசியை நாவுள்ளளவும் அல்லவா தெவிட்டாது இனிக்க வைத்து விட்டார்?

புதுக்கோட்டை
6-9-62
பத்மாமணி

தங்கள் 'கல்கி' இதழ்களில் ஸ்ரீ சங்கரரின் புனிதமான வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டு, எங்கள் உள்ளமெல்லாம் 'ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!' என்ற கோஷம் நிரம்பச் செய்தீர்கள்! ஸ்ரீ சங்கரர் ஆஸ்திகத்துக்கு ஆற்றிய அருள்மயமான தொண்டு நெஞ்சமெல்லாம் உருகச்செய்கிறது.

குளித்தலை
10-9-62
வி. சீனிவாசராவ்

திரு ரா. கணபதி எழுதிய 'ஜய ஜய சங்கர' என்ற ஸ்ரீ ஜகத்குரு ஆதிசங்கர பகவத் பாதரின் புனித சரிதத்தைப் படித்துத் தெவிட்டாத இன்பம் அடைந்தவர்களில் நானும் ஒருவன்.

9-9-62 இதழில் வெளியாகிய முடிவு அதி அற்புதமாக அமைந்து விட்டது. ஆசிரியர் வாசகர்களை ஸ்ரீ காஞ்சி காமாட்சியின் சந்நிதிக்கே ஸ்ரீ சங்கரருடன் அழைத்துச் சென்று ஐக்கியப்படுத்தி விட்டார்.

சென்னை
11-9-62
சிவா. சத்தியநாராயணன்

திரு ரா. கணபதி அவர்கள் இவ்வளவு காலமாக எழுதிய ''ஜய ஜய சங்கர'' 'கல்கி'யின் இலக்கிய ஒளிச்சுடரை மேலும் பிரகாசமடையச் செய்தது. பக்திநெறியின் உண்மையை உலகம் உய்த்துணர்வதற்காக, சாதாரண மானிடனாக உதித்து, காவியுடை அணிந்து, இடர்கள் பலவற்றை இன்முகத்துடன் களைந்து, உயரிய நிலையை அடைந்து, உலகோருக்கு அத்வைத தத்துவத்தை அழகிய சம்ஸ்கிருத சுலோகங்களின் மூலம் உபதேசித்த பரம்பொருளின் பெருமையைச் சிறிதும் சுவை குன்றாமல் எடுத்து விவரித்துள்ளார் ஆசிரியர். மேலும் ஆழங் காணமுடியாத சம்ஸ்கிருத அமுதப் பெருங் கடலின் அருமையை அனுபவித்து மகிழ வாய்ப்புக் கிடைத்துள்ளது, ஆசிரியர் அங்கங்கே எடுத்துரைத்த உவமை நயங்கள் மூலமாக.

புதுதில்லி
6-9-62
நா. ராஜாமணி

திரு ரா. கணபதி அவர்கள் தமது கட்டுரை மூலம் ஸ்ரீ சங்கரரது பெருமையை மட்டும் வெளிப்படுத்தவில்லை; தம்முள் தாமே நிறைந்து, அணுவுக்குள் அணுவாம் பரமாணுவாகப் பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்த, பரிபூரண ஆனந்தத்தைக் கண்ணெதிரே காட்டுகிறார். படிக்கும்போது சிந்தனையைக் கட்டுப்படுத்தி ஒருமுகமாகக் கடவுளின் தியானத்தில் ஆழ்த்துகிறது.

ஒரே ஒரு குறை. படிக்கும் போது மனம் அதில் மூழ்கிக் கண்களில் நீர் ததும்பி மேலே படிக்க முடியாமல் செய்கிறது. நெஞ்சில் நிறைந்து, உடலில் உறைந்து, உயிரில் பிணைந்து நிற்கும் ஒப்பற்ற காவியத்தை இயற்றிய திரு ரா. கணபதிக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

சிந்திரி
8-9-62
மா. கி. தேவராஜன்

-கடந்த இருபது ஆண்டுகளாகக் 'கல்கி' தமிழ் நாட்டுக்குச் செய்து வரும் பணிகளுக்கெல்லாம் சிகரமாக விளங்கும் ஒரு மாபெரும் பணியைச் சமீபத்தில் நிறைவேற்றி, அழியாப் புகழ் அடைந்துவிட்டீர்கள். ஆம், 'ஜய ஜய சங்கர' கட்டுரைத் தொடரைத்தான் குறிப்பிடுகிறேன்.

வாசகரின் சிந்தனையையும், வாழ்க்கையையும் தூய்மையாக்கும் மிகச் சிறந்த செயலைச் செய்து வருவது 'கல்கி' ஒன்றுதான். தமிழர்கள், தம் நாட்டில் 'கல்கி'ப் பத்திரிகை இருக்கிற ஒரே காரணத்துக்காகவே பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

கட்டுரை ஆசிரியர் ஸ்ரீ ரா. கணபதி தித்திக்கும் தேன் தமிழினிடையே வாடாத வடமொழிச் சொற்களை விரவியிருப்பது, வைர மாலையினிடையே ரத்தினத்தை இழைத்தாற் போல் வெகு அழகாக இருக்கிறது.

ஸ்ரீ மணியத்தின் கைவண்ணத்துக்குக் கேட்க வேண்டுமா? ஆதிசங்கரரும் மற்றத் தெய்வங்களும் அவர் தூரிகை வழியே அவதாரம் செய்திருக்கின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

விஜயபுரம்
10-9-62
டி. எஸ். கோதண்டராமன்

ஸ்ரீ ரா. கணபதி 'ஜய ஜய சங்கர' மூலமாக ஆத்மாவுக்கு அழியா இன்ப விருந்தைக் கொடுத்தார். இதனை மற்ற மொழிகளிலும் பெயர்த்து, பாரதத்தில் எல்லோரும் அனுபவிக்கச் செய்ய வேண்டும்.

ஹைதராபாத்
7-9-62
சே. நாராயணன்

ஹர ஹர சங்கர

பல வாரங்கள் பக்தி வெள்ளத்தில் நீந்தி வந்தோம். பல காலம் சங்கருடன் பழகி வந்தது முடிந்து விட்டது போல் துயரம், கனம், ஏக்கம் மனத்தில் பொங்குகிறது. சங்கருடன் நாமும் ஐக்கியமாகி, அவர் கண்ணீர் விடும்பொழுது கண்ணீர் விட்டு, ஆனந்தம், பக்தி முதலியவைகளில் ஈடுபடும் பொழுது நாமும் ஈடுபட்டுக் கண்ணில் நீர் வழிய மெய்யுருகிப் படித்து வந்தோம்.

ஜோலார்ப் பேட்டை
12-9-62
ரா. சகுந்தலா

'கல்கி'யில் வெளிவந்த 'ஜய ஜய சங்கர' பாரத நாடு முழுவதும் பாமர மக்களின் உள்ளங்களில் அத்வைத ஞானத்தைப் பரப்பி ஞான ஒளியை வீசி, மக்களுக்கு நல்வழியைக் காட்டும்.

ஆலங்காயம்
13-9-62
அலமேலு வீரராகவ ஐயர்

அறிவுக் கதிர் வீசும் ஞானவொளியாக மட்டுமின்றி, பக்திப் புனல் ததும்பும் தண் பொய்கையாகவும் விளங்கியது 'ஜய ஜய சங்கர' கட்டுரைத் தொடர். மக்கள் அனைவருக்கும் இம்மையிலும் மறுமையிலும் உய்வு பெற நல்வழி காட்டியருளிய ஆசாரியப் பெருந்தகையாளர் ஆதிசங்கரரின் திவ்விய சரிதத்தை, கதை போல் மெருகேற்றி, கன்னற்கலை கூட்டி, பாங்குடன் படைத்திருக்கிறார். ஆசிரியர் தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஆன்ம மறுமலர்ச்சிக்குச் சிறப்புறச் செய்திருக்கும் அன்புத் திருத் தொண்டு போற்றற்குரியது.

திருப்பதி
11-9-62
அ. நடராஜன்

சுவைக்குதவாத எத்தனையோ தொடர் அம்சங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டு வரும் இந்தக் காலத்தில் 'ஜய ஜய சங்கர' தொடர் அம்சம் மூலமாக ஆஸ்திகத்துக்கும் பாரதப் பண்பாட்டுக்கும் 'கல்கி' செய்த சேவையைப் பாராட்டுகிறேன்.

சென்னை
11-9-62
கே. ஆர். கல்யாணராமன்

அத்வைதத்தைப் புரிந்துகொள்வது மிகவும் சிரமம். பேச்சில் புரிய வைக்கவும், எழுத்தில் புரிய வைக்கவும் மகா வித்வான்களினாலேயே முடியவில்லை. இந்தக் கடின விஷயத்தை யாவருக்கும் புரியும்படியாக எளிய நடையில் தெளிவுபடுத்தியிருக்கிறார் ஸ்ரீ கணபதி அவர்கள்.

கும்பகோணம்
5-9-62
ஏ. கோபாலய்யர்

"ஜய ஜய சங்கர" கட்டுரைத் தொடரில் கைலையின் வர்ணனையில் மனம் லயித்துவிட்டது. அவ்வற்புதக் காட்சியை அகக் கண்களால் கண்டு மெய்சிலிர்த்து நின்றேன்.

காஞ்சி காமாட்சியின் வர்ணனையில் மனம் புனிதமடைந்தது. அம்பாளின் சந்நிதியில் நிற்கும் உணர்வை என்னுள்ளே எழுப்பியது.

பெங்களூர்
12-9-62
சித்ரா

"ஜய ஜய சங்கர" என்னும் அமுதத்தை மிகுந்த ஆத்மானுபவத்துடன் அணு அணுவாகப் பருகும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது. படிக்கப் படிக்கத் தெவிட்டாமல் மனத்தால் மட்டும் உணர்ந்து கொள்ளும் கருத்துக்களைத் தன்னுட் கொண்டு ஆத்ம திருப்தியையும் மனக் குதூகலத்தையும் அளித்து வந்தது இவ்வரிய பொக்கிஷம்.

மேட்டூர் அணை
14-9-62
பங்கஜ

"ஜய ஜய சங்கர" கட்டுரைகள் அரிய கருத்துக்களுடன் எளிய முறையில் பாமரர்களும் புரிந்து கொள்ளும்படியான முறையில் அமைந்திருந்தன. ஓர் அற்புதமான முயற்சி.

வில்லிவாக்கம்
8-9-62
வி. ந. முரளிதரன்

'அனைத்துயிரும் தெய்வம்,
உயிர் அதுவேயாகும்
அமரநிலை இவ்வுலகில்
காண லாகும்!
நினைந்த பொருள் எளிதாகும்'
என்னும் உண்மை
நெறியாக முறையாக
வடித்துக் காட்டி
பனித்துளியில் பரிதியுருக்
காட்டல் போலப்
பைந்தமிழில் 'கல்கி'யிலுன்
தெளியக் காட்டி
வினைத்திட்பம் அறச்செய்த
அறிவின் செல்வர்
கணபதியின் புகழ்மேலும்
மேனி வாழ்க!

காங்கயம்
8-9-62
வெ. சாரங்கராசன்

மாயாந்தகார கூபத்தில் மயங்கி வீழ்ந்து அழுந்தாமல் பவக் கடல் தாண்டும் படிக்கட்டு சங்கரின் அத்வைதம். அப்புண்ணியாத்மாவின் சரிதத்தையும், அத்வைதத்தின் மகிமையையும் உள்ளம் புகுந்து தித்திக்கும் தேன் தமிழில் தீட்டிய திரு ரா. கணபதி அவர்களின் முயற்சியைப் பாராட்டுகிறேன். பச்சை நாத்திகம் தலைவிரித்தாடும் இக்காலியில், இப்பேர்ப்பட்ட புனித சீலர்களின் சரிதைகளை அடிக்கடி வெளியிடுதல் மிகமிக நன்று.

இலங்கை
9-9-62
ச. கைலாய பிள்ளை



டினோபால்தான் ஆடைகளுக்கு அதிவெண்மையை அளிக்கிறதென்பதை புத்திசாலிகளான தாய்மார்கள் நன்கு அறிவார்கள்

எல்லாப் பெண்மணிகளும் அயல்வீட்டுப் பெண்மணிகளைவிட நன்றாக உடையணிய விரும்புகிறார்கள். வெள்ளை ஆடைகளுக்கு டினோபால்தான் பளபளக்கும் வெண்மையையும், அதிவெண்மையையும் அளிக்கிறது என்பதைப் புத்திசாலியான பெண்மணி அறிவாள்.

டினோபால் மிகவும் சிக்கனமானதுங்கூட. பொதுவாக கால் தேக்கரண்டி அளவு, சாதாரண ஒரு குடும்பத்தின் ஒரு நாளைய சலவை செய்த துணிகளை வெண்மையாக்கப் போதுமானது. டினோபாலின் வெண்மையாக்கும் தன்மை 3—4 சலவைகளுக்கு நீடித்து நிற்கக்கூடியது.

ஞாபகமிருக்கட்டும்—

ஒரு சிறிதளவு

டினோபால்

வெள்ளைத் துணிகளை மிக வெண்மையாக்கப் போதுமானது.

டினோபால் என்ற வார்த்தை ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸ். ஸ்விட்ஸர்லாந்து என்பவர்களுடைய ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.

தயாரிப்பாளர்கள் :

கனாக்கண்டேன் தோழி..!

தி. சா. ராஜு

உதகமண்டலத்தில் ஒரு கலியாணம். அதற்கு நான் போகவில்லை!

போகவில்லை என்று சொன்னேன்? போக இயலவில்லை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். திருமணத்துக்கு நான் போக வேண்டியே இருந்தது. எனது ஆதி நாளையப் பள்ளித் தோழர் வில்லியம்ஸ் என்னை ஊட்டிக்கு அழைத்துச் செல்லும் பொருட்டுத் திருச்சிக்கே காருடன் வந்திருந்தார். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு என்னை நேரில் காண நேர்ந்ததில் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி.

அவருக்கு மட்டும் என்ன? எனக்கும் தான். காவேரிப் படுகையையொட்டி அமைந்த தார்ச் சாலையில் நெல், வாழைத் தோட்டங்களிடையே சிலு சிலுவென்று எதிர்க்காற்று முகத்தில் வீசக் காரில் செல்லுவது இனிய அனுபவமாக இருந்தது. இளமைப் பருவத்து நினைவுகள் யாவும் கற்கண்டுக் கட்டிகளாக அடிநாவில் இனித்தன.

சிரம பரிகாரம் செய்து கொள்ளும் பொருட்டு அவர் தமது வண்டியைக் குளித்தலையில் நிறுத்தினர். பேருந்து நிலையத்துக்கு அருகில் 'சுப்புராமையர் காப்பி கிளப்' என்ற நீண்ட கரும் பச்சைப் பலகையைக் கவனித்தேன்.

"சுப்புராமையரை நினைவில் இருக்கிறதா ராஜூ?" நண்பர் வினவினர்.

"அவரை மறக்கமுடியுமா வில்லியம்ஸ்?" என்றேன்.

"இந்த ஊரிலேயே அவர் தற்போது பெரிய புள்ளி. நான்கு ஹோட்டல்கள், இரண்டு சினிமாக் கொட்டகைகள், எட்டு லாரிகள், மூன்று பங்களாக்கள். என்றாலும் அந்த மனிதர் மாறவில்லை. அதே எளிய உடை, இனிய சொல், புன்சிரிப்பு, குழந்தைத் தன்மை. இவ்வளவு சொத்து சேர்த்து விட்டாரே. இன்றைக்கும் கையில் மூக்குப்பொடிக் கூட்டை எடுத்துக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல அவர் தயார்!"

அந்த நாளில் சுப்புராமையர் மூக்குப் பொடி குளித்தலை ஸ்டேஷனில் பெயர் பெற்ற அம்சம். ஒவ்வொரு ரயிலுக்கும் புதிதாகச் சரக்குப் போட்டுக் கொண்டு வருவார். வலது கையில் பளபளக்கும் பித்தளைத் தட்டு. அதன் மேல் மணி வடிவ வலைக் கூண்டு. இடது கையில் காப்பிக் கெட்டில். முதல் பெட்டியில் இருந்து கார்டு வான் வரையில் போவதற்குள் தட்டு காலியாகி விடும். பள்ளிப் பிள்ளைகளிலிருந்து முதல் வகுப்பில் செல்லும் வக்கீல் முதலியார் உள்பட அனைவரும் அவருடைய வாடிக்கைக்காரர்கள். சுப்புராமையர் செய்த மூக்குப் பொடியைச் சாப்பிடுவதற்காகவே மாலை வேளைகளில் குளித்தலை ஸ்டேஷனில் கூட்டம் கூடும்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு நாளின் அந்தப் பழைய கனவை தலை நீட்டவே, 'அவர் இங்கேதான் இருக்கிறாரா?' என்று நண்பரிடம் வினவினேன். அவர் காரைத் திருப்பிப் பெரிய கடைத் தெரு வக்கே ஓட்டத் தொடங்கி விட்டார். குளித்தலை நகரத்துக்குள் எவ்வளவோ மாறுதல்கள். ஆனால் மனிதர்களின் முக பாவத்தில் எந்த மாறுதலையும் காண இயலவில்லை.

என்னைக் கண்டதும் சுப்புராமையர் முறுவலித்தார். 'வா, ராப்...' என்று



வாயெடுத்து விட்டு உதடுகளைக் கடித்துக் கொண்டார். அவருடைய முகத்தில் ஒரு கண நேரத்துக்கு இருள் திரை படர்ந்து விலகியது.

"இப்போதுதான் வருகிறாயா? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"அதே பழைய வேலைதான், படையினர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது!"

"வசதியாக இருக்கிறாயல்லவா? சந்தோஷம் தான்!"

கடையை ஒரு நோட்டம் விட்டேன். சரக்கு மாஸ்டர் அறையை அடுத்த திண்ணையும் தேக்கு மரத் தூணும்

என்னைப் பற்றி ....

என்னிடத்தில் ஏதும் விசேஷமான தெய்வத் தன்மை இருப்பதாக நான் உரிமை கொண்டாடவில்லை. முக்காலமும் உணரும் திர்க்கதரிசனம் எனக்கு இருப்பதாகவும் கூறவில்லை. சத்தியத்தைத் தேடிச் செல்லும் ஓர் எளிய மாணவனே நான். சத்தியத்தைக் கண்டேயாக வேண்டும் என்று முனைந்திருப்பவனே நான். சத்தியம் என்ற ஆண்டவனை நேருக்குநேராகத் தரிசனம் செய்வதற்காகப் புரியும் எந்தத் தியாகமும் ஒரு பொருட்டல்ல என்று நான் கருதுகிறேன். சமூகம், அரசியல், ஜீவகாருண்யம், நன்னெறி — ஆகிய எந்தத் துறையில் நான் செயலாற்றுவதாகக் கருதினாலும் சரி என்னுடைய சகலமான காரியங்களையும் அந்தத் தரிசனத்தை இலட்சியமாகக் கொண்டே நடத்தி வருகிறேன். — காந்தியடிகள்

கண்ணில் பட்டன. அந்தத் தூணடி தான் என் பழைய ஆசனம். என்னை அறியாமலேயே அங்கு போய் உட்கார்ந்து கொண்டேன். 'உப்'பென்று விம்பிய இரண்டு பூரி. ஒரு மூலையில் உருளைக்கிழங்குக் கறி, கொஞ்சம் கெட்டிச் சட்னி. கறியிலிருக்கும் வறுத்த கடலைப் பருப்பின் மணத்துக்கு இந்த உலகிலேயே ஈடு கிடையாது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அதே இடத்தில் அதே சுவையுள்ள பண்டத்தைக் குப்புராமையரே கொண்டு வரவும் என் கண்கள் கலங்கின. எதிர்ப்புறத்து ஆளோடியைக் கவனித்தேன். அங்கு தான் அவருடைய மகள் சகுந்தலா, தாவணியின் நுனியை முறுக்கியவாறு நின்று கொண்டிருப்பாள்.

''மாப்பிள்ளைக்கு என்ன வேண்டும் என்று கேட்டுப் போடடி, பெண்ணே!'' குப்புராமையர் கண்ணைச் சிமிட்டியவாறு கூறுவார். குறுநகை புரிந்தவாறு அவள் வீட்டுக்குள் ஓடி விடுவாள். அவர் ஹோட்டலின் பின்பகுதியிலேயே குடியிருந்தார். நான் புறப்படுவதற்குச் சற்று முன்பு அவள் ஒரு பொட்டலத்துடன் திரும்ப வருவாள். அதில் வறுத்த அவல் கறிவடாம் இருக்கும். அதை ரயிலில் சுவைத்துத் தின்றவாறே போவேன்.

'சக்கு சௌக்கியமா மாமா?''

''இருக்கிறாள், இருக்கிறாள்!''...வாயிலிருந்த வெற்றிலையைத் துப்புவதற்காக வாஷ்பேஸினண்டை சென்றார் குப்புராமையர். நண்பர் வில்லியம்ஸ் என் கையைப் பிடித்து அமுக்கினார். 'பேசாமல் இரு' என்று அந்தச் சமிக்ஞைக்குப் பொருள். குப்புராமையர் கல்லாப் பெட்டியினருகில் போய் நின்று துளிர் வெற்றிலையாகப் பொறுக்கினார். நான் அந்தப் பழைய தேன் நினைவுகளிலேயே மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்தேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் அந்த ஊர்ப் பள்ளி மாணவன். தினமும் மத்தியானச் சாப்பாட்டு வேளையில் அவருடைய சிற்றுண்டிக் கடைக்கு வருவேன். வீட்டிலிருந்து நான் கொண்டு வரும் தயிர் சாதத்துக்குத் துணையாக அவர் பக்கோடாத் தூளைப் போட்டு வெங்காய சாம்பாரையும் ஊற்றுவார். பள்ளி முடிந்து ரயிலில் வீடு திரும்பும்போது இருள் சேர்ந்து விடுமாகையால் எனக்குத் தினமும் வீட்டிலிருந்து ஓரணா 'பக்ஷீஷ்' உண்டு.

ஓரணா என்பது அந்த நாளில் மிகப் பெரிய செல்வம். பல ஓட்டல்களில், அந்தத் தொகைக்கு அரைச் சாப்பாடு கூடப் போடுவார்கள். நான் தினமும் பூரியும் காப்பியும் சாப்பிடுவேன். மாலையில் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் 'வா மாப்பிள்ளை' என்று குப்புராமையர் அன்புடன் வரவேற்பார். பக்குவமாக உப்பி வெந்த பூரியைத் தம் கையினாலேயே எனக்குப் படைப்பார்.

குப்புராமையர் தாரமிழந்தவர். ஒரே மகள்தான். அவளும் தந்தையைப் போல் சிவந்து மெலிந்திருப்பாள். கருவண்டுக் கண்கள். நீண்ட தலைப் பின்னல். நிலாப்பிறை நுதலில் கருஞ்சாந்து மறு.

பள்ளிக்கூடம் முடிந்து ரயிலில் ஏறும் வரையில் நான் அவளுடன் விளையாடிக் கொண்டிருப்பேன். அவளைச் சீண்டி வம்புக்கு இழுப்பதில் எனக்குத் தனி ஆனந்தம். கடைசியில் குப்புராமையருக்குத் துணையாகக் கல்லாப்பெட்டியைக் கவனிப்பேன். ஹோட்டலுக்கு வரும் பெரிய புள்ளிகளை வரவேற்றுப் பேசக் கொடுப்பேன். எனக்குப் பழக்கமான சில பேர்களும் என்னைக் குப்புராமையரின் மாப்பிள்ளை என்றே அழைக்கத் தொடங்கினார்கள். அப்போதெல்லாம் சகுந்தலாவின் செழுங் கன்னங்கள் இரத்தச் சிவப்பாகி விடும். அவள் உள்ளே ஓடி விடுவாள்.

அப்போது நான் பள்ளி இறுதி வகுப்பு மாணவன். தேர்வு சமயம். மறுநாள் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும். கையில் பதினைந்து ரூபாய் பணத்துடன் ரயிலை விட்டு இறங்கி நடந்து கொண்டிருந்தேன். போல்கோட்டை அடுத்துச் சினிமாக் கொட்டகைக்கு அருகில் ஒரு சிறு கூட்டம் குழுமியிருந்தது. நானும் வேடிக்கை பார்க்கப் போனேன்.

கிருதா மீசையுடன் பட்டு முண்டாசு கட்டிய ஆள் ஒருவன் ஓலைத் தடுக்கின்

அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவனுடைய இடது கையில் ஒரு நீளமான விளக்கு நாடா, வலது கையில் குண்டூசி. நாடாவை இடது கை ஆள் காட்டி விரலில் சுற்றிப் பெரு வளையமாக்கித் தடுக்கின் மேல் வைப்பான். அந்தக் குண்டூசியின் வளையத்தின் மையப் புள்ளியில் குத்துகிறவர்களுக்குப் பரிசு வழங்கிக் கொண்டிருந்தான். பல பேர்கள் மையப் புள்ளியில் ஊசியைச் செலுத்தி நான்கு மடங்குத் தொகையைத் தட்டிக் கொண்டு போனார்கள். என் நாவில் நீர் ஊறியது. நாலணாவை அவன் முன்பு வைத்தேன்.

முதல் ஆட்டத்திலேயே வெற்றி. முழு வெள்ளிப் பணம். மறுபடியும் மறுபடியும் வெற்றி. என் சட்டைப் பை கனக்கத் தொடங்கியது. முண்டாசுக் காரன் என்னைப் பரிதாபமாகப் பார்க்கத் தொடங்கினான். என்னுடைய உற்சாகம் ஜுர வேகத்தில் ஏறிற்று. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. நான் தொடர்ந்து விளையாடிக் கொண்டிருந்தேன். ஒரு தடவை குண்டூசியைப் புள்ளியில் பொருத்தப் போகும் தருணத்தில் வலுவான கரம் ஒன்று என் கையைப் பிடித்தது.

நிமிர்ந்து நோக்கினேன். இடது கையில் பலகாரத் தட்டுடன் குப்புராமையர் நின்று கொண்டிருந்தார். 'ஆடியது போதும் மாப்பிள்ளை, எழுந்து வா' என்று அவர் சற்றுக் கடுமையான குரலில் கூறினார். மனமில்லாமலேயே எழுந்திருந்தேன். முண்டாசுக்காரனின் இடது கையில் விளக்கு நாடா பாம்பாய் நெளிந்து சுருண்டது. அவசர அவசரமாகப் பள்ளிக்கூடத்துக்கு ஓடினேன்.

இடை வேளையில் பையிலிருந்த தொகையை எண்ணிப் பார்த்தேன். சூதாடியின் குண்டூசி நெஞ்சில் நுழைந்தாற் போலிருந்தது. தொகையில் பத்து ரூபாய் குறைந்து விட்டது. அதை எப்படிச் சரிக்கட்டுவது என்ற யோசனையில் குழம்பி விட்டேன். அன்று பகல் ஓட்டலுக்குப் போகவில்லை. வெட்கமும் கழிவிரக்கமும் என்னைப் பிடுங்கித் தின்றன.

மாலையில் ஓட்டலைத் தாண்டியதும் யாரோ என்னைக் கைதட்டி அழைத்தார்கள். திரும்பினேன். "என்ன மாப்பிள்ளை! கோபமா?" குப்புராமையர் நின்று கொண்டிருந்தார்.

வழக்கமான இடத்தில் என்னை உட்கார வைத்துச் சிற்றுண்டி பரிமாறினார். பூரி வாய்க்கு மெதுவாக இருந்தது..என் சட்டைப் பையில் கைவிட்டுச் சில்லறையை யெல்லாம் எடுத்து எண்ணினார்.

"நாளைக்கு சலக்ஷணமே, தேறி விடுவாயா மாப்பிள்ளை?'

நான் மௌனமாகத் தலையை அசைத்தேன். அவருடைய கல்லாப் பெட்டியிலிருந்து ஒரு பத்தும், ஐந்தும் என் ஜேபியில் இடம் பெற்றன.

ஆளோடியில் தாவணி தோன்றி மறைந்தது. சகுந்தலாவை நான் அதற்குப் பிறகு பார்க்கவே இல்லை.

சகுந்தலாவை மட்டும் என்ன? அந்த ஊரிலேயே நான் யாரையும் மறுபடியும் பார்க்கவில்லை. மறுநாள் செலக்ஷனில் தேர்ச்சி பெறவில்லை என்பது தெரிந்தது. குப்புராமையர் கொடுத்த தொகைக்கு வேறு செலவு காத்திருந்தது. அதை எடுத்துக் கொண்டு பெங்களூருக்குப் போனேன். அப்போதெல்லாம் அங்கே படைக்கு ஆள் சேர்க்கும் மும்முரம்.

"சக்குவைப் பார்ப்போமா?" குப்புராமையர் என்னை நடைமுறை உலகத்துக்கு அழைத்து வந்தார்.

அவர் 'மாப்பிள்ளை, மாப்பிள்ளை,' என்று வாய்க்கு வாய் அழைத்ததைக் கொண்டு நான் மனத்தில் என்னவெல்லாம் கற்பனை செய்திருந்தேன்! அழகிய பங்களா! விசாலமான அறை. பிரம்பாலான நாற்காலிகள்; மெப்பாய்கள். நான் காரியாலயத்திலிருந்து வந்ததும் சக்கு காப்பி கொண்டு வந்து வைக்கும் காட்சி! என் மனக்கண் எத்தனை அழகாகக் கற்பனை செய்து வைத்திருந்தது! ஆனால்...

மூலையில் ஒரு பளிங்கு மேஜை. அதன் மேல் மூன்று புகைப்படப் பிரேம்கள் இருந்தன. முதலாவது என்னுடைய புகைப்படம். நான் முதன் முதலாக இராணுவ உடையில் எடுத்துக் கொண்டது. நான் வேலையில் சேர்ந்து முதல் சம்பளம் வாங்கியதும் குப்புராமையருக்குப் பத்து ரூபாய்க் கடனைத் திருப்பியிருந்தேன். இரண்டாவது சட்டத்துக்குள் அந்தப் பத்து ரூபாய்த்தான் விளங்கிற்று. மூன்றாவதனுள் நான் 1941-ம் ஆண்டு டெஹ்ராவிலிருந்து குப்புராமையருக்கு எழுதிய ஒரே கடிதம். அதன் கீழ் லாரன்ஸ் கந்தர்ராஜ் என்று கையெழுத்திட்டிருந்தேன். — லாரன்ஸ் என்ற பெயரின்கீழ் சிவப்பு மசியினால் அடையாளமிடப்பட்டிருந்தது.

"சக்கு, சக்கு!" குப்புராமையர் களிவுடன் அழைத்தார்.

"வந்தேன் அப்பா!" பக்கத்து அறையிலிருந்து ஒரு மெலிந்த உருவம் வெளிப்பட்டது. பழுப்பு நிறச்சேலை, தலை வாரப்படாமல் கலைந்து கிடந்தது. கண்களில் மாத்திரம் ஒரு பளபளப்பு. கழுத்தில் ஒரே ஒரு மஞ்சள் கயிறு. இரு வளையல்கள். என் நெஞ்சிலே யாரோ தீ வைத்தார்கள்.

"யார் தெரிகிறதா?"

அவள் என்னை உற்றுப் பார்த்தாள். என் கண் முன்பு ஒளி வளையங்கள் சுழன்றன. சுழன்று சுழன்று என்னிடமிருந்த ஆண்மை வலிமை யெல்லாம் சுழன்று எல்லையிலாப் பெருவெளியில் கலந்தது.

"தெரியலையே?" என்றாள் சகுந்தலா.

"மாப்" — வாயெடுத்தவர் திருத்திக் கொண்டார். "நம்ப ராஜா சக்கு, நினைவில்லை?"

அவளுடைய முகத்தில் நாணம் படர்ந்தது.


"நீங்க பொய் சொல்றேள் அப்பா, நம்ப ராஜா ஒரு ஜெனரல்; பிரிகேடியர். இப்படி நரைத்த தலையும் ஒட்டிய கன்னமுமாகவா இருப்பார்? அதோ அந்தப் படத்தைப் பாருங்கள்." அவள் மேஜையைச் சுட்டிக் காட்டினாள்.

திடீரென்று சகுந்தலா தரையில் உட்கார்ந்து கொண்டாள். கணீரென்ற குரலில் பாடினாள்:

" கைத்தலம் பற்றக் கனாக்
கண்டேன் தோழீ — நான்"...

நான் குப்புராமையரைப் பார்க்கத் திரும்பினேன். அவர் மௌனமாக அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். அவருடைய வேஷ்டியின் நுனி முகத்தருகே சென்று திரும்பியது.

உதகமண்டலத்தில் கல்யாணம்; அதற்கு நான் போகவில்லை. ஏன்? குளித்தலையைத் தாண்டியே என்னால் போக முடியவில்லையே!



39. பொழுது புலர்ந்தது

'திரு திரு' என்று விழித்துக் கொண்டே சிங்கம்புத்தூர் மாளிகைக் குள்ளே நுழைந்தார் வல்லாளவேலர்.

இரகசியங்கள் எல்லாம் அம்பலமாகி விட்டனவோ என்ற கலவரம்! தம் முடைய மனைவிக்கு எல்லா விஷயங் களும் தெரிந்துபோய் விட்டனவோ என்ற பதற்றம்! ஜமீந்தார் என்ன நிலைமையில் இருக்கிறாரோ என்ற கலக்கம்! இத்தனை உணர்ச்சிச் சுழிப்பு களும் சேர்ந்து உள்ளத்தை இழுத் துப் பறித்துக் கொண்டிருந்தன!

'ஆடு திருடிய கள்ளன்' என்று சொல்லுவார்களே அப்படியாகப் பரக் கப் பரக்க விழித்துக் கொண்டே, ஜமீந்தாரின் அறைக்குள்ளே புகுந்தார் வல்லாள வேலர்! ஆனால் என்ன ஆச் சரியம்! இவரைக் கண்டதும் ஜமீந்தார் எவ்விதமான பதற்றமும் கொள்ளாமல் அமைதியாகப் பேசலானார்:

''வல்லாளா! நீ இல்லாமல் இங்கே என்ன வேலை நடக்கும்? உள்ளே போய் என்னென்ன வேண்டும், முக்கியமாகச் செய்ய வேண்டிய எடுபிடி வேலைகள் என்ன என்று கேட்டுக் கொண்டு வா. அதற்குள் நான் ஒரு காகிதத்தில் குறிப் புப் போடுகிறேன். அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டு அதிலுள்ள காரி யங்களை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கவனி. குறிப்புப் போடா விட்டால் மறந்து போய்விடும்!''

இவ்வாறு சொல்லி வல்லாளவேலரை அரண்மனைக்குள்ளே அனுப்பினார் ஜமீந்தார்.

மாளிகைக்குள்ளே புகும் போது மறுபடி ஒருமுறை ஜமீந்தாரின் முகத் தைப் பார்த்தார் வல்லாளவேலர்: கோபமோ கசப்போ எதுவும் அந்த முகத்தில் தெரியவில்லை. ஆனாலும் வல்லாள வேலருக்கு அச்சம் அதிகரித்தது!

ஒன்று, ஜமீந்தாருக்கு மற்றச் செய்திகள் எதுவும் தெரிந்திராமல் இருக்க வேண்டும்; அல்லது எல்லாச் செய்திகளும் ஒன்று விடாமல் தெரிந்

நந்தவனம்

சோமு

இருக்க வேண்டும். இந்த இரண்டில் ஒன்று நிச்சயம். இந்த இரண்டில் ஏதுவானாலும் ஜமீந்தார் இப்படித் தான் முகத்தை வைத்துக் கொண் டிருப்பார். எல்லை மீறிய கோபம், அல்லது எல்லை மீறிய அமைதி. இரண் டிலும், அனவரத புவனபதி முகத்தில் உணர்ச்சியின்றி உட்கார்ந்திருப்பார்! எரிமலை வெடிப்பதற்கு என்ன நேரம் என்று சொல்ல முடியாது என்பது வல்லாளவேலருக்குத்தெரியும்! குழம்பிக் கொண்டே ஜமீந்தாரிணி படுத்திருந்த அறைக்குப் போனார் வல்லாளவேலர்!

அங்கே போனால் ஜமீந்தாரிணிக்கு அருகில் வல்லாளவேலரின் மனைவி உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண் டிருந்தாள். கணவரைக் கண்டதும் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித் தது. எல்லாம் அவளுடைய மோனமான பார்வையிலேதான்! வார்த்தை எதுவும் இல்லை! கண்களால் கணவரை எரித் துக் கொண்டே மற்றவர்களுக்காக, ஒப்பனைக்காக, எழுந்திருந்து மரியாதை செலுத்தினாள். ஜமீந்தாரிணி கலியாண வேலைகளை ஒவ்வொன்றாக வல்லாள வேலரிடம் சொல்ல ஆரம்பிக்கவே, அந்த அறையிலிருந்து உள்ளே சென்று மறைந்தாள் வல்லாளரின் மனைவி! நாடக மேடையிலே பாத்திரங்கள் திரைக்குப் பின்னால் மறைவது போல் மனைவி 'சட்'டென்று அப்படி மறைந்த திலிருந்து, அவளுடைய கோப நிலை இன்னும் நன்றாகப் புரிந்தது வல்லாள வேலருக்கு!

சிங்கம்புத்தூர் மாளிகையிலே இதன் பிறகு திருமண வேலைகள் மிகமிகத் துரித மாக நடக்க ஆரம்பித்தன. வேலை யின் துரிதமும் மற்றவர்களின் கெடுபிடியும் சேர்ந்து வல்லாள வேலருக்குச் சாவி கொடுத்து முடுக்கின! உட்கார்ந்து யோசித் துக் குழம்புவதற்கு நேரம் இல் லாத நிலையில், வல்லாளவேலர் இயந்திரமாகச் சுழன்று கொண் டிருந்தார். என்றாலும் அவ்வப்போது மாளிகைக்குள்ளே போய் வரும்போது பல பேருக்கு மத்தி யில் மனைவியின் நடமாட்டமும் கண்ணிலே தெரி யும். அப்போதெல்லாம் வல்லாளவேலர் என்ற மனித இயந்திரத்துக்கு 'ஷாக்' அடிக்கும்! சில சமயங்களில் பெண் களின் கூட்டத்தை ஒதுக்கிக் கொண்டு இவர் உக்கிராணப் பிறை அல்லது பட் டகசாலைப் பக்கமாகப் போகும்போது மனைவி எதிர்ப்பட்டு விட்டாலோ சொல்லவே வேண்டாம்! உடம்பெல் லாம் ஒரு தடவை வியர்த்து விடும் வல்லாள வேலருக்கு!

நாலைந்து நாள் இப்படி ஒரே 'கப்சிப்' நடமாட்டமாக இருந்தது. ஜமீந்தாரோ அல்லது மாளிகைச் சிப்பந்திகளோ யாரும் எதுவும் வல்லாளவேலரிடம் சொல்லவில்லை. இந்த மௌனம் அவ ரைப் பைத்தியமாக அடித்துக் கொண் டிருந்தது! இந்தக் குழறுபடிகளுக்கு மத்தியிலேதான் முகூர்த்தத்தின்போது யாரோ ஒரு புகைப்பட ஆசாமி வல்லாள வேலரை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் அசையவிடாமல் மடக்கி மடக்கி வளைத்துப் புகைப்படங்களாக எடுத்துத் தள்ளிக் கொண்டிருந்தான்! இவருடைய முகத்தின் கலவரம், 'திரு திரு' என்ற பார்வை, உடம்பிலே அடிக்கிற ஷாக் — அதிர்ச்சி, உள்ளத் திலே சுற்றுகிற கேள்விச் சக்கரம், உணர்ச்சியிலே பின்னி ஓடிய ஆயிரம் ஆயிரம் தாபங்கள், அத்தனையும் 'கிளிக்' 'கிளிக்' என்று புகைப்படக் கருவிக் குள்ளே போய் விழுந்து கொண்டிருந் தன! அவரையும் மீறி, அவருடைய ஆட்சியையும் தாண்டி, அவ்வாறு விழுந்து கொண்டிருந்தன!

சிங்கம்புத்தூர் நிலைமை இது! வட்டப்பாறையிலோ என்றும்?

விடியற்காலை நான்கு மணி யிருக்கும். தூங்கிக் கொண் டிருந்த விஸ்வநாதனை அவசரமாக எழுப்பினான் வேணுலிங்கம்.



"தம்பி! பொழுது புலர்ந்தது. பொற் கோழி கூவிற்று!" என்று பூபாள ராகத் திலே பாடினான் வேணு.

தனி நபர் சுதந்திரம்

தனி மனிதன் முக்கியத்துவம் பெறாத சமூகத்தில் என்ன இருக்கிறது? தனி நபர் சுதந்திரம் இருந்தால் மட்டுமே தான் ஒருவன் சுய விருப்பத்தோடு தன்னைப் பரிபூரணமாகச் சமூக சேவைக்கு அர்ப்பணித்துக் கொள்ள முடியும். அந்தச் சுதந்திரத்தைக் கவர்ந்துவிட்டால் அதன்பின் அவன் வெறும் இயந்திரமாகி விடுகிறான். அதோடு சமூகமும் அழிந்து போய் விடுகிறது. தனி நபர் சுதந்திரங்களை மறுத்து ஒரு சமுதாயத்தை உருவாக்குவது இயலாத காரியமாகும்.

— காந்தியடிகள்

கண்களைத் துடைத்துக் கொண்டே எழுந்த வில்வநாதனுக்கு அந்தக் கலவரத்துக்கு மத்தியிலும் வேணுவின் குரலும், ஸ்வர சுத்தமான உதயராகமும் உள்ளத்தைக் கவர்ந்தன.

''அடாடா! எப்படிப் பாடுகிறீர்கள் நீங்கள். என்ன குரல்! என்ன குரல்!'' என்றான் வில்வநாதன்.

''தம்பி! ஆண் குரலை வியந்தது போதும்! இனிமேல் பெண் குரலை வியந்து பாராட்ட வேண்டும் நீங்கள். எழுந்திருங்கள்!'' என்று சொல்லிச் சிரித்தான் வேணு.

''வெந்நீர் தயாராக இருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே அங்கு வந்து நின்றான் கடலையாண்டி.

''வெந்நீரா?'' என்று திகைப்போடு கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம்! எழுந்ததும் இந்தக் குளிரிலே எப்படிப் பச்சைத் தண்ணீரிலே குளிப்பது! அதற்காக நம்முடைய மாப்பிள்ளை வெந்நீர் போட்டு வைத்து விட்டான். குளித்து விட்டு வாருங்கள். கோடி வேட்டி தயாராக இருக்கிறது!'' என்றான் வேணு.

''கோடி வேட்டியா? யாருக்கு?'' – திகைப்போடு கேட்டான் வில்வநாதன்.

''கோடி வேட்டி யாருக்கு? மாப்பிள்ளைக்கு. மாப்பிள்ளை என்றால் கடலையாண்டியைச் சொல்லவில்லை. அவன் பழைய மாப்பிள்ளை! இந்தக் கோடி வேட்டி புது மாப்பிள்ளைக்கு!'' என்றான் வேணுலிங்கம்!

வில்வநாதன் மேலும் திகைப்பும் ஆவலும் மேலிட்டவனாக, ஏதோ கேட்க ஆரம்பிக்கவே வேணு குறுக்கிட்டான்:

''தம்பி! இன்னும் கொஞ்ச நேரத்துக்கு எந்தவிதமான கேள்வியும் கேட்காதீர்கள். நாங்கள் சொல்வதையெல்லாம் 'டக்டக்' என்று செய்து முடியுங்கள். முகூர்த்த நேரம் தப்பிவிடக் கூடாது!'' என்று சொல்லிக்கொண்டே, கடலையாண்டியைப் பார்த்து ''மாப்பிளே! காகிதமும் பென்சிலும் தயாரா?'' என்றான் வேணுலிங்கம்.

''ரெடி!'' என்றான் கடலையாண்டி.

''தம்பி! இந்தக் காகிதத்தில், இரண்டே வரி. இந்தக் கடிதம் கொண்டு வரும் வேலைக்காரி குப்பம்மையோடு புறப்பட்டு மலையடிவாரத்துக்கு வந்து சேரவும்—என்று எழுதிக் கையெழுத்துப் போடுங்கள்!'' என்றான் வேணு.

வில்வநாதன் மறுபடியும் கண் இமைகளை நன்றாக விரித்துப் பார்ப்பதற்குள் கடலையாண்டி அவசரப்படுத்தினான்.

''சிங்கம்புத்தூரிலே எந்த நேரத்துக்கு முகூர்த்தமோ, அதே நேரத்திலே நந்தவனத்திலேயும் முகூர்த்தம்!'' என்றான் வேணுலிங்கம்.

ஆம்: சிங்கம்புத்தூரில் தாமரைச் செல்விக்கும் பொன்னுத்துரைக்கும்—திருமண வேள்வி நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் நந்தவனத்திலே செண்பகநாயகி சந்நிதியிலே செண்பக சுந்தரியின் கழுத்திலே மூன்று முடிபோட்டான் வில்வநாதன்!

சிங்கம்புத்தூரிலே மேளங்கள் ஒலித்தன. பெண்கள் குரவையிட்டார்கள். நந்தவனத்திலே மௌனமாக ஊதுவத்திகள் நறுமணம் பரப்பின. பறவைகள் கீதம் இசைத்தன. சிங்கம்புத்தூரிலே ஆயிரம் ஆயிரம் மனிதர்கள் கூடித் திரண்டு வாழ்த்தினார்கள். நந்தவனத்திலே மனித நடமாட்டமே இல்லாத சூழலிலே வேணுவும் கடலையாண்டியும் ஆயிரம் ஆயிரம் இதயங்களின் வலிமையோடு மௌனமாக வாழ்த்தினார்கள்!

''தம்பி! இங்கே வரைய வேண்டிய கடைசிச் சித்திரம் ஒன்று மட்டும் பாக்கி இருக்கிறது. அதை வரைவதற்கு நாளை நீங்கள் இங்கே வர வேண்டியிருக்கும். இப்போது தம்பதி சமேதராக இங்கிருந்து புறப்பட்டு மலையடிவாரத்திலே தயாராகக் காத்து நிற்கிற வில்வண்டியிலே ஏறிக் கிருகப் பிரவேசத்திற்குச் செல்ல வேண்டும்!'' என்றான் வேணு!

வில்வநாதன் சிரித்தான். சுந்தரியும் சிரித்தாள். கடலையாண்டியும் வேணுவும் இருமருங்கிலும் கட்டியம் சொல்லிவர, புதுமணத் தம்பதிகள் மலையடிவாரத்துக்கு வந்து வண்டி ஏறினார்கள்.

'கிருகப் பிரவேசம் என்று சொல்லுகிறீரே! வீடும் மனையும் எல்லாம்விட்டு விட்டு ஓடி வந்துள்ள இந்தப் பெண்ணும், வீடோ மனையோ எதுவும் இல்லாத நானும் எந்தக் கிருகத்திலே பிரவேசிக்கப் போகிறோம்!'' என்று

யோசித்துக் கொண்டே வில்வநாதன் சுந்தரியைப் பார்த்தான். சுந்தரி வில்வநாதனைப் பார்த்தாள். அந்தப் பார்வையிலே, யோசனைகள் எல்லாம் பறந்து, இருவர் முகத்திலும் எல்லையற்ற உவகை பொங்கியது!

'எந்தக் கிருகமாக இருந்தால் என்ன? இவள் என்னோடு எங்கு இருக்கிறாளோ அதுதான் கிருகம். அதைவிட இன்பமான கிருகம் வேறு ஏது?'

இவ்வாறு எண்ணினான் வில்வநாதன். வில் வண்டி 'ஜல் ஜல்' என்று புறப்பட்டது.

வெட்டப்பாறையை யடுத்த சோலையிலே யிருந்த வன வீடு தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு ஒரே மங்கள எழிலோடு காட்சி தந்தது. வாசலிலே பெரிய பெரிய கோலங்கள் போடப்பட்டிருந்தன. உள்ளே குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியே ஐம்பது அறுபது மனிதர்கள் நின்று வில் வண்டியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்! எல்லாருடைய முகத்திலும் இதய பூர்வமான மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

வண்டி வந்து நின்றதும், 'கோச்'சுப் பெட்டியிலிருந்து கடலையாண்டி கீழே குதித்தான். அடுத்த விநாடி வில்வநாதனும் செண்பக சுந்தரியும் வண்டியில் இருந்து கீழே இறங்கினார்கள். மறுகணம் இன்னொரு பெரிய வண்டியிலேயிருந்து வேணுலிங்கமும் இரண்டு மூன்று சகாக்களும் இறங்கினார்கள்.

வீட்டுக்குள்ளிருந்து பெரிய ரோஜாப் பூமாலைகளை ஏந்திக் கொண்டு ஓடி வந்தான் ஒரு முரட்டுச் சிப்பந்தி. வேணுலிங்கம் விரைவாக நடந்து வந்து மாலைகளை வாங்கிக் கொண்டான்.

வில்வநாதனுடைய கழுத்தில் மாலையைப் போடும் போது, வேணுலிங்கத்தின் முகத்தில் ஒரு தந்தையின் குதூகலம் பொங்கித் ததும்பியது. அடுத்த மாலையை வில்வநாதனுடைய கையில் கொடுத்துக் கொண்டே, ''மனைவிக்குப் போடுங்கள் இந்த மாலையை. எத்தனையோ பெரியவர்களும் பிரமுகர்களும் கூடியிருக்கிற மணப்பந்தலிலே இந்த விழா நடந்திருக்க வேண்டும். இந்த ஏழையின் குடிசையிலே இது நடக்கிறது. ஆனால் ஒன்று உறுதி. இங்கே கூடியிருக்கிற இத்தனை மனித இதயங்களிலும் உண்மையான நல்லெண்ணமும் மகிழ்ச்சியும் நிரம்பி யிருக்கின்றன. இது வெறும் ஆடம்பர வாழ்த்து இல்லை. மனப்பூர்வமான வாழ்த்து என்றான்.

இப்படிச் சொல்லும்போது வேணுவின் கண்கள் உணர்ச்சியினால் கலங்கின. வில்வநாதனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. நன்றியுணர்ச்சியினால் சுந்தரிக்குக் கண்ணீர் பொங்கியது.

கணவனும் மனைவியுமாக அந்த வலை வீட்டில் நுழைந்தார்கள். வில்வநாதனும் சுந்தரியும். குத்துவிளக்கு எரிந்து கொண்டிருப்பதையும் அங்கங்கே அழகழகாகக் கோலங்கள் போட்டிருப்பதையும் பார்த்த போது வில்வநாதனுக்கு வியப்பும் உவகையும் சேர்ந்து நெஞ்சை அடைத்தன. தனது நன்றியுணர்ச்சியைச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லாமல் திணறினான் அவன்.

மனித இதயங்களின் ஆனந்தத்தை வெளியிடுவதற்கு வார்த்தைகள் போதாவென்று நூறு நூறு இசைக் கருவிகள் இந்த உலகிலே வழங்கி வருகின்றன. வானமே அதிரும்படியாக வாணங்களும் வேட்டுக்களும் வேறு போடுகிறார்கள். ஆனால் அந்த ஓசை வழியாகத்தான் மனித உள்ளம் தனது களிப்பை வெளியிடக்கூடுமா? வளைந்து நெளிந்து சுருண்டு ஓடுகிற விதம் விதமான இந்த மௌனமான மாக்கோலத்தில் எத்தனை களிப்பு துலங்குகிறது? இங்கே கூடியிருக்கிற மனிதர்களின் இதய மகிழ்ச்சிகளையெல்லாம் இந்தக் கோலங்கள் எத்தனை அழகோடு மோன மொழியிலே பேசுகின்றன!

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே குத்துவிளக்குக்கு அருகிலே நின்று கை கூப்பினான் ஓவிய இளைஞனான வில்வநாதன். செண்பக சுந்தரி விளக்குக்கு முன்பு நிலத்திலே படிந்து வணங்கி எழுந்தாள்.

"சுந்தரி! இத்தனை இன்பத்துக்கும் மத்தியில் ஒரே ஒரு சிறு குறை மனசில் இருக்கிறது. இந்த ஆனந்தத்தையெல்லாம் உடனிருந்து பார்க்க வேண்டிய -"

"அதையா நினைக்கிறீர்கள் இப்போது! அவள் இங்கே இல்லை என்று நிம்மதியாக அல்லவா இருக்க வேண்டும் நாம்! உலகத்தில் இப்படியொரு தாயார் வந்து வாய்த்தாளே என்று ஒவ்வொரு விநாடியும் துடிதுடித்துக் கொண்டிருந்தவனுக்கு அல்லவா தெரியும் இந்த நிம்மதியின் மகிமை!"

இப்படிச் சொல்லும்போது சுந்தரியின் கண்களிலிருந்து 'பொலபொல' என்று கொட்டிய கண்ணீரைக் கண்டதும் வில்வநாதன் நிலைமையைப் புரிந்து கொண்டான். அப்போது வீட்டினுள்ளே பெரிய தட்டிலே பழங்களும் வெற்றிலை பாக்கு மஞ்சளுமாக ஏந்திக் கொண்டு உள்ளே வந்த வேணுலிங்கம் சொல்லுவான்:

"தம்பி! சாதாரணமாக மற்ற மணமக்கள் எல்லாரும் வீட்டிலே கலியாணத்தை முடித்துக் கொண்டு கோவிலுக்குச் செல்லுவார்கள். நீங்கள் கோவிலிலே கலியாணத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்! அப்படியென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? கலியாணத்துக்கு முந்தியே தெய்வ அநுகூலம் கிடைத்து விட்டது! அப்படியில்லையென்றால் எத்தனையோ சூழ்ச்சிகளும் சதிகளும் இத்தனை மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கும் போது, நம்முடைய முயற்சி இத்தனை வெற்றிகரமாகக் காதும் காதும் வைத்தாற் போல நிறைவேறியிருக்குமா? எல்லாம் கடவுள் செயல். இனி நிம்மதியாக இந்த வீட்டிலே சில நாட்கள் நீங்கள் இருவரும் இல்லறம் நடத்துங்கள். அதன் பிறகு எதிர்காலத் திட்டத்தைப் பற்றி யோசித்துக் கொள்ளலாம்...!"

இவ்வாறு சொன்னான் வேணுலிங்கம். அப்போது வில்வநாதனுடைய முகத்தில் ஒரு கேள்விக் குறி படர்ந்தது. அதைப் புரிந்து கொண்டு வேணுலிங்கம் சொன்னான்:

"செண்பகநாயகி கோவிலின் சுவர்களிலே நீங்கள் எழுத வேண்டிய அந்தக் கடைசி ஓவியத்தை எப்போது எழுதுவது என்று கேட்கிறீர்கள்! அப்படித்தானே? அந்த ஓவியம் என்ன என்பதைப் பற்றி நீங்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லையே! விரைவில் அந்த முடிவுக்கு வாருங்கள்! ஏனென்றால் எந்த நிமிஷமும் நாம் செண்பகவனத்துக்குச் செல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். மாப்பிள்ளை கடலையாண்டி எப்போது வந்து புறப்படலாம் என்று அறிவிக்கிறானோ அப்போது புறப்பட்டு விட வேண்டும். அதாவது நீங்கள் மட்டும் என்னோடு புறப்பட்டு வர வேண்டும். இரகசியமாகச் சென்று இரகசியமாகத் திரும்ப வேண்டும். அதைப் பற்றிப் பிறகு யோசித்துக் கொள்ளுவோம். நீங்கள் இருவரும் உள்ளே போய்ப் பாலும் பழமும் சாப்பிடுங்கள்!"

இவ்வாறு அறிவித்து விட்டு வெளியே வந்தான் வேணுலிங்கம். வந்து கடலையாண்டியிடம் ஏதோ அவசரமாக ஒரு செய்தியைத் தெரிவித்தான். அந்தச் செய்தியைக் கேட்ட மறுவினாடி கடலையாண்டி தனது மேல் துண்டை எடுத்துத் தலைப்பாகை கட்டினான். வாசலிலே நின்று கொண்டிருந்த வில்வண்டிக்கு அருகிலே வந்தான். ஒரு துள்ளுத் துள்ளிக் கோச்சுப் பெட்டியிலே குதித்து ஏறினான். சாட்டையை ஒரு சுண்டுச் சுண்டினான்.

(தொடரும்)

திரிசூலம் திருக்கோவில்



ஸ்ரீ டி. எஸ். வேங்கடராமய்யர்
(முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி)

சென்னை நகரில் கடற்கரையை ஒட்டி திருவொற்றியூர், திருவல்லிக்கேணி, திருமயிலை, திருவான்மியூர் முதலிய புராதனப் பிரசித்தி வாய்ந்த புண்ணிய ஸ்தலங்கள் உள்ளது போலவே, உள்நாட்டை நோக்கியும் திருநீர்மலை வரையில் பல திவ்விய க்ஷேத்திரங்கள் உள்ளன. பிராசீனமான பிரக்யாதியுடன் கூடிய இந்த ஸ்தலங்களில் மக்களுடைய கவனத்துக்கு அதிகம் வராத ஓர் உத்தம க்ஷேத்திரம் திருச்சுரம் எனப்படும் திரிசூலமாகும். திரிபுராசுரர்களை ஈசுவரன் தகனம் செய்ததை யொட்டி இவ்வூருக்குத் திருச்சுரம் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லுகிறார்கள்; திரிசூலம் என்ற பெயர் திருச்சுரம் என்று மாறியதா, திருச்சுரம் திரிசூலமாயிற்று என்பது வரலாற்று நிபுணர்கள் ஆராய வேண்டிய விஷயமாகும்.

மீனம்பாக்கத்துக்கும் பல்லாவரத்துக்குமிடையே, பிரதான சாலையிலிருந்து பிரியும் ஒரு பாட்டை திரிசூலத்திலுள்ள திருக்கோயிலின் வாயிலுக்கே நம்மை இட்டுச் செல்கிறது. குன்றுகளின் மீதாகச் செல்லும் இந்தப் பாட்டை மோட்டார் கார் செல்வதற்கும் தகுதி வாய்ந்ததாக உள்ளது.


நான்கு சிறிய மலைகளின் மத்தியில்—மடியில் என்றும் சொல்லலாம் — திரிசூல ஆலயம் அமைந்திருக்கிறது. நான்மறைகளின் உட்பொருளாக மறைந்து நிற்கும் பரமேசுவரன் அதனை நமக்கு உணர்த்தவே இவ்வாறு இங்கு எழுந்தருளியிருக்கிறாரோ என்ற எண்ணம் எழுகிறது. பரந்த வானத்தையும், சுற்றிச் சூழ்ந்துள்ள குன்றுத் தொடர்களையும் காணும் போது மனசில் சாந்தி நிறைகிறது. இந்தப் புனித உணர்ச்சியுடனேயே ஆலயத்தை அணுகுகிறோம்.

கோயிலின் அமைப்பே அது புராதனமானது என்பதை எடுத்துரைக்கிறது. இக்கோயிலின் கொடுங்கைகளும், கஜப்ருஷ்டம் என்று சில்ப சாஸ்திரம் கூறும் முறையில் கர்ப்பக்கிருஹத்தின் பின்பகுதி அரை வட்டமாக அமைந்திருப்பதும், இந்தச் சுற்றுச் சுவர் நெடுகிலும் கல்வெட்டுக்கள் பொறித்திருப்பதும் ஆலயத்தின் புராதனச் சிறப்புக்கு அத்தாட்சி கூறுகின்றன. சிலா வடிவங்களின் அமைப்பும், உத்ஸவ உலோக விக்கிரகங்களில் சிலவற்றின் வார்ப்பு முறையும் இந்த ஆலயத்தின் பழைமையை வலியுறுத்துகின்றன. இந்தச் சிற்பங்கள் பல்லவ, சோழ காலத்தைச் சேர்ந்தவை என்று கருதப்படுகின்றன. இந்த ஆலயம் ஒன்பதாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று சரித்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். இங்குள்ள கல்வெட்டுக்கள் முழுவதையும் ஆராய்ச்சி செய்து பார்த்தால் இந்தக் கோயிலின் காலத்தைத் தீர்மானமாக நிர்ணயிக்கக்கூடும்.

நம்மைப் பொறுத்த மட்டில் கோயிலின் பழைமைக்காக மட்டும் மதிப்பு செலுத்த வேண்டியதில்லை. இங்குள்ள அற்புதமான வடிவங்கள் எந்தக் காலத்திலும் எழில் குன்றாத மோகன சக்தி வாய்ந்தவையாகும். சர்ப்பத்தைப் பூணூலாக அணிந்த நாகயக்ஞோபவீத கணபதி, இடக்காலை வலக்கால் மீது மடித்துப் போடாது குத்திட்டு அமர்ந்த தட்சிணாமூர்த்தி முதலிய சிலைகள் அசாதாரணமானவை. அவற்றின் அழகும் நேரில் பார்த்தே அநுபவிக்க வேண்டியதாகும். பிரம்மா, விஷ்ணு துர்க்கை, திரிசூலநாதராகிய பிரம்மபுரீசுவரரின் மூல ஸ்தானத்திலேயே உள்ள அம்பிகை இவற்றின் சௌந்தரியம் வாசாமகோசரமாகும்.

சுவாமியின் மூலஸ்தானத்தில் இவ்வாறு சிலாரூபத்தில் தேவி இருப்பதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது. முன்பு இந்தச்

நாகயக்ஞோபவீத கணபதி



சிலாமூர்த்தம் எல்லாக் கோயில்களிலும் போலத் தனியாக அம்மன் சந்நிதியில்தான் இருந்து வந்திருக்கிறது. அப்போது அந்நிய மதஸ்தர்கள் கோயிலில் புகுந்து இந்தச் சிலையைப் பின்னப்படுத்தி யிருக்கிறார்கள். பின்னர் ஆலயத்தினர் இந்த மூர்த்தியை அப்புறப்படுத்தி விட்டுப் புதிதாக வேறு ஒரு சிலா வடிவம் அமைத்து அம்பிகை சந்நிதியில் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். இது தான் நாம் இன்று காணும் திரிபுரசுந்தரி அம்பிகை. எனினும் பழைய பிம்பத்தைக் கோயிலிலிருந்து வெளியேற்ற எண்ணிய போது ஈசுவரனே அர்ச்சகரின் கனவில் தோன்றி அந்தத் தேவி மூர்த்தத்தைத் தமது பக்கத்திலேயே பிரதிஷ்டை செய்யுமாறு ஆக்ஞாபித்தாராம். எனவேதான் சிவனோடு என்றும் அபின்னமாகவுள்ள சக்தி, இன்று சிறிது பின்னமுற்ற சிலை உருவத்தில் சுவாமியின் அருகேயே இருந்து, இருவருமாகக் கருணைபுரியும் அற்புத தரிசனம் கிடைக்கிறது.

இங்குள்ள சின்னஞ்சிறிய சிற்பங்களும் கூட நுட்பமான வேலைப்பாடு கொண்டவை; நுணுக்கமான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை. உதாரணமாக, கர்ப்பக்கிருஹச் சுற்றுச் சுவரின் மத்தியிலுள்ள லிங்கோத்பவ மூர்த்திக்குக் கீழேயுள்ள வராகம் பூமியை முட்டி மோதிக் குடைந்து கொண்டு செல்லும் காட்சி தத்ரூபமாக வடிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு துர்க்கை சிலையின் மேற்புறத்திலுள்ள சின்னஞ்சிறு காளிய நர்த்தன சிற்பத்தில் ஐந்து தலை நாகம் கிருஷ்ணனின் பக்கமாக உத்வேகத்துடன் திரும்பிச் சீறுவது மிகவும் அருமையாக அமைந்துள்ளது. தட்சிணா மூர்த்தியின் பாதத்திலுள்ள முனிவர்களின் ஆனந்தம் நமக்கும் ஆனந்தமூட்டுகிறது.

இந்தக் கோயிலில் ஒரு விசேஷம் தூண்களிலுள்ள சிற்பங்களில் பெரும்பாலானவை திருமாலின் லீலைகளைக் குறிப்பதேயாகும். கோயிலுக்குள் நுழைந்தவுடனேயே நமக்கு இடப்புறமாக ஒரு பெருமாள் சந்நிதியிருப்பதும் விசேஷமாகும். சமய சமரஸத்துக்கு இந்தக் கோயில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

பண்டைப் புகழ் பெற்ற இந்தக் கோயில் நிகழ்காலப் புகழும் பெற்று, பக்த ஜனங்களுக்குத் திரிபுரசுந்தரி சமேத பிரம்மபுரீசுவர ஸ்வாமியின் திருஅருள் கிட்ட வேண்டும் என்பதில் சில நன்மக்கள் ஆழ்ந்த சிரத்தை கொண்டிருக்கின்றனர். இக் கோயிலின் கீர்த்தியைப் பரப்புவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு சிறந்த முறையில் பணி புரிந்து வருகிறது சுவாமி சிவானந்தா அவர்களின் அநுக்கிரகம் பெற்று இங்கு நடைபெற்று வரும் "தெய்வீக வாழ்க்கை சங்க"த்தின் (Divine Life Society) கிளை. இக் கிளையின் ஆதரவிலும், பொது மக்களின் திரவிய சகாயத்திலும் நிகழும் நவராத்திரியில் (29—9—62-லிருந்து 8—10—62 வரை) வரப்பிரஸாதியான திரிபுர சுந்தரி அன்னைக்கு லட்சார்ச்சனை வைபவம் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கிளையின் தலைவரும், குவாரி கண்ட்ராக்டருமான ஸ்ரீ ஒய். குப்புசாமி அய்யர் அவர்கள் ஆசாரமும் ஆஸ்திக புத்தியும் குறைவறப் படைத்தவர். ஆலயத்தின் மேன்மையே தமது மேன்மையாகக் கருதுபவர். அவரை அங்கத்தினராகக் கொண்டு கோயிலைப் புதுப்பிப்பதற்காக ஜீர்ணோத்தாரணக் குழு நிறுவப்பட்டுள்ளது. இதற்குக் கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைவராக இருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யும் நன் முயற்சியை காமகோடி, சிருங்கிரி இரு பீடத்து சங்கராசாரிய சுவாமிகளும் மனமுவந்து பாராட்டி நல்லாசி கூறியுள்ளார்கள். இந்தக் கைங்கரியத்தில் ஆஸ்திகப் பெருமக்கள் யாவரும் பங்கெடுத்துக் கொண்டு, தமிழ்நாட்டின் பழம் சரிதம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்த ஆஸ்தியை இன்றைய மக்கள் அநுபவிக்குமாறு செய்ய வேணும்.

நன்கொடைகளை அனுப்ப வேண்டிய விலாசம்: **ஸ்ரீ சிவபாத ஹிருதயா, காரியதரிசி, திருப்பணிக்குழு, 101-பி, ரயில்வே காலனி, தாம்பரம் (மேற்கு), சென்னை.**

பிரம்மா



தக்ஷிணாமூர்த்தி




லிங்கோத்பவர்



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்

அதிர்ஷ்டக் குழந்தை விழா



இதோ 2 வது அதிர்ஷ்டக் குழந்தை விழா! உங்கள் குழந்தையும் பரிசு பெறுவதற்கு இதுவே சிறந்த நல் வாய்ப்பு! முதல் ஐந்து பரிசுகள் ஆயுள் இன்ஷூரன்ஸ் பாலிஸிக்களாக வழங்கப் பெறும்; அவை, பரிசுபெறும் அக் குழந்தைகளின் கல்விச் செலவுகளை ஈடேற்றும் உபகாரச் சம்பளங்களாக உதவும். உங்கள் குழந்தையின் பிறப்பு ஆண்டு, தேதி, நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒரு பிரவேசக் கூப்பன் அனுப்பவும்; கூப்பனோடு மானேர்ஸ் கிரைப் மிக்ஸர் அட்டைப் பெட்டியின் மேற்புற மூடியொன்றினையும் இணைத்து அனுப்பவேண்டும். தேர்வாளர் குழுவினும் நிர்ணயிக்கப்பெறும் ஆண்டு, தேதி, நேரக் குறிப்புக்கு மிக நெருங்கினாற்போல் பிறந்துள்ள குழந்தைகளே வெற்றி பெறுவார்கள்.

1-6-60 க்கும் 30-9-62 க்கும் இடையே உள்ள தேதிகளில் பிறந்த குழந்தைகள் மட்டுமே இப் போட்டியில் கலந்துகொள்ளத் தக்கவர்கள்.

போட்டியின் முடிவு தேதி: 6 அக்டோபர் 1962.

போட்டிக்கான விதிமுறைகளையும் பிரவேசப் படிவத்தாள்களையும் மானேர்ஸ் கிரைப் மிக்ஸர் விற்கும் கடைக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்க. அல்லது பக்கத்தில் காணும் கூப்பனைப் பயன்படுத்துக.

இப்போட்டியின் முடிவுகள் அக்டோபர் 27 ம் தேதியன்று நாட்டின் தலையாய தினப் பத்திரிகைகளில் வெளியிடப் பெறும்.



மானேர்ஸ் கிரைப் மிக்ஸர் அட்டைப் பெட்டியின் மேல் மூடியொன்றை உடன் இணைத்து அனுப்புக.

ரூ. 10,000

படிப்புதவிப் பரிசுகளாக

- முதல் பரிசு: மாதம் ரூ. 49 வீதம் 7 ஆண்டுகளுக்கு.
- 2ம் பரிசு: மாதம் ரூ. 39 வீதம் 7 ஆண்டுகளுக்கு.
- 3ம் பரிசு: மாதம் ரூ. 29 வீதம் 7 ஆண்டுகளுக்கு.
- 4ம் பரிசு: மாதம் ரூ. 22 வீதம் 6 ஆண்டுகளுக்கு.
- 5ம் பரிசு: மாதம் ரூ. 22 வீதம் 5 ஆண்டுகளுக்கு.

தவிர, 50 பரிவுப் பரிசுகள்: ரூ. 10 மதிப்புள்ள அரசாங்கப் பரிசுப் பத்திரங்களாக.

பிரவேசக் கூப்பன்

மானேர்ஸ் கிரைப் மிக்ஸர் அட்டைப் பெட்டியின் மேல்மூடியொன்றை உடன் இணைத்து "மானேர்ஸ் லக்கி பேபி பெஸ்டிவெல், தபால் பை நம்பர் 10116, பம்பாய்" என்ற விலாசத்திற்கு அனுப்புக.

(கொட்டை எழுத்துக்களில் தெளிவாக எழுதவும்)

குழந்தையின் பெயர் ....

பிறப்பு நேரம் (மணி, நிமிடக் கணக்குடன்) .... காலை/பகல்/இரவு:

பிறப்பு நாள் (மாதமும், தேதியும்)............ (ஆண்டு) 19....

இவ் விழாவின் விதிகளுக்கு உட்பட்டு நடக்க உடன்படுகிறேன்.

கையொப்பம் (பெற்றோர் / பராமரிப்போர்)

பெயர் ____________________

விலாசம் ____________________

கடைக்காரரின் பெயர் ____________________

விலாசம் ____________________

ASP/GH-8FJA TAM



பத்தினிக் கோட்டம்

நீர்ப் பரப்பின் அசைவுக்கேற்ப நிலவின் பிம்பம் பல்வேறு வடிவங்களில் அலைப்புற்றுத் தோன்றுவதுபோல் அவளது நெஞ்சத்துச் சலனங்களைப் பங்கயவதனம் பலவிதமாய் வரைந்து காட்டிக்கொண்டிருந்தது. பளிங்கு நிறப் பிறைநிலா நுதலில் ஆழ்ந்த கவலையின் செவ்வரிகள் பின்னலிட்டுக் காண, அறிவின் ஆய்வுத் தோல்வியால் ஏற்படும் குழப்பம் மையுண்ட விழிகளில் மிதவையிட்டுத் தோன்ற, தேன்பசையேறிய அதரச் சுளைகளில் மட்டும் மகிழ்ச்சியின் சீதளப் புன்னகை ஊர்ந்து நெளிவது தெரிந்தது.

ஏதோ ஒரு காரிய சாதனைக்காகச் சொந்த நாட்டை விட்டுத் தன் பெரிய தந்தையாரைக் காண வேண்டி இந்த அயல்நாட்டுக்குப் பயணமாகிவந்த வழியில், அந்தப் பயணத்தைத் தொடர முடியாமல் எதிர்பாராத விதமாகத் தடங்கல் ஏற்பட்டு இங்கு தங்கியிருக்கும்படி ஆகிவிட்டதே என்பது அவளுடைய பிறை நுதலில் கோலிட்டிருக்கும் கவலை ரேகைகளுக்குக் காரணமாய் இருக்கலாம்; அடுத்து, நேற்று மாலை முதல் இன்று காலை வரையில் நடந்துள்ள மர்மச் சம்பவங்கள் அவளது கண்ணில் சூழ்ந்திருக்கும் குழப்பத்துக்குக் காரணமாய் இருக்கலாம்; ஆனால், மாதுளையதரங்களில் தவழும் அந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன?

எங்கிருந்தோ 'கிரீங், கிரீங்' என்று சக்கரம் சுழல்வது போன்ற ஒலி எழவே, அவள் சட்டென்று பின்னால் திரும்பிப் பார்த்தாள். அந்தத் தோட்டத்து வேலியோரமிருந்த ஒரு கூவலில் பரவாதிமல்லரின் சமையற் பணிப்பெண்ணான அநந்தமதி நீர் இறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அத்தியாயம் ஒன்பது

விடைபெறா வினாக்கள்

ஏரிமலர்க் கதிரவன் குடைதிசை வானின் கூனல் விசும்பிலே கூம்பிச் சரியும் நேரம்.

அந்த மாலை வேளையின் பொன்னொளிப் பூச்சில் கந்தர்வச் சித்திரமாகக் காட்சியளித்தது பரவாதிமல்லர் இல்லத்தைச் சார்ந்த சிறிய பூந்தோட்டம். அந்தப் பூந்தோட்டத்தின் ஓரிடத்தில் மாணிக்க மணிகள் குயிற்றிய மரகதத் தேர்போல் வளர்ந்து நின்ற மகிழ மரமொன்றின் அடியிலே, தாமரைப்பூ வடிவிலே செதுக்கப் பெற்ற மரத்தாலான ஆசனம் ஒன்று கிடந்தது. அதன் பக்கத்தில் அதேபோன்ற இன்னொரு ஆசனமும் இருந்திருக்கவேண்டும். ஆனால், அதை ஏனோ புரட்டி எடுத்து விட்டிருப்பதன் அறிகுறியாக அங்கு ஒரு வட்டத் தடம் மட்டுமே காணப்பட்டது. அதற்குச் சற்று அப்பால், சிந்தனை வயப்பட்டவளாய் அமர்ந்திருந்தாள் ஆந்திர இளவரசி உத்தமசீலி.

ஜெகசிற்பியன்

அந்தப் பெண்மணியைப் பார்த்ததும் உத்தமசீலியின் கனியிதழ்களில் ஊர்ந்து கொண்டிருந்த மகிழ்ச்சிப் புன்னகை மறைந்தது. இன்று காலை சேதியக் கலைஞருடன் உணவு உட்கொள்ளும் போது அவர் கூறிய விஷயம் மனத்தில் வந்து திடுமென மோதியதால் தான் அவள் அப்படி முகம் வெளுத்துப் போனாள். காலையிலிருந்தே அவ் விஷயத்தைப் பலபடியாக அலசிப் பகுத்துப் பார்த்தும், அது குறித்து அவளுக்கு எவ்வித முடிவும் இதுவரை புலப்பட வில்லை. அதே குழப்பத்திலிருந்து வந்த அவள், இப்போது மீண்டும் அதுபற்றி எண்ணிப் பார்க்க முயன்றாள்:

'அந்த வாலிபன் யாராயிருப்பான்? அவன் யாருக்காக — எதற்காக — அஞ்சி, இங்கு வந்து அடைக்கலம் புகுந்திருப்பான்? இந்த நாட்டின் இன்றையச் சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கும்போது சந்தேகமின்றி அவன் சளுக்கிய மாமன்னர் விக்கிரமாதித்தரை எதிர்த்துத் தோல்வியுற்றவனாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதிலும், பல்லவ அரசியலில் பங்குபெற்றிருந்த ஒரு பெரும் புள்ளியாகவும் இருக்க வேண்டும். இல்லையானால், இந் நாட்டிலே சமணப் பள்ளிகளை யடுத்து எல்லாருக்கும் பொதுவாக எத்தனையெத்தனையோ 'அஞ்சினான் புகலிடங்கள்' இருக்க, அங்கெல்லாம் அவன் போகாமல் இந்தப் புகழ்பெற்ற கலைஞரின் இல்லத்தில் வந்து புகல் அடைந்திருப்பானா? அத்தகையதொரு தகுதி இல்லாவிட்டால் அவனுக்கு இவர் தம் இல்லத்தில் இடம் தந்திருப்பாரா ? அடைக்கல தானம் அளிப்பதில் அந்தஸ்து, பெருமை, தகுதி ஆகியவற்றைப் பார்க்கக் கூடாதென்பது அந்தத் தானத்துக்குரிய விதிமுறைகளில் ஒன்று என்றாலும், அவ்வாலிபனுக்கு இங்கே அளித்திருக்கும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் மற்றச் சௌகரியங்களையும் பார்க்கும் போது அவனுடைய தகுதியின் உயர்வு தெற்றெனப் புலப்படுகிறதே ! அறிவும் ஆற்றலும் வயதும் புகழும் நிரம்பப் பெற்றவரான பரவாதிமல்லரே அவனைப் பற்றிச் சொல்லும்போது 'அவர்' என்று பன்மைப் பிரயோகம் செய்கிறாரே ! அப்படியானால் அவன் யாராய் இருப்பான்....?'

இந்த வினாக்களிலிருந்து ஏதோ ஒரு பெரிய உண்மையைப் புலப்படுத்திக் கொண்டவள் போல் திடுக்குற்று நிமிர்ந்தாள் உத்தமசீலி.

'அந்த வாலிபன் எனது பெரிய தந்தையார் விக்கிரமாதித்த வல்லபரிடம் பல்லவ நாட்டைப் பறி கொடுத்து விட்டுத் தோற்றோடிய பரமேசுவரவர்மனாக இருப்பானோ?.... அல்லது பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையிலிருந்து தப்பித் தலைமறைவாயிருக்கும் இளவரசன் கோவிந்தவர்மனாக இருப்பானோ....?'

அவள் உடல் அதிர்ச்சியுற்று நடுங்கியது. நேற்றிரவு சளுக்கியத் தளபதி வில்வேலிக்குத் தவறான வழிகாட்டி அலையவிட்டதற்கும் இன்று காலை தன்னுடைய சிவிகை காணமற் போனதற்கும் இந்த வாலிபன்தான் காரணஸ்தனாயிருப்பானோ என்று எண்ணிய போது அவளுடைய நடுக்கம் மேலும் அதிகமாகியது. பீதியுடன் அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்த்த அவள், ஒருகண நிதானத்துக்குப் பின், தனது அந்தச் சந்தேகம் சரியல்ல என்பது போல் தனக்குத் தானே மெல்லத் தலையசைத்துக் கொண்டாள்.

'அப்படியிருக்க முடியாது. இந்த வாலிபன் அவ்விருவரில் யாரேனும் ஒருவனாக இருந்து, அவனுக்குப் பரவாதிமல்லர் அடைக்கலம் அளித்திருந்தால், அவனது மாபெரும் விரோதியின் தம்பி மகளான என்னைத் தம் இல்லத்துக்கு அழைத்து வருவாரா ? என்னை அழைத்து வந்ததுமல்லாமல், வழி தடுமாறி வந்து சேர்ந்த வில்வேலியையுமல்லவா அன்புடன் வரவேற்று உபசரித்தார் ! அதுவுமின்றி, எதிர்பாராதவிதமாக என்னுடைய சிவிகை காணமற் போனதால் மேற்கொண்டு பயணத்தைத் தொடரமுடியாமலும், புதிய சிவிகை வரும் வரை எங்கே தங்கியிருப்பது என்று தெரியாமலும் குழம்பித் தவித்த என்னை, அவர் தம் இல்லத்திலேயே இருக்கப் பரிவுடன் கேட்டுக் கொண்டாரே ? எங்களுடைய எதிரி ஒருவனுக்குப் புகலிடம் தந்திருந்தால் இங்கே நான் தங்கியிருக்கச் சம்மதிப்பாரா ?'

பதற்றம் நீங்கிய உத்தமசீலி மீண்டும் தன் சிந்தனையை நிதானமாக ஓட்டினாள்:

'பாவம் !.... பல்லவர், சளுக்கியர்க்கிடையே ஏற்பட்ட போரினாலும், அதன்பின் நடந்த கொடுமைக் கெடுபிடிகளாலும் பாதிக்கப்பட்ட எவனோ ஓர் அப்பாவி, உயிருக்கு அஞ்சி ஓடி வந்து இங்கே தஞ்சமடைந்திருப்பான்! அந்த அபாக்கியவானின் நிலையை எண்ணிப் பரிதாபப்படாமல் அவனைப் பற்றி ஏதேதோ அதிகப்படியாகக் கற்பனை



செய்து வீணாக என் மனத்தைப் போட்டு அலட்டிக் கொள்கிறேனே! அந்த வாலிபனின் மென்மையான எளிய தோற்றத்தைப் பார்த்தால், அவன் ஒரு சிற்பக் கலைஞனாகவோ, சித்திரக்காரனாகவோ இருப்பான் என்றே தோன்றுகிறது! இப்படிப்பட்ட ஒரு கலைஞன் என்பதால்தான் பரவாதிமல்லர் அவனுக்குத் தம் இல்லத்தில் அடைக்கலம் தந்திருக்கலாம்...!'

அவள் மனம் இளகிக் கரைந்தது. முகம் வாட்டமுற்றுக் கண்கள் இலேசாகப் பனித்தன. "போர் மிகக் கொடுமையானது. அது மனித வாழ்க்கையின் எல்லா முனைகளையும் நாசமாக்கிச் சீரழித்து விடுகிறது" என்று நைந்த குரலில் முனகிக் கொண்டே மெல்லத் தலை நிமிர்ந்தாள்.

நெஞ்சைக் கவரும் இனிய காட்சிகள் அங்கு எத்தனையோ இருந்தும் அவளுடைய பார்வை அவற்றிலெல்லாம் பதியாமல், தொலைதூர ஆற்றங்கரையோரம் பச்சைக் கோபுரமென ஓங்கி நின்று கொண்டிருந்த அந்தச் சவுக்கை மரத்தை நோக்கிச் சென்றது. தன்னை மீறிய ஓர் ஆவலுடன் அம்மரத்தையே கண்ணிமைக்காமல் பார்த்தாள். அப்படிப் பார்க்கப் பார்க்க அவள் முகம் செவ்வரி படரச் சிவந்து மலர்ந்தது. பளிங்கு நெற்றியில் பின்னிக் கிடந்த கவலைக் கீறல்கள் மறைந்து, குவளை மலர்க் கண்களில் தேங்கிச் சுழித்த குழப்பம் நீங்கி, கொவ்வைக் கனியிதழில் முன் போலக் குறுநகை தவழ்ந்தது. பழுத்த மூங்கிலின் பளபளப்போடு விளங்கிய தோளில் சரியாகவே சுற்றிக் கிடந்த பூந்துகிலை அவசரமாக இழுத்து விட்டுச் சரி செய்து கொண்ட அவள் தன் மென்னுடலை நாணத்துடன் நெளித்துக் குறுக்கியபடி எழுந்து நின்றாள்.

தமது இல்லத்தையொட்டி அமைத்துக் கொண்டிருந்த சிறியதொரு கலைக் கூடத்தில் பரவாதிமல்லர் உலாவிக் கொண்டிருப்பது தெரிந்தது. அநேகமாக இன்றையப் பெரும் பொழுதையும் அவர் அங்கேதான் கழித்திருக்கிறார். இது அவருடைய அன்றாடப் பழக்கமாகவும் இருக்கலாம். முற்பகலில் ஒரு முறையும், பிற்பகலில் ஒரு முறையும் வந்து உத்தமசீலியிடம் சற்று நேரம் வாஞ்சையோடு பேசிக் கொண்டிருந்து விட்டுப் போனார். அவ்வளவுதான். ஆயினும், அவளுக்குரிய எல்லாத் தேவைகளையும் வசதிகளையும் காலம் அறிந்து - குறிப்பறிந்து-செய்து கொடுப்பதில் அவர் மிகவும் விழிப்போடு இருக்கிறார் என்பதை, பணிப்பெண் அநந்தமதியின் பணிவிடைகளிலிருந்து அவளால் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், காலையில் பூசையறையிலே பார்த்த அந்த வாலிபன் மட்டும் அவள் கண்ணில் இன்னமும் தென்படவே இல்லை. அவன் எங்கே இருக்கிறான், என்ன செய்கிறான், எப்படி நேரத்தைக் கழிக்கிறான் என்னும் விவரங்களையும் அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. தன்னை மீறிய ஏதோ ஓர் உணர்ச்சியால் உந்தப்பட்டு, அவனை மீண்டும் பார்க்க வேண்டும் என்பதற்காக, அவள் இரண்டொரு முறை எடுத்துக்கொண்ட முயற்சியும் பலிக்கவில்லை. ஆயினும் அவளுக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அவன் அவளைப் பூசையறையில் பார்த்தபின் இந்த இல்லத்தை விட்டு



எங்கும் ஓடி விடவில்லை — இங்கேதான் இருக்கிறான் என்று !....

எழுந்து நின்ற உத்தமசீலியின் பார்வை மறுபடியும் அந்தச் சவுக்கை மரத்தை நோக்கிச் சென்றது. அம் மரத்தைப் பார்த்துக் கொண்டே அவன் மெல்ல நடக்கலானான். ஆமாம்; அவனையறியாமலே அவன் கால்கள் தோட்டத்தைக் கடந்து, ஆற்றுக்குச் செல்லும் குறுகிய பாதையில் இறங்கி நடை போட்டன.

அத்தியாயம் பத்து

மாலை மயக்கம்

நீலப் பட்டுத் துகிலை நெடுக நீட்டிவிட்டாற் போல் சலசலத்து ஓடிக் கொண்டிருந்த சிற்றாற்றின் மணல் மேடிட்ட கரைச் சரிவில் வந்து நின்றான் உத்தமசீலி. தண்ணென்று வீசும் தென்றலில் அவனது மெல்லிய மேலாடை, கொழு கொம்பிலிருந்து நழுவிய மாதவிப் பூங்கொடியெனச் சரிந்து அலைந்து பறந்தது. எவ்வித கட்டுக்காவலுமின்றி அவ்வினிய சூழலில் தன்னந் தனியே நின்றிருப்பது அவனுக்குப் பேரானந்த சுகமாக இருந்தது. பரிமள கந்தச் செறிவுடன் சஞ்சீவித் தன்மை பெற்று வீசும் சீதளக் காற்றையும், ஆற்றங்கரையோர அழகுக் காட்சிகளையும் அநுபவித்து ரசித்த அவன், தன் உயரத்துக்கு இரண்டத்தனை நீள நிழலைக் கீழ்த் திசையில் சாய்த்து விட்டு வானோங்கி நின்ற அந்தப் பச்சைப் பசிய சவுக்கை மரத்தை வியப்பேறிய கண்களால் ஏறிட்டுப் பார்த்தான்.

தொலைவிலிருந்து பார்க்கும்போது மோனத் தவம் இயற்றும் ஞானி போல் காணப்பட்ட அந்த மரம், இப்போது வாய் திறந்து ஓசை கூட்டி வேத மந்திர கானம் இசைப்பது போலத் தோன்றியது. மேல் காற்றின் வேக வீச்சு அதன் ஊசியிலைச் செறிவின் ஊடாகப் பாய்வதால் எழும்



'ஜைய்ங், ஜைய்ங்' என்ற ஒலியே அவளுக்கு அப்படியொரு பிரமையை உண்டு பண்ணியது.

நெஞ்சில் குதூகலம் நிரம்பி வழிய, பம்பரம்போல் ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பிய அவள், பொன் மணற் சரிவிலே தன் பூம்பாதங்கள் புதையப் புதைய அங்குமிங்குமாகத் துள்ளிக் குதித்து ஓடினாள். அந்த மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கைகொட்டி நகைத்தாள். சிறு பிள்ளைபோல் தத்தித் தவழ்ந்து தள்ளாடி வீழ்ந்து எழுந்தாள். தெள்ளிய மணற்பரப்பில் கறுப்பும் பச்சையுமாக உதிர்ந்து கிடந்த சவுக்கைக் காய்களை ஓடி ஓடிப் பொறுக்கிக் கை நிறையச் சேர்த்துக்கொண்டு ஆற்றின் நீர் விளிம்பை நோக்கி விரைந்தாள்.

அவளுக்கு உற்சாகம் கரை புரண்டு விட்டது. ஈரம் கவர்ந்த மணலில் அமர்ந்து, தான் பொறுக்கியெடுத்து வந்த சவுக்கைக் காய்களைப் பரப்பி அம்மானை ஆடினாள். அப்புறம் அந்தக் காய்களை ஒவ்வொன்றாக எடுத்து, அலைத்துப் புரண்டோடிய ஆற்று நீரில் வீசியெறிந்து, அதனால் உண்டாகும் வட்ட அடுக்குகளையும் வெள்ளிக் குமிழ்களையும் கண்டு கலகலவெனச் சிரித்தாள்.

ஏழெட்டுக் காய்களை எறிந்தபின் கைசோர்ந்து போன அவள், செங்கதலித் தண்டு போன்ற வலக் காலை மடித்துப் போட்டு இடது காலை நீட்டி நீரில் தொங்கவிட்டபடி, தன் மடியில் கிடந்த சவுக்கைக் காய்களில் ஒன்றையெடுத்து, செஞ்சாயச் சித்திரம் தீட்டிய உள்ளங் கையில் வைத்து உருட்டிக் கொண்டே அதன் அற்புத இயற்கை அமைப்பைக் கூர்ந்து பார்த்தாள்.

சற்று நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவள் ஏதோ நினைத்துத் தனக்குள் புன்முறுவல் பூத்தபடி பக்கவாட்டில் திரும்பினாள். கை எட்டும் தொலைவில், அரை ஆள் உயரத்துக்கு ஒரு வழுக்குப் பாறை மண்ணில் பாதியும் நீரில் பாதியுமாகப் புதைந்து நிற்பது தெரிந்தது. அந்தப் பாறையின் அருகில் மரப்பட்டையொன்று நனைந்து நைந்து கிடந்தது. அப்பட்டையைத் தாவி எடுத்த அவள், அதிலிருந்து நூல் போன்ற நார் இழையொன்றைக் கிழித்துச் சுருட்டி வைத்துக் கொண்டாள். பின்னர், வாச மலர்ச் சூடி வனப்புறச் சீவி முடித்திருந்த தன் கொண்டையிலிருந்து தங்கத்தால் ஆன ஊசியொன்றை உருவியெடுத்து அந்தச் சவுக்கைக் காய்களின் நடுவிலே பக்குவமாகத் துளையிட்டாள். பிறகு, ஒவ்வொரு காயாக எடுத்து நார் இழையில் கோத்துச் சரமாக்கி அந்தச் சரத்தை மாலை போல் வளைத்துக் கட்டினாள். எவ்வித காரண - காரியமுமின்றி, மனத்தில் பெருக்கெடுத்த உற்சாகப் போக்கில், வெறும் விளையாட்டாகத்தான் இப்படிச் செய்து முடித்தாள்.

மகிழ்ச்சிப் புன்னகை பூத்தவளாய் அந்தச் சவுக்கைக் காய் மாலையைத் தன் முகத்துக்கு நேரே தூக்கிப் பிடித்துப் பார்த்தபோது அதன் அழகுத் தோற்றம் அவளையே பிரமிப்பில் ஆழ்த்தி விட்டது. ஆமாம்; பச்சைக் காய் ஒன்றும், காய்ந்து கறுப்பான காய் ஒன்றுமாக மாறி மாறிக் கோக்கப்பெற்றிருந்த அந்த மாலை, பார்ப்பதற்கு ஓர் அழகிய உருத்திராக்க மணி மாலைபோல் தோற்றமளித்தது!

ஆச்சரியமுற்ற நிலையில் அம்மாலையையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவள், மகர யாழைச் சுண்டி விட்டாற்போல் கலீரெனச் சிரித்தாள். ஏதோ ஒரு வெட்க உணர்ச்சியால் முகம் சிவக்க, தலை குனிந்தபடி சிரித்தாள் அவள்.

ஏன் இப்படிச் சிரிக்கிறாள்? எதை நினைத்து இவ்வாறு இதயம் குலுங்கி நகைக்கிறாள்?

இன்று காலை, இதே ஆற்றங்கரையோரம், நீராடிய கோலத்தில், கழுத்திலே உருத்திராக்க மாலையும், பூக்குடலையுமாக வந்தானே அந்த வாலிபன், அவனை நினைத்துத்தான் அவள் அப்படி நாணச் செறிவுடன் நகைத்தாள்!

சட்டென்று அவளுக்கு ஒரு விசித்திர ஆசை பிறந்தது. சுற்றுமுற்றும் பார்த்து விட்டுத் திரும்பிய அவள், கையிலிருந்த சவுக்கைக்காய் மாலையை வெண்சங்கு போன்ற தன் கழுத்தில் அணிந்து கொண்டு, சற்றே முன் தள்ளி நகர்ந்து போய்க் கீழே குனிந்து நோக்கினாள்.

பளிங்குப் பாளம்போல் தெளிந்து கிடந்த ஆற்று நீர்ப் பரப்பில் துறவுக் கோலம் பூண்ட ஓர் இளஞ் சைவச் சந்நியாசினியின் அழகு உருவம் மிதப்பது தெரிந்தது! உருத்திராக்க மணி மாலை போன்ற அந்தச் சவுக்கைக் காய்ச் சரத்தை அணிந்திருந்த உத்தமசீலியின் தோற்றம்தான் அங்கே அவ்வாறு காணப்பட்டது!

''நல்ல வேடம்! நல்ல மாலை!'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்துக் கொண்டே துள்ளிக் குதித்து எழுந்த அவள், அந்த மாலையைக் கழற்றிப

பக்கவாட்டிலிருந்த வழுக்குப் பாறைக்கு அப்பால் சுழற்றி வீசினாள்.

அதே சமயம், அப்பாறைக்கு மறுபுறத்திலிருந்து திடுமென ஒரு மனிதனின் தலை மேலெழும்பவே, சக்கரவட்டமாகச் சுழன்று வந்த மாலை சரேலென்று அவன் கழுத்தில் போய் இறங்கிச் சுற்றிக் கொண்டது!

இந்த எதிர்பாராத நிகழ்ச்சியினால் பலத்த அதிர்ச்சியுற்று விட்ட உத்தமசீலி, பரபரப்புடன் கண்களை மலர்த்திப் பார்த்தாள்.

சந்தேகமில்லை; பரவாதிமல்லரின் இல்லத்திலே புகலடைந்திருக்கும் வாலிபன்தான் அந்த வழுக்குப் பாறைக்குப் பின்னால் திகைப்பும் வியப்புமாக நின்று கொண்டிருந்தான்!

நீரோட்டத்தில் சிக்கிய நாணலைப் போல் நடுங்கித் துவண்ட உத்தமசீலி, படபடக்கும் கண்களால் அவனைப் பார்த்துக் கொண்டே மெள்ளப் பின்னால் நகர்ந்தாள். பிரமித்த நிலையில் நின்ற அந்த வாலிபனும் அவளையே விழியசைக்காமல் நோக்கியபடி பாறைக்குப் பின்னாலிருந்து வெளிப்பட்டு வந்தான். இப்போது அவன் முகத்தில் எழிலார்ந்த குறுநகையொன்று இதமாக நிரவலிட்டது.

நெஞ்சை உலுக்கிக் குலுக்கும் பயத்தால் நகரவும் சக்தியற்றுப் போன அவள் தட்டுத் தடுமாறி நின்றாள்.

தன் கழுத்தைச் சுற்றி மார்பில் தவழ்ந்து கொண்டிருந்த அந்தச் சவுக்கைக் காய் மாலையையும், அதனை வீசியெறிந்த அவளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்ற வாலிபன், அவளிடம் ஏதோ கேட்க ஓரடி முன்னால் வந்தான். தயங்கி நின்ற அவளும் அவனிடம் ஏதோ சொல்ல வாய் திறந்தாள்.

மறுகணம் அவள் என்ன நினைத்தாளோ, சடாரென்று திரும்பி, சேதியக் கலைஞரின் இல்லத்தை நோக்கிப் புள்ளிமானெனத் துள்ளிப் பாய்ந்து ஓடினாள்.

இதைக் கண்டு திகைப்புற்ற வாலிபன் மரமாய்ச் சமைந்து நின்றான்.

"வாருங்கள், இளவரசி! உங்களைத்தான் இவ்வளவு நேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று வாஞ்சையுடன் கூறிக் கொண்டே அறைக் கதவின் திரைச் சீலையை விலக்கினார் பரவாதிமல்லர்.

மூச்சுமுட்ட ஓடி வந்து நின்ற உத்தமசீலி அவரைப் பரபரப்புடன் பார்த்து விட்டுத் தலை குனிந்தாள். அவளது பொன்மேனியெங்கும் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பி வழிந்தன.

"இளவரசியார் வெகுதூரம் உலாவப் போய் விட்டார் என்று நினைக்கிறேன்! அதனால்தான் இப்படி வேர்த்துக் களைத்து வந்திருக்கிறார்!"

'இல்லை' என்பதற்கு அறிகுறியாக மெல்லத் தலையசைத்தாள் உத்தமசீலி.

"அப்படியானால் அந்த 'விஷயத்தை எனக்கு முன்னமே இளவரசியார் தெரிந்துகொண்டு விட்டாரோ?"

அவள் சட்டென்று நிமிர்ந்து அவரை உள்ளார்ந்த பீதியுடன் நோக்கினாள். புன்முறுவல் பூத்த சேதியக் கலைஞர் நிதானமாகத் திரும்பி, சாளரத்து வழியே முன் வாசல் பக்கம் தமது பார்வையைச் செலுத்தினார்.

அங்கே, ஆந்திர இளவரசி உத்தமசீலியின் காணுமற் போன சிவிகை இறக்கி வைக்கப் பெற்றிருந்தது. அச்சிவிகைக்குப் பின்னால், இருபதுக்கும் மேற்பட்ட சளுக்கிய வீரர்கள் பணிவுடன் குழுமி நின்று கொண்டிருந்தனர்.

(தொடரும்)



செந்தாமரை

நட்சத்திரக் கூட்டம் நிறைந்த படம்; பல்லாண்டுகளாகத் தயாரிப்பில் இருந்த படம்; இன்று புகழ் ஏணியில் நிற்கும் டைரக்டர் ஏ. பீம்ஸிங்கின் முதல் படம்.

ஏழைப் பெண் கமலம் ஒரு பணக்காரனால் வஞ்சிக்கப்பட்டுத் தாய்மையடைகிறாள். அவள் தம்பி சந்திரன் வஞ்சகமாக இலங்கைத் தீவுக்கு அனுப்பப்படுகிறான்; கமலத்தின் காதலனை அத்தை மகளுக்குப் பைத்தியம் பிடித்து விடுகிறது. கமலத்தின் மகள் தான் செந்தாமரை. சந்திரன் இலங்கைத் தீவிலிருந்து வந்ததும் வேலையில்லாமல் தவிக்கிறான். செந்தாமரையின் வளர்ப்புத் தந்தையின் மூலம் அவனுக்கு வேலையும் கிடைக்கிறது: (செந்தாமரையின் காதலும் கிடைக்கிறது!) கமலத்தை மிரட்டிப் பணம் வாங்கும் வில்லன், கடைசியில் கொல்லப்படுகிறான்! வழக்கு நடக்கிறது. பிறகு செந்தாமரைக்கும், சந்திரனுக்கும் திருமணம் நடக்கிறது!

கதையைச் சரியாக அமைத்துக் கொள்ளாததனால் படம் ரொம்பவும் சிரமப்படுகிறது. கமலத்தைத் தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றிய பெரிய மனிதர், அவள் பெற்ற குழந்தையை நல்ல முறையில் வளர்ப்பதற்காக அவளை நடனமாடச் சொன்ன வரையில் சரி, ஆனால் செந்தாமரைக்குத் தாய் இன்னாரென்று தெரியக் கூடாது என்ற எண்ணத்துடன் அவளையும் கமலத்தையும் பிரித்து வைத்த காரணத்தைக் கேட்டால் அசடு வழிகிறதே! செந்தாமரைக்கும் சந்திரனுக்கும் காதல் ஏற்பட்ட விதத்தைக் கொஞ்சமாவது காட்டி யிருக்கலாம். போக்கிரி ரங்கனுக்கும் கமலம் பயந்திருக்கவே வேண்டாம். அப்படியே பயந்திருந்தாலும் கேட்ட பொழுதெல்லாம் பணத்தைக் கொடுத்துப் படத்தை நீட்டி யிருக்க வேண்டாம்! சந்திரன் இலங்கைக்கு அனுப்பப்பட்டதன் காரணம் என்னவோ !

லலிதா, பத்மினி, ராகினி மூவரும் நடித்திருக்கிறார்கள். லலிதா தான் கமலமாக வந்து, காதலை இழந்து, கண்ணீர் விட்டு, நடனமாடித் தலை மறைவாக வாழ்ந்து நீதி மன்றத்தில் உண்மையை உரைப்பதற்காக வெளிப்படுகிறார். லலிதாவின் நடிப்பு நன்றாயிருக்கிறது. வயதானபிறகு மறந்துவிடாமல் மேக்கப்பை முதுமையாகக் காட்டியிருப்பது பாராட்டுக்குரியது. (நமது படங்களில் பாத்திரங்களின் வயதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லையே!)

ராகினியும் சந்திர பாபுவும் சக்கைப்போடு போடுகிறார்கள். சந்திரபாபுவின் நடிப்பும், "தாங்காதம்மா தாங்காது" என்ற பாட்டும் சுவாரசியமா யிருக்கின்றன.

சிவாஜி கணேசனும் பத்மினியும் நடித்தும் "தெய்வப் பிறவி" மாதிரி உருக்கமான நடிப்பையோ, மனத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் குதூகலக் காட்சிகளையோ, "செந்தாமரை"யில் காண முடியாமற் போனது துர்ப்பாக்கியம் தான். அக்காவின் அவல வாழ்வை அறிந்து வேதனைப்பட்ட சமயத்திலும் சரி, நீதிமன்றத்தில் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்ட போதும் சரி, சிவாஜி கணேசனின் சிறந்த நடிப்பை எதிர்பார்த்தவர்களுக்குக் கிடைத்தது ஏமாற்றம்தான்.

பத்மினியிடம் துள்ளலும் இல்லை, துடிப்பும் இல்லை. வியந்து புகழ நடிப்பும் இல்லை. எல்லாம் போகட்டும். நடனமாவது தேறும் என்று எதிர்பார்த்தேன். ஊஹூம்! பத்மினி அபிநயம் பிடிக்கும் (மார்கழித் திங்கள்) நடன நிகழ்ச்சி மணம் இழந்த மலர் போல் சத்தில்லாமல் இருக்கிறது. இசையமைப்பிலும் இனிமையில்லை. என்ன செய்யலாம்!

கே. ஆர். ராமசாமி நடிக்கிறார்; ஒரு பாட்டும் சொந்தக் குரலில் பாடுகிறார். ஆனால் எந்த விதத்திலும் மனத்தில் தங்கவில்லையே!

ஏமாற்றம் அடைந்த அத்தானாக வரும் எஸ். எஸ். ராஜேந்திரனின் நடிப்பு ஏமாற்றம் அளிப்பதாயில்லை. நன்றாயிருக்கிறது. பைத்தியக்காரனுகி விட்டாலும் படத்தை நல்ல மாதிரியாக முடித்து வைக்கிறாரே!

தங்கவேலு, வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு ஆகியவர்கள் வந்தும் "செந்தாமரை"யை மலர வைக்க முடியவில்லையே?


பாட்டு ஒன்றுகூட நன்றாயில்லை.

"செந்தாமரை" - காகிதப் பூ! — காந்தன்



சுலபமாக தையுங்கள்! உஷாவினால் தையுங்கள்!!





உஷா தையல் இயந்திரத்தில் சீக்கிரமாகவும் சிரமமில்லாமலும் தைக்கலாம். ஏனெனில் உஷாவின் அனுபவம், அற்புதமாக வேலை செய்யும் தரமான தையல் இயந்திரங்களை தயாரிக்கிறது. பாகங்கள் எளிதில் கிடைப்பவை. இடையே மாற்றிக்கொள்ளக் கூடியவை. மேலும் விற்பனைக்குப் பிறகு உஷாவின் சேவை தலைசிறந்தது.

எங்கள் வசீகர தவணையில் வாங்கும் முறைகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள உஷா டீலரை அணுகுங்கள்.

உஷா தையல் இயந்திரம்

தி ஜே என்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா-31



மேல்கோட்டை மலையும் குளமும்

அகண்ட இந்தியாவில், இந்து முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழவில்லை என்ற புகார். அது காரணமாகவே, இந்தியா சுதந்திரம் பெற்ற போது, மகமதியர்கள் பிரிந்து பாகிஸ்தான் என்று ஒரு பிரதேசத்தில் தனி ராஜ்யம் ஸ்தாபித்துக் கொண்டார்கள் என்கிறார்கள். ஆனால் சமய உலகிலே, கலை உலகிலே இந்த இந்து முஸ்லீம் வேற்றுமையே இல்லாதிருந்திருக்கிறது என்று அறிகிறபோது அது எவ்வளவோ மகிழ்ச்சிதரத்தானே செய்யும்? விந்தியமலைக்கு வடக்கே இந்த இந்து முஸ்லீம் வேற்றுமை பல முறைகளில் வளர்ந்திருந்தாலும், விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தில் இந்துக்களும் முஸ்லீம் சகோதரர்களும் யாதொரு வேற்றுமையும் இல்லாமல் ஒன்றாக வளர்ந்திருக்கிறார்கள். அதிலும் மைசூர்ப் பிரதேசத்தில் ஆட்சி புரிந்த ஹைதர், திப்பு சுல்தான் முதலிய மகமதிய அரசர்கள் இந்துக் கோவில்களுக்குப் பல நிபந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மூர்த்திகளுக்குப் பல ஆபரணங்கள் பரிசளித்திருக்கிறார்கள். நஞ்சன்கோடு சாமுண்டி மலை, ஸ்ரீரங்கப் பட்டினம் முதலிய தலங்களிலுள்ள மூர்த்திகளுக்கு அவர்கள் அளித்த பரிசுகளைப் பற்றித்தான் முன்னமேயே தெரிந்து கொண்டிருக்கிறோமே. இதையெல்லாம்விடச் சுவையான வரலாறு ஒன்றும் நமக்குக் கிடைக்கிறது. ஆம்! அது தான், டில்லியிலிருந்து அரசாண்ட சுல்தானின் மகள் ஒருத்தி, நாராயண மூர்த்தியிடம் காதல் கொண்டே வளர்ந்திருக்கிறாள் என்று கதையாக விரிகிறது. தென்னிந்தியக் கோவில்களில் நுழைந்து அங்குள்ள பொருள்களை யெல்லாம் மகமதிய மன்னர்கள் கொள்ளையடித்துச் செல்லுகிற போது, ஒரு சிறு சிலையுள்ள நாராயணனது விக்கிரகம் ஒன்றையும் எடுத்துச் செல்லுகிறார்கள். ஆனால் அந்த மூர்த்தியின் அழகில் மயங்கி, டில்லி சுல்தானின் மகள் அதைத் தன் அந்தப்புரத்துக்கே எடுத்துச் செல்கிறாள்; அதனுடன் கொஞ்சி விளையாடுகிறாள். தன் காதலையே அதற்கு அர்ப்பணிக்கிறாள். இப்படிப் பல நாட்கள் கழிகின்றன. சோழநாட்டை விட்டு, மைசூர் ராஜ்யத்துக்குச் சென்ற ராமானுஜர் அங்கு வைணவத்தைப் பரப்புகிற போது, அந்தக் கோயிலிலுள்ள மூர்த்தி டில்லி சுல்தானின் அரண்மனைக்குச் சென்று விட்டது என்பதை அறிகிறார். அன்பர் பலரையும் கூட்டிக் கொண்டு டில்லி செல்கிறார்; சுல்தானிடம் பேசுகிறார்; பல பொருள்களை மீட்டு வருகிறார். அப்படி மீட்டு வந்த பொருள்களில் சுல்தானின் மகளது அந்தப்புரத்தில் இருந்த நாராயண மூர்த்தியுமே வந்து விடுகிறது யதாஸ்தானத்துக்கு. சுல்தானின் மகள் தான் காதலித்த மூர்த்தி போய் விட்டது என்று அறிந்ததும், அந்த மூர்த்தியைத் தேடிக் கொண்டு தெற்கே வருகிறாள். அந்த மூர்த்தி கோயில் கொண்டிருக்கும் கோயிலுக்கே வந்து சேருகிறாள். அம் மூர்த்தியின் திருவடிகளிலே விழுந்து வணங்குகிறாள். அம்மூர்த்தியும் அவளைத் தம்முடன் ஐக்கியப்படுத்திக் கொள்கிறார். இந்த மூர்த்தியைத்தான் ராமானுஜர் செல்வப் பிள்ளை என்று அழைத்திருக்கிறார். சுல்தானின் பெயர் எம்மது (ஆம்! மம்மது என்ற பெயரின் திரிபுதான்) என்றும், சுல்தானின் மகள் பெயர் வரநந்தினி என்றும் கர்ண பரம்பரை கூறுகிறது. இந்தச் செல்வப்பிள்ளை கோயில் கொண்டிருக்கும் தலம் தான் மேல்கோட்டை என்னும் திரு நாராயணபுரம். அந்தத் திருநாராயணபுரத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

இந்த மேல்கோட்டைக்கு ரயிலில் செல்ல விரும்புகிறவர்கள் பெங்களூர் மைசூர் ரயில்

பாதையிலுள்ள பாண்டவபுரம் ஸ்டேஷனில் இறங்க வேணும். அங்கிருந்து இருபது மைல் வடக்கு நோக்கிச் செல்ல வேணும். இல்லையென்றால் மைசூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணம் வழியாக நீலமங்கலா செல்லும் பாதையிலே பஸ்ஸிலே போய் இறங்கிக் கொஞ்ச தூரம் நடக்க வேணும். இந்தச் சாலையில் போகும்போதே மலைமேல் ஒரு கோபுரம் தெரியும். அதுதான் மேல்கோட்டையின் பிரதான கோயில் என்று மயங்குவோம். அது பிரதான கோயில் அல்ல. மலையடிவாரத்திலேயேதான் பிரதான கோயில் இருக்கிறது.

மைசூரிலிருந்து டாக்ஸி கார் வைத்துக் கொண்டு சென்றால் நேரே கோயில் வாசலிலேயே போய் இறங்கலாம். இல்லை. இது தப்பு. கோயில் வாசலை அடுத்திருக்கும் கீழ வீதியில் மைசூர் மகாராஜாவின் கார்களைத் தவிர மற்றக் கார்களை அனுமதிக்க மாட்டார்கள். ஆதலால் கொஞ்சம் அப்பிரதட்சிணமாகவே, வடக்கு வீதி, மேற்கு வீதி, தெற்கு வீதி கடந்து கீழ வீதிக்கு வந்து கோயில் வாசலுக்கு வரவேணும். கோயில் கிழக்கே பார்த்த கோயில். கோயில் வாயிலில் கோபுரம் என்று சொல்லவே தகுதியற்ற ஒரு சிறு கோபுரம் தான் இருக்கும். ஒன்று மட்டும் அதிசயமாக இருக்கும். அங்குள்ள அர்ச்சகர்கள் எல்லாம் நல்ல தமிழ்நாட்டு அர்ச்சகர்களாகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கும் அப்பிரதேச பாஷையான கன்னடத்துக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. எல்லோரும் ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர்களாகவே இருப்பதால், தமிழர்களாகிய நம்மைக் கண்டதும் ஆவலோடு வரவேற்பார்கள்; தமிழிலேயே பேசி மகிழ்வார்கள்; நம்மையும் மகிழ்விப்பார்கள். கோயில் நிரம்பப் பெரிய கோயிலும் அல்ல. சின்னக் கோயிலும் அல்ல. நடுத்தரமான கோயில். அங்குள்ள மண்டபங்களை யெல்லாம் கடந்து சென்றால் மூலவராகிய திரு நாரணனைக் காண்போம். சங்கு சக்கரம் ஏந்திய கையனாய்க் கண்களை அகல விரித்துக் கொட்டுக் கொட்டென்று விழித்துக் கொண்டு நிற்பான் அவன். நீண்டுயர்ந்த கிரீடம் ஒன்று தலையை அணி செய்யும். வலது கரம் அபய முத்திரையோடு இருக்கும்; இடது கை தாழ்ந்து கதையை ஏந்தியிருக்கும். பொன்னும் மணியும் வைத்து இழைத்த ஆரங்களைப் பூண்டு கம்பீரமாகக் காட்சி தருவான். அரையில் உடுத்தியிருக்கும் பட்டை விரித்துப் பக்கவாட்டிலே கட்டியிருப்பான். வலது அபயகரத்தையும் திருவடிகளையும் தங்கக் கவசம் அணி செய்யும். சேர்த்து வைத்திருக்கும் இரண்டு திருவடிகளுக்கும் இடையே ஒரு பெண்ணின் முகம் தோன்றும். அவள் தான் டில்லி சுல்தானின் மகளான வரத நந்தினி. அவள் ஏதோ மகமதிய மதத்தைச் சேர்ந்தவளானாலும் அவளுக்குக் கிடைத்திருக்கும் பேறு பெறற்கரிய தொன்று தான். இந்தத் திரு நாரணனையே நம்மாழ்வார் மங்களா சாஸனம் செய்திருக்கிறார். திருவாய்மொழியில் நான்காம் பத்தில் 'ஒரு நாயகமாய்' என்று தொடங்கும் பாசுரம் திருநாரணனைப் பற்றியது தான். நம்மாழ்வாரும் வரத நந்தினிக்கு இடம் கொடுத்திருக்கும் நாரணன் தாள்களைச் சிந்தித்து உய்வதிலேயே மனத்தைச் செலுத்தியிருக்கிறார்.

ஒரு நாயகமாய் ஓட
உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர்
சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே
பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன் தாள் காலம்பெறச்
சிந்தித்து உய்மினோ

என்பது தானே நம்மாழ்வாரது பாசுரம்? இந்தப் பாசுரத்தை ஓதித் திரு நாரணனை வணங்கித் திரும்பும்போது ரங்க மண்டபத்தின் தென் பகுதியிலே தனி ஆஸ்தானத்திலே உற்சவமூர்த்தியான செல்வப் பிள்ளை, ஸ்ரீதேவி பூதேவி சகிதம் ஓர் அழகிய மஞ்சத்திலே நிற்பார். இவர்தான் அன்று டில்லி வரை சென்று சுல்தான் மகளது அன்புக்கும் காதலுக்கும் பாத்திரமாகிப் பின்னர் மேல்கோட்டைக்கு, ராமானுஜரால் கொண்டு வரப்பட்டவர். இவரை இன்று செல்வப் பிள்ளை ராயர் என்று அழைக்கிறார்கள். ஆம்! வரத நந்தினி என்னும் சுல்தான் மகளால் செல்வமாகப் பராமரிக்கப்பட்டவர் அல்லவா?

இவரை ராமப் பிரியர் என்றும் அழைக்கிறார்கள். இராமானுஜரால் சிறை மீட்கப் பெற்றவர் ஆயிற்றே. ஆதலால் ராமப்பிரியர் ஆகியிருக்கிறார் போலும். திருநாரணன், செல்வப் பிள்ளையை யெல்லாம் வணங்கியபின் கோயிலை வலம் வந்து வடக்குப் பிராகாரம் வந்தால் அங்கே ஒரு பெரிய முன் மண்டபத்துடன் கூடிய கோயில் இருக்கும். அதுதான் தாயார் சந்நிதி. அந்த மண்டபத்தின் தூண்களெல்லாம் சிற்ப வேலைகள் நிறைந்ததாக இருக்கும். இந்தத் தனிக் கோயில் தாயாரையும் வணங்கி வெளி வந்த பின் பக்கத்திலுள்ள மலை மேல் ஏற வேணும். மலை ஏறுவதற்குப் படிகள் இருந்தாலும், அவை செங்குத்தாக இருப்பதால் ஏறுவது கொஞ்சம் சிரமமாய் இருக்கும். மலை உயரம் அவ்வளவு அதிகம் இல்லைதான். மலை மேல் ஏறும்போது பாதி வழியில் வீர அனுமாருக்கு ஒரு கோயில் இருக்கிறது. மலை உச்சியில் கோயில் கொண்டிருப்பவர்தான் யோக நரசிம்மர். அவரது கோயில் கோபுரமே நாம் அந்த ஊரை அணுகும்போது மலை மேல் தெரிந்த கோபுரம்.

இத்தலத்தைத் தக்ஷிண பதரிகாசிரமம் என்பர். அதற்கேற்ப இந்தக் கோயிலின் தல விருக்ஷமாக இருப்பது இலந்தை மரமே. பதரி என்றால் இலந்தை என்று தானே பொருள்? இந்தக் கோயிலில் நடைபெறும் உற்சவங்களில் எல்லாம் சிறப்பானது வைர முடி சேவைதான். இத்தலத்தில் உள்ள செல்வப் பிள்ளையாயன் என்னும் சம்பத்குமாரனுக்கு நல்ல அழகிய வைரம் இழைத்த மகுடம் ஒன்றிருக்கிறது. அது துவாரகையிலிருந்து ஆண்ட கிருஷ்ண பரமாத்மாவே செய்து அளித்தது என்கின்றனர். அந்த வைரமுடி இன்று இருப்பது மைசூர் அரசர்களின் கஜானாவில். அதை ஆண்டுக்கொரு முறை மைசூரிலிருந்து கோலாகலமான விருதுகளுடன் கொண்டு வருவர். அதைச் செல்வப்பிள்ளை ராயருக்கு அணிவித்து அவரை எழுந்தருளப் பண்ணுவர். இந்த வைர முடி சேவை காணப் பதினாயிரக் கணக்கான மக்கள் இன்றும் கூடுகின்றனர்.

இம் மேல்கோட்டைத் திருநாரணன் கோயிலைப் பற்றிய வரலாறு அனந்தம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சோழ அரசன் குலோத்துங்கன் வைணவர்களைக் கொடுமைப்படுத்தியபோது ராமானுஜர் தமிழ்நாட்டை விட்டு ஓடி இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். அப்போது அவரது கனவில் திருநாரணன் தோன்றித் தமக்கு ஒரு கோயில் கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறார். அதன்படி காடாக இருந்த இடத்தையெல்லாம் வெட்டி எடுத்துக் கோயில் கட்டியிருக்கிறார். மேல் கோட்டைப் பக்கத்திலுள்ள தொண்டனூரில் பதினறு வருஷ காலம் இருந்து இந்தத் திருப்பணியை முடித்திருக்கிறார். இந்தத் திருநாராயணன் புதையுண்டு கிடந்த இடத்திலே இருந்த வெள்ளைச் சுண்ணமே வைணவர்களது திருமண் காப்புக்கு உதவியிருக்கிறது. ஸ்ரீ சூர்ணத்துடன் திரிபுண்டரம் ஸ்ரீவைஷ்ணவர்கள் தரிக்கும் பழக்கம் அன்றே ஏற்பட்டிருக்கிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் துவார சமுத்திரத்தைப் பாழ்படுத்திய முகமதியர்கள் இவ்வூருக்கும் வந்திருக்கிறார்கள். கோயிலை இடித்திருக்கிறார்கள். 1614-ம் ஆண்டிலிருந்து இக்கோயில் மேற்பார்வை மைசூர் அரசர்களிடம் வந்திருக்கிறது. அதன் பின்தான் இக்கோயில் செல்வப் பெருக்குடன் விளங்கியிருக்கிறது. 1785-ல் எழுதப்பட்டுள்ள சிலாசாஸனம் ஒன்றின் மூலம் திப்புசுல்தான் இக்கோயிலுக்கு யானைகளை வெகுமதியாக அளித்திருக்கிறான் என்று தெரிகிறது. மைசூர் சமஸ்தானத்தை 1578 முதல் 1617 வரை ஆண்டவர் ராஜ உடையார். இவர் திருநாராயணனிடம் அத்யந்த பக்தி உடையவர். அவர் திருநாராயணனுக்கு நவரத்தின மயமான கிரீடம் ஒன்றை அளித்திருக்கிறார். செல்வப் பிள்ளைக்கு அணிவிக்கும் வைரமுடியைப் போலவே இதுவும் ராஜமுடி என்றே சொல்லப்படுகிறது. 1842-ல் கிருஷ்ணராஜ உடையாரின் மனைவியான ராணியார் மலைமேல் இருக்கும் கிருஷ்ண விலாச சந்நிதியிலுள்ள நரசிம்மருக்குத் தங்க நகைகள் அணிவித்திருக்கிறார். இவரும் இவரது கணவரும் மேல்கோட்டை திருநாராயணனைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள். கர்ப்பவதியாயிருந்த ராணியை மலையடிவாரத்திலேயே விட்டு விட்டு மன்னர் மாத்திரம் நரசிம்மனைத் தரிசிக்க மலை ஏறி யிருக்கிறார். அப்படிச் சென்ற மன்னர் அறுபது அடி உயரத்திலிருந்து கால் தவறி உருண்டிருக்கிறார். என்றாலும் அவரது உடலிலே ஒருவிதமான காயமும் ஏற்படவில்லை. இந்த அற்புத நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாகவே ராணியார் நரசிம்மருக்கு உயர்ந்த அணிகளைச் செய்து அணிவித்தார் என்கின்றனர்.

இவ்வூரில் வசிப்பவர்களில் பெரும் பகுதியினர் தமிழ் நாட்டு வைணவர்களே. அவர்களில் நானூற்றுக்கு மேற்பட்டவர்கள் கோயிலைச் சார்ந்தவர்கள். அவர்களுக்குத் தினப்படி கோயிலிலிருந்து பத்தாயம் கிடைக்கிறது. கோயிலைச் சேர்ந்த ஏவலாளர்கள் பலர் ஹரிஜன சகோதரர்கள். இன்னும் இருக்குலம், ஜாம்பவ குலம் என்ற பெயரோடு புலையர் கூட்டத்தாரும் இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை திருநாராயணனைத் தரிசிக்கக் கோயிலுள் விடுகின்ற பழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இவர்கள் தாம் ராமானுஜர் டில்லி வரை சென்று சம்பத்குமாரனைத் திரும்பவும் மேல் கோட்டைக்குக் கொண்டு வர உதவியவர்கள் என்று வரலாறு கூறுகிறது.

வேங்கடத்துக்கு அப்பால் தொடரில் 'நஞ்சன்கோடு ஸ்ரீகண்டேசுவரர்' என்ற முதல் கட்டுரையில் "நீலகண்டரைத் தமிழ் நாட்டுத் தலங்களில் பல இடங்களில் தேடினேன். நீலகண்டம் என்ற திருநாமத்தோடு ஓர் இடத்திலாவது அவர் என் கண்ணுக்கு அகப்படவேயில்லை" என்று ஆசிரியர் கூறியிருக்கிறாரல்லவா? நம் தமிழ் நாட்டிலேயே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டுக்கோட்டை தாலூக்காவிலுள்ள தாமரங்கோட்டை என்ற ஸ்தலத்தில் ஸ்ரீ கண்டேசுவர சுவாமி என்ற நீலகண்டர் மூலவராகத் திகழ்வதாக இக் கோயிலின் நிர்வாக அதிகாரி திரு க. கந்தசுவாமி அவர்கள் தெரிவிக்கிறார். இதனைப் பற்றி திருடசாத்தனமென்னும் கோவிலூர் மந்திரபுரீசுவர சுவாமியின் ஆதவன புராணத்தில் குறிப்பு இருப்பதாகவும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

—ஆசிரியர்



ஏயர் இந்தியா மற்றும் க்வாண்டாஸ் அவர்களோடு

செல்வீர் கிழக்கே



அலுவலோ, உல்லாசப் பயணமோ,
ஐரோப்பாவுக்குச் செல்ல
இரு வழிகளுண்டு—
வழித்தங்கும் வசதியோடு.

வேறு வழியாகத் திரும்பி வர விரும்பினீர்
களானல், உலகஞ்சுற்றும் சிக்கனச்
செலவு டிக்கட்டின் கட்டணம்:

பம்பாயிலிருந்து	ரூ. 6,173.00
கல்கத்தாவிலிருந்து	ரூ. 6,093.00
டெல்லியிலிருந்து	ரூ. 6,119.00

தவணை முறைப்படி டிக்கட் வழங்கும்
திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

பயணம் முந்தி, பணம் பிந்தி!

உங்கள் பி.ஓ.ஏ.ஸி. ட்ராவல் ஏஜெண்டையோ,
உலகெங்கிலுமுள்ள பி.ஓ.ஏ.ஸி. அலுவலகங்களையோ
அணுகுங்கள்—பணிபுரியக் காத்திருக்கிறார்கள் அவர்கள்.

உலக முழுவதும்

B·O·A·C

உங்களைப் பேணுகிறது.

கூட்டமைந்த பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏயர்வேஸ் கார்ப்பொரேஷன்.





அத்தியாயம் 10

அதிர்ச்சியளித்த அறிவிப்பு

மயக்கும் விழிகளும் மிழற்றும் நகைப்பொலியும் வடிவேலுவைக் கிறங்க வைத்தன. இன்னும் சில கணங்கள் அவளுடைய அந்தக் கோலத்தைக் கண்டும் கேட்டும் அனுபவித்தால் பிறகு உலகில் வேறு எதிலுமே பற்றுதல் இல்லாமல் போய் விடும் என்கிற பயம் பரவியது அவன் உள்ளத்தில். மதர் மதர்ப்பு மங்காத மேனி குலுங்கச் சிரிப்பை உதிர்ப்பதைப் பார்த்தபடியும் பாயும் ஒளி குன்றாத விழிகளால் அவள் இன்பக் கதைகள் பேசுவதைக் கேட்டபடியும் சதா சர்வகாலமும் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். கஷ்டப்பட்டுத் தன்னைத் தானே உலுக்கி எழுப்பிக் கொண்டான் வடிவேலு. "போதும், ராணி! போதும். இனிமேல் சிரிக்காதே! என்னால் தாங்க முடியாது." தொப்பியைக் கழற்றிக் கேசத்தைத் தட்டி ஒழுங்குபடுத்திக் கொண்ட அவன், அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தான்.

நீண்ட நாள் பழக்கத்தில் உரிமை கொண்டாடுகிற பாணியில் விசிறியை மடக்கி அவன் மடியில் எறிந்தான் அவள் அலட்சியமாக. "டீ தயாரித்து எடுத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சமையல் அறைக்குள் நுழைந்தாள். "நானும் வருகிறேன்" என்றான் வடிவேலு. தொப்பியையும் விசிறியையும் மேஜை மீது போட்டுவிட்டு அவளைப் பின்தொடர்ந்தான். 'ஸ்டவ்'வைப் பற்ற வைத்துக் கொடுத்தபடியே, "எல்லாமே கச்சிதமாகப் போய் விட்டன, உன் பாதங்களைத் தவிர" என்றான். "உங்களுடைய நாட்டில் குழந்தைப் பிராயம் முதற்கொண்டே பாதங்களை அழுத்தமாகத் துணியினால் கட்டிவைத்து வளர முடியாமல் செய்து விடுவார்களாமே? கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அதைவிடச் சித்திரவதை வேறு கிடையாது! முன்னொரு காலத்தில் யாரோ ஓர் அரசிக்குப் பிறவியிலேயே பாதங்கள் சின்னவையாக அமைந்து விட்டனவாம். இந்தக் குறைபாடு அவளுக்கு மனச் சங்கடத்தை அளித்ததோ என்னவோ, ஒரு யுக்தி செய்தாள். சிறிய பாதங்களையே அன்றைய நாகரிகமாக்கி விட்டாள். அப்போது முதல் பெரிய பாதங்கள் உடைய பெண்கள் இழிவாகக் கருதப்பட்டனர்!"

"சரி, சரி. வாலறுந்த நரியின் கதை தான்!"

"பல துறைகளிலும் சீன தேசம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருந்த போதிலும் இப்போதுகூட இந்தக் கொடிய பழக்கம் முழுமையாக மறைந்து விட்டதாகச் சொல்ல முடியாது. பழங்காலத்து மனிதர்கள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னால் வரை சிறிய பாதங்கள் இல்லாத ஒரு மங்கை கலியாணம் செய்து கொள்வது என்பது சாத்தியமேயில்லை. அத்தகைய பெண்ணைப் பெற்றவர்கள் அவளுடைய திருமணத்தின் போது பணம் பண்ண முடியாமல் ஏமாற்றம் அடைவார்கள் என்பது மட்டுமல்ல,—பணத்தைக் கொடுத்தால்கூட யாரும் மாப்பிள்ளையாவதற்கு முன்வர மாட்டார்கள்."

"சாதாரணமாகப் பிள்ளை வீட்டார்தான் வரதட்சிணை தருவார்களோ?"

"சந்தேகமென்ன? பெண்ணைப் பெற்றவன் திருமணமானதும் பிள்ளை வீட்டாருக்குத்தானே சொந்தமாகிறாள்? அதற்கு நஷ்டஈடு கிடைக்க வேண்டாமா பெண்ணின் பெற்றோருக்கு?"

"ரொம்பவும் நியாயம்தான். அப்படியானால் வீடுகளில் பிள்ளைகளைக் காட்டிலும் பெண்களைத்தான் அதிகமாகச் செல்லம் கொடுத்து ஆசையோடு வளர்ப்பார்கள் என்று சொல்லு!"

"அதுதான் கிடையாது! பெற்றவர்களையும் மூதாதையர்களையும் அவர்கள் இறந்த பிறகு போற்றி வழிபடுபவன் மகன்தானே? பிதுர் பூஜை சீனாவில் எல்லாக் குடும்பங்களிலும் — அவர்கள் எம்மதத்தவராயினும் சரி,

நடைபெறும். இதற்காகவே பிள்ளை இல்லாத பலர் தத்து எடுத்துக் கொள்வதும் உண்டு.''

''ஓ!'' என்று அதிசயித்தான் வடிவேலு. ''பழக்க வழக்கங்களில் நம்மிரு நாடுகளுக்குமிடையில் நிறைய ஒற்றுமை இருக்கும் போல் இருக்கிறதே'' என்று அவளை மேலே பேசத் தூண்டினுன் ஆர்வத்துடன்.

''புது வருஷம் பிறந்ததும் முதல் பௌர்ணமியன்று தீப அலங்காரங்கள் பிரமாதமாயிருக்கும். வீட்டுக்கு வீடு மீன் போலவும் சர்ப்பம் போலவும் உருண்டையாகவும் இன்னும் விதம் விதமான தினுசுகளில் விளக்குக் கூண்டுகள் செய்வார்கள். அவற்றினுள் தீபங்கள் ஏற்றி வைப்பார்கள்; பட்டாக கடுவார்கள்.''

''ஏறக்குறைய எங்களுடைய தீபாவளிப் பண்டிகையேதான் !''

''வேறு எந்தத் தேசத்தவரும் பின்பற்ருத பழக்கம் ஒன்றைச் சொல்லட்டுமா ? குழந்தை பிறந்ததும் அதற்கு வயது ஒன்று ! புத்தாண்டு தொடங்குகிற தினத்தில் அதற்கு இன்னுமொரு வயது கூடுகிறது. பிறகு ஒவ்வொரு வருஷப் பிறப்பின் போதும் ஒரு வயது பூர்த்தியாகும். ஆகவே புத்தாண்டு தினம் எல்லாருக்குமே பிறந்த நாளும் கூட ! அன்றைக்குத் தேசம் முழுவதும் ஒரே அமர்க்களமாய் இருக்கும்!''

''இன்றைக்குப் புத்தாண்டு தினம் என்ருல் நேற்றுப் பிறந்த குழந்தைக்கு இன்றைக்கு இரண்டு வயதா ? நல்ல வேடிக்கை!'' என்று சொல்லி விட்டுக் கட்டுப்படுத்த முடியாமல் சிரித்தான் வடிவேலு.

டீயைத் தயாரித்து எடுத்துக்கொண்டு அவள் கூடத்துக்கு வந்தாள். சோபாவில் சௌகரியமாகச் சாய்ந்து தேநீர் அருந்தியபடியே அவள் தன் தாய் நாட்டைப் பற்றியும் மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றியும் மூச்சுவிடாமல் உற்சாகத்துடன் கூறிக் கொண்டு போகச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் வடிவேலு.

கலியாணங்களில் சிவப்பு நிறத்துக்கு உள்ள முக்கியத்துவத்தைப் பற்றி அவள் குறிப்பிட்டாள். ''மணமகளுக்கு வகை வகையான துணிமணிகளையும், விதம் விதமான பரிசுகளையும் அனுப்பி வைத்த பின் மாப்பிள்ளைத் தோழன் சிவப்புப் பல்லக்குடன் மணப் பெண் வீட்டுக்கு வருவான், சிவப்பு நிற அழைப்பிதழை அவளிடம் தருவான். மணப் பெண் சிவப்பு முகத்திரை யிட்டுப் பல்லக்கில் ஏறி அமருவாள். கெட்ட தேவதைகள் அவளை அணுகித் துன்புறுத்த முடியாதவாறு ஆறு பக்கங்களிலும் ஒரு சிறு துவாரம்கூட இல்லாமல் அடைத்து விடுவார்கள். புக்ககத்தை அடைந்ததும் மாப்பிள்ளை பல்லக்கின் கதவைத் திறக்க, அவளை உள்ளே தூக்கிப் போவார்கள். முகத்திரையை விலக்கியபின்னர் மூன்று நாட்களுக்கு ஒரே கோலாகலம்தான் !

''இப்போதும் இந்தப் பழைய சம்பிரதாயங்கள் மாருமலே இருந்து வருகின்றன. ஆனுல் பெண்கள் முன்னைப் போல் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடப்பதில்லை. டாக்டர்களாகவும், நர்ஸ்களாகவும் உபாத்தியாயினிகளாகவும், அரசியல்வாதிகளாகவும் தொழில் நடத்துகின்றனர். ஏன், நடிகைகளாக விளங்குபவர்கள்கூட உண்டு. பெண்கள் மேடை ஏறுவது சீனுவைப் பொறுத்த வரையில் ஒரு புரட்சிகரமான முன்னேற்றம்தான். நேற்று வரையில் பன்னிரண்டு பதின்மூன்று வயதுச் சிறுவர்களே பெண் வேஷத்தில் தோன்றி வந்தார்கள் !''

''நடிப்புக் கலையில் உன்னை மிஞ்சக் கூடியவர்கள் யார்?'' என்று கேட்டான் வடிவேலு. ''அன்று நீ என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடியதைப் பின் துரத்தி வந்த ராணுவப் போலீசார் நன்ருகப் பார்த்துக்கொண்டு தானே இருந்தார்கள் ? தப்பி ஓட எனக்கு உதவியதற்காகப் பின்னுல் உன்னைச் சிரமப்படுத்தி யிருப்பார்களே, அவர்கள் ? என்ன நாடகம் நடத்தி அந்தச்சிக்கலைச்சமாளித்தாய் ?''

''மறுநாளே இரண்டு பேர்கள் வந்து விட்டார்கள்! ஆளுக்கொரு



ஸ்டென்காவை என் அன்பளிப்பாகக் கொடுத்தும் ஒரு புன்னகையை வீசியும் சரிக்கட்டி விட்டேன்!''

''எத்தனை தினங்களுக்கு அவர்களை அப்படித் திருப்திப் படுத்த முடியும்? ஒரு வாரத்துக்குப் பிறகு உன்னை நான் சந்திக்க வந்த போதும் அவர்கள் தொந்தரவு ஓய்ந்திருந்ததாகத் தெரியவில்லையே?''

''இடைக்கிறார்கள் விட்டுத் தள்ளு!'' என்றாள் அவள், அந்தப் பேச்சைத் தொடர விரும்பாதவள் போல. ''என்னைப் பற்றிய அபத்தப் பேச்செல்லாம் போதும். நல்லபடியாக ஏதாவது சொல்லு. உன் நாட்டைப் பற்றி விவரி'' என்றாள்.

உற்சாகமாகத் தொடங்கினான் வடிவேலு. பிரவாகமாகப் பொங்கின வார்த்தைகள். சொந்த ஊரை விட்டுச் சுமார் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தவனுக்கு, அது முன்னெப்போதும் அவன் கண்டறியாத அதியற்புத சௌந்தரியத்துடன் கூடியதாகத் தோன்றியது. தேனூர் என்று வாய் விட்டுச் சொன்னதுமே நாவில் தேன் சொட்டி இனிப்பது போல் இருந்தது. அந்தக் கிராமத்தைப் பற்றியும் அதில் வசிக்கும் எளிய மக்களைப் பற்றியும் கதை கதையாக அளந்தான். தன் தங்கையையும் பெற்றோர்களையும் அவளுக்கு இங்கிருந்தவாறே அறிமுகம் செய்து வைத்தான். பெரிய மனிதராகிய பொன்னம்பலத்தைப் பற்றியும் அவர் தமது மகளைத் தன் கழுத்தில் கட்டி விட வேண்டும் என்று ஆவலோடு இருந்தது பற்றியும் கூட அவன் மறைக்காமல் வெளியிட்டான். ''பட்டாளத்திலே சேரப் போவதாகப் பயமுறுத்தி அவரை அந்த முயற்சியிலிருந்து பின் வாங்கச் செய்தேன். நான் கிளம்பும் போது அண்ணனாக என்னை மதித்து நமஸ்கரித்தாள் செல்லம். 'நான் திரும்பி வருவதற்குள் உனக்குக் கலியாணமாகிக் குழந்தையும் கையுமாக உன்னை நான் பார்க்க வேண்டும்' என்று ஆசீர்வதித்து விட்டு வந்தேன்!'' என்றான் வடிவேலு.

''பாவம்! ஏன் அந்தப் பெண்ணை நீ ஏற்றுக் கொண்டிருக்கக்கூடாது?'' என்று கேட்டாள் டையென். ''இந்தப் பாழாய்ப் போன யுத்தத்தில் நீ பங்கெடுத்துக் கொள்ள வில்லையானால் யாருக்கு என்ன நஷ்டம்?''

உடனே வடிவேலுவின் இதய ஆழத்தில் என்றுமிருந்த தாராவின் உருவம் விசுவரூபமெடுத்து அவன் சிந்தனையை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது. அவன் ஆரம்பித்த பள்ளியையும், ஆதரவளித்த குழந்தைகளையும் எண்ணினான். இறுதியாக அவளிடம் செய்து கொண்ட உடன்படிக்கையையும், கான்பூர் சென்று அவள் உமாகாந்துடன் சேர்ந்திருப்பது போல் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை அனுப்பும் வரையில் தான் மாயூரத்திலேயே காத்திருந்ததையும், பின்னர் அதனைத் தேனூருக்குக் கொண்டு போய்ப் பள்ளிச் சுவரில் மாட்டியதையும் நினைத்துக் கொண்டான். புகைப்படம் என்றதும் ஒரு இட்டம் பளிச்சிட்டது வடிவேலுவுக்கு. அதற்குள் தன் கேள்விக்குப் பதில் கிடைக்காத காரணத்தால், ''ஏன் மௌனம் சாதிக்கிறாய்?'' என்று கேட்டாள் டையென். கூடவே கலகல வென்று சிரித்து விட்டு, ''எனக்குப் புரிந்து விட்டது! வேறு ஒரு பெண்ணை நீ காதலித்ததால், சிக்கல் உருவாகிவிட்டதாக்கும்! பிடிக்காத திருமணத்தைத் தவிர்க்க ராணுவத்தில் சேர்ந்தாய்! அப்படித்தானே?'' என்றாள்.

''ஏறக்குறைய நீ சொல்வது வாஸ்தவம்தான். 'என் நெஞ்சில் நிறைந்திருக்கும் அந்தப் பெண்ணுக்கு ராணுவ உடையில் எடுக்கப்பட்ட என் புகைப்படத்தைச் சிவராமன் மூலமாக அனுப்பி வைத்தால் என்ன? என்று திடீரென்று தோன்றியது. அந்த யோசனையில் வாயடைத்துப் போய் விட்டேன்'' என்று கூறி எழுந்தான் வடிவேலு. ''வரட்டுமா? நேரமாகிறது எனக்கு.''

மறு நாளே ஒரு ஜப்பானியப் புகைப்பட நிலையத்துக்குள் நுழைந்து காமிராவின் எதிரே 'போஸ்' கொடுத்தான் வடிவேலு. இரண்டொரு நாட்களில் போட்டோவை உறைக்குள் இட்டு வாங்கிப் போய்ச் சிவராமனிடம் தந்து தாராவிடம் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டான்.

துறைமுகத்தில் நண்பனை வழியனுப்பிவிட்டு ராபின் ஸ்குவாருக்கு டிக்கெட் எடுத்து டிராமில் உட்கார்ந்திருந்த வடிவேலு, சக்கரவட்டமாய்த் தன் சிந்தனை சுழன்று புறப்பட்ட இடத்திலேயே திரும்பவும் வந்து நிற்பதை உணர்ந்து புன்னகை புரிந்தான். அதே நேரத்தில் தான் இறங்க வேண்டிய இடமும் நெருங்கி விட்டதைக் கண்டு டிராம் வண்டியை விட்டுத் தாவிக் குதிக்கத் தயாரானான்.

வீதியில் நடந்தவாறே புகைப்படம் தாராவின் கைக்குப் போய்ச் சேர்ந்ததும் அவன் முகம் எப்படி மாறும் என்று கற்பனை பண்ணிப் பார்த்



தான் வடிவேலு. 'அவள் வதனம் மலருமா? படத்தை என்ன செய்வாள்? யார் கண்களிலும் படாமல் ஒளித்து வைப்பாளா? தனித்திருக்கையில் தினம் ஒரு தடவையாவது அதை எடுத்து ஆசை தீரப் பார்ப்பாளா? அக்கம் பக்கம் நோட்டம் விட்டுவிட்டுத் தன் இதழ்களில் ஒற்றி எடுப்பாளா? மார்புறத் தழுவி இன்புறுவாளா ?.... சேச்சே! அப்படியெல்லாம் அவள் ஒன்றும் நடந்துகொள்ள மாட்டாள். உள்ளத்தில் கள்ளம் குடிகொள்ளத் தன்னைத் தானே கட்டிப் பிடிக்க இயலாமல் திண்டாடும் பருவப் பெண் போல அவள் தன் வசமிழந்து அத்தகைய சிறு சிறு சிருங்கார சேஷ்டைகளைப் புரியமாட்டாள். நாலு பேர்கள் எதிரிலும் சரி, யாருமே இல்லாத போதும் சரி, மிகவும் கௌரவமாகவும் கண்ணியமாகவும்தான் நடந்து கொள்வாள் தாரா!'

ஏதேதோ நினைவுகளில் லயித்த வாறே தான் 'தி டிராக'வுக்கு அருகில் வந்து விட்டிருப்பதைக் கண்டான் வடிவேலு. கதவைத் திறக்க முயன்றான்; முடியவில்லை. பின்னர்தான் அந்த விடுதிக்கு அன்று விடுமுறையாக இருக்கலாம் என்றுபட்டது அவனுக்கு. டையெனுடைய வீட்டை நோக்கி நடையைத் துரிதப்படுத்தினான்.

''இன்றைக்கு 'டியூடி' கிடையாதா உனக்கு? நினைத்தபோதெல்லாம் என்னைப் பார்க்கக் கிளம்பி வந்துவிடுகிறாயே நீ?'' என்ற கேள்வியுடன் அவனை வரவேற்றான் டையென்.

''சரியாய்ப் போயிற்று! இன்று லீவு எடுத்துக் கொள்ளுமுன்னர் நான்பட்ட பாடு! 'இது என்ன உன் மாமியார் வீடென்று மனத்தில் எண்ணிக்கொண்டிருக்கிறாயா, நீ? உன் இஷ்டப்படி எப்போது வேணுமானாலும் எங்கு வேணுமானாலும் போய் வந்து கொண்டிருக்க?' என்று என்னிடம் எரிந்து விழுந்தான் அந்தச் சிடுமூஞ்சி கேவல் சிங். அவன் தலைப்பாகையைத் தட்டி விட்டு விட்டு உச்சி மண்டையில் முடிந்து வைத்திருக்கும் குடுமியைப் பிடித்து உலுக்க வேண்டுமென்று ஆசையாய்த் தான் இருந்தது. மீசை குத்திக் கீறி விடுமே கையை என்றுதான் தயங்கி

னேன். எப்படித்தான் அத்தனை கூர்மையாக அதைத் திறந்து விட்டுக் கொள்கிருனே? படி நெய் பிடிக்கும் ஒரு வேலைக்கு!

அவன் சிரித்தான். ''பிறகு?... மேலதிகாரியிடம் போய்க் காரியத்தைச் சாதித்துக் கொண்டாயோ?''

''ஆமாம். மைக்கேலிடம் நண்பன் சிவராமன் தாய்நாடு திரும்புகிற விஷயத்தைச் சொல்லி உத்தரவு பெற்றுக் கிளம்பினேன். அப்போது கேவல்சிங்கின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! இஞ்சி தின்ற குரங்கு போல....'' என்று கூறி இடிஇடியென்று சிரித்தான் வடிவேலு.

''இப்படிச் சற்று நேரம் உட்கார். உடை மாற்றிக் கொண்டு வருகிறேன். எங்காவது வெளியே உலவி விட்டுத் திரும்புவோம்.''

''நல்ல யோசனை!'' என்று ஒப்புக் கொண்டான் வடிவேலு.

ஒப்பனை செய்து கொள்ள அவள் அடுத்த அறைக்குள் நுழைந்ததும் பொழுது போக்காக ரேடியோவைத் திருப்பினுன். மலாய் நாட்டில் பேசப்படுகிற நான்கைந்து மொழிகளிலும் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பானதால் தனக்குப் புரிகிற மாதிரியாக எதையும் அப்போது கேட்க முடியும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கவில்லை அவன். ஆனால் அதிர்ஷ்டவசமாக ஆங்கிலத்தில் யாரோ பேசுவது காதில் விழவே உன்னிப்பாய்க் கவனித்தான். ஈயத்தைக் காய்ச்சிச் செவிகளினுள் ஊற்றுவது போல் தான் இருந்தது அவனுக்கு.

''இந்தியாவுக்குப் புறப்பட்ட ஸ்ரீதர் கப்பல் சிங்கப்பூர் துறைமுகத்திலிருந்து சுமார் ஐந்து மைல் தூரம் சென்றதும் ஒரு விபத்தில் அகப்பட்டுச் சமுத்திரத்தில் மூழ்கி விட்டது. ஜப்பானியத் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முன்னேற்பாடாகப் போடப்பட்டுள்ள கடற்கண்ணிகளுள் ஒன்றின் மீது மோதியே ஸ்ரீதர் பிளந்து விட்டதாகக் கூறப்படுகிறது. அலைகடலில் தத்தளிக்கும் பிரயாணிகளைக் கரை சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது....''

விசேஷ அறிக்கையை வானொலி அறிவிப்பாளர் கூறிமுடிக்கும் வரையில் காத்திருக்கவில்லை வடிவேலு. தொப்பியை எடுக்க ஒரு கரத்தை நீட்டுகையில் வாசல் கதவைத்திறக்க மற்றொருகரம் நீண்டது;

உள்ளே புத்தாடை உடுத்திக் கொண்டிருந்த டையென் செய்தியைக் கேட்டாள். வடிவேலுவின் பதற்றத்தை உணர்ந்தாள். அங்கிருந்தவாறே,''நண்பன் சிவராமனையும் அழைத்துக்கொண்டு நேராக இங்கே வந்து சேர்'' என்று ரொம்பவும் நம்பிக்கையுடன் சத்தம் போட்டுக் கூறித் தெம்பு ஊட்டினுள். அதே கையோடு அவனுக்குப் பரிவோடு விடை கொடுத்தும் அனுப்பினுள்.



அத்தியாயம் 11

வெள்ளையரின் வஞ்சனை

தலை தெறிக்க ஓடினான் வடிவேலு. டாக்ஸி ஒன்றைப் பிடித்து அதில் ஏறிக் கொண்டு துறைமுகத்துக்கு விடச் சொன்னான்.

அவனைப் போலவே செய்தியைக் கேள்வியுற்றுக் கப்பலிலிருந்த தங்கள் நண்பர்கள் என்ன ஆனார்களோ என்ற கவலையோடு குழுமியவர்கள்; தங்களுக்கு நெருங்கியவர்கள் யாருமே அதில் பிரயாணம் செய்யாமல் போனாலும் விபத்துக்குள்ளானவர்களுக்குத் தங்களாலியன்ற உதவியைச் செய்யும் நோக்கத்தோடு வந்தவர்கள்; வெறுமனே வேடிக்கை பார்க்கவென்றே திரண்டிருந்தவர்கள்; இப்படிப் பலதரப்பட்டவர்களின் கூட்டத்தை விலக்கிக் கொண்டும், போலீஸ் பாராவைத் தாண்டியும் எப்படியோ கப்பல் கரை தட்டும் தளத்தை அடைந்தான் வடிவேலு. அலைகடலில் அகப்பட்டு அல்லலுற்றவர்களைக் காப்பாற்றும் வேலைகளெல்லாம் அநேகமாய் முடிந்துவிட்டதென்றும், ஒரு சிலரையே தப்புவிக்க முடிந்ததென்றும் மற்றவர்களை மாண்டவர்களாகக் கருத வேண்டியதுதான் என்றும் கேட்டறிந்து கொண்டான்.

வடிவேலுவை ஆசை விடவில்லை. 'மரணத்தின் வாயிலிருந்து அதிர்ஷ்டவசமாக மீண்டவர்களுள் சிவராமனும் ஒருவனாய் ஏன் இருக்கக் கூடாது?' ஒரு பக்கத்தில் அலைக் கரங்களின் மரணப் பிடியிலிருந்து மீட்கப்பட்டவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். சிவராமன் அவர்களுக்கிடையில் இருப்பானோ என்று வடிவேலு அதிக நேரம் ஆராயவில்லை. அதற்கு அவசியமும் இருக்கவில்லை. ஏனெனில் அவர்கள் அத்தனை பேரும் வெள்ளையர்கள். வேறு புறம் திரும்பினான் அவன். 'ஸ்ட்ரெச்சர்'களில் படுத்து முதல் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார்கள் ஒரு சிலர். அவர்களிலும் ஓர் இந்தியனைக் கூடக் காணோம். 'ஆம்புலன்ஸ்'கள் வருவதும் போவதுமாய் இருக்கவே, அதிகமாகக் காயம் அடைந்தவர்கள் எந்த ஆஸ்பத்திரியில் வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள் என்பதை விசாரித்துத் தெரிந்து கொண்டு அவசரம் அவசரமாக அங்கே போய்ச் சேர்ந்தான். மூழ்கிய கப்பலிலிருந்து கடவுளருளால் காப்பாற்றப்பட்டு அங்கே அழைத்து வந்து சேர்க்கப்பட்டவர்களின் பட்டியலை வாங்கிப் படித்தான். அவ்வளவும் மேனாட்டவரின் பெயர்கள்.

வைத்தியசாலையை விட்டு வெளியே வந்தவனுக்குச் சட்டென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. ஜப்பானியர் கடல் மார்க்கமாகத் திடீரென்று சிங்கப்பூரைத் தாக்கினால் தற்காப்புக்காக இருக்கட்டும் என்று பிரிட்டிஷ் கடற்படையினர் 'மைன்லேயர்' எனப்படும் கப்பலைப் பயன்படுத்திக் கரையோரக் கடலின் ஆழத்தில் போட்டு வைத்த கண்ணிகள் ஏராளம். அவற்றுள் ஒன்றன் மீது எச்.எம்.ஐ.எஸ். ஸ்ரீதரின் அடிவாரம் மோதியதால் அந்தக் குண்டு வெடித்துக் கப்பலைச் சேதப் படுத்தியிருக்கலாம். மேலே கலம் மிதக்கும் போது ஏற்படுகிற காந்தசக்தி மாறுதல்களால் இயக்குவிக்கப்படுகிற கடற்கண்ணிகளும் உண்டு. கப்பலின் இயந்திரத்திலிருந்து கிளம்பும் ஒலி அலைகள் நீரின் வழியே பாய்ந்து சென்று ஆழத்தில் அமிழ்ந்து கிடக்கும் ஒரு விதக் குண்டை வெடிக்கச் செய்து கப்பலுக்குச் சேதத்தை விளைவிக்கும் என்பதும் வடிவேலுவுக்குத் தெரியும். எப்படியானால் என்ன? கடற்கண்ணிகள் போடப்பட்டிருக்கும் இடங்களைக் கடற்படைத் தளபதிகள் நன்றாக அறிவார்கள். 'மைன் ஸ்வீப்பர்' எனப்படும் கப்பலின் உதவியுடன் ஸ்ரீதர் பயணப்படுவதற்கு முன்பாகவே அந்தக் கடற்கண்ணிகளை அவர்கள் அப்புறப்படுத்தியிருக்கக் கூடாதா? அல்லது ஸ்ரீதரின் காப்டனை எச்சரித்தேனும் இருக்கக் கூடாதா, இன்னின்ன திசைகளில் செல்லலாகாதென்று?

வடிவேலுவின் மெய் சிலிர்த்தது அருவருப்பினால். 'அத்தகைய கோரமும் நடைபெற்றிருக்குமோ? வேண்டுமென்றே கப்பலை மூழ்கடித்து நூற்றுக் கணக்கான இந்தியச் சிப்பாய்களின் உயிரைப் பலி வாங்கி விட்டார்களா?' மூளைக்கு வேலை கொடுக்கக் கொடுக்க ஆங்கிலேயர்களின் கொடிய வஞ்சனையின் விளைவுதான் இது என்ற எண்ணம் முன்னிலும் உறுதியடைந்தது.

இல்லாமற் போனால் நண்பன் சிவராமனை வழியனுப்பி விட்டு வெளியே வந்தவன் மைக்கேலின் தலைமையில் அவன் பட்டாளம் எதற்கும் சித்தமாய் இருந்ததைக் காண நேர்ந்தது எப்படி? அதே சமயத்தில் ஆம்புலன்ஸ் வண்டிகளும் வைத்தியர்களும் தருவிக்கப்பட்டுத் தயாராக இருந்தது எவ்வாறு? கப்பலுக்கு ஆபத்து நேரப் போவதை முன்கூட்டியே தீர்மானித்திருந்ததால் தானே அவ்வளவு முன்னெச்சரிக்கை


ரூ.5,395 பரிசுகளாக வெற்றி பெறுங்கள்
'ஆஸ்ப்ரோ' திறமைப் போட்டி

முதற்பரிசு:




12 வருட தேசிய இட்ட சேமிப்பு பத்திரம். தற்போதைய மதிப்பு ரூ.2,000. 12 வருடங்களுக்குப் பின் ரூ.3,300.

இரண்டாவதுபரிசு:



மர்பி ரேடியோ மதிப்பு ரூ.865.00.

மூன்றாவதுபரிசு:



உஷா தையல் மிஷின் மதிப்பு ரூ.530.00.

தகுதிப்பரிசு:



50 பார்க்கர் பால்பாயிண்ட் பேனாக்கள், மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.14.00.

இந்த கண்ணாடி ஜாடியில் எவ்வளவு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் அடங்கும் என்பதைக் கணக்கிடுங்கள்!

ஜாடியின் பரிமாணங்கள்:–
26 செ. மீ. x 52 செ. மீ.
நான்கு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கொண்ட ஒவ்வொரு பட்டையின் பரிமாணங்கள்:
13 செ. மீ. x 3·9 செ.மீ.



அருகாமையிலிருக்கும் உங்கள் ஆஸ்ப்ரோ வியாபாரியிடம் எல்லா விபரங்களும், பிரவேசக் கூபன்களையும் பெற்றுக்கொள்ளவும்.



தலைவலி, ஜுரம், ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவிற்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் - மீண்டும் நிச்சயமாக சுகம் பெறுங்கள்

ஒரு நிக்கொலஸ் (N) தயாரிப்பு

தரத்திற்கும் நன்மைக்கும் நீங்கள் பெறும் உத்தரவாதம்.

A.C.150 TML

யுடன் காரியங்களைச் செய்வது சாத்திய மாயிற்று? இந்திய ராணுவத்தினர் பலரையும் அவர்களுக்குச் சந்தேகம் எழாதிருக்க ஐரோப்பியர் சிலரையும் எமனுலகை எட்டிப் பார்க்க ஒன்றாக ஏற்றி அனுப்பி விட்டுப் பின்னால் வெள் ளையரை மட்டும் கரை சேர்த்து மற்ற வர்களைச் சாக அடித்து விட்டார்கள்! திட்டமிட்டுச் செய்த படுகொலை இது என்பதில் ஐயமில்லை. போனால் போகட் டும் என்றேனும் ஒரே ஒரு இந்தியனைக் கூட இவர்கள் காப்பாற்றாதது அதனை நிரூபிக்கிறது!

"சிவராமா! சில மணி நேரத்துக்கு முன்னால், 'உன்னை மீண்டும் எப்போது பார்ப்பேனோ? கடைசிச் சந்தர்ப்பம் இல்லையா இது?' என்று கேட்டேனே, அது இப்படி விபரீதமாகவா முடிய வேண்டும்? 'உன் காதலியிடம் நீ கொடுக்கச் சொன்னது போட்டோ தானா அல்லது ராணுவ ரகசியங் களா என்பதை உறையை உடைத்துப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்' என்றாயே வேடிக்கையாக. 'எதிரியின் ஒற்றர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டால் தூக்குத் தண்டனை பெறப் போவது நான்தானே?' என்று கிண்ட லாய்க் கேட்டாயே! அத்தகைய தேசத் துரோகம் எதுவும் நீ செய்யாமலே உனக்கு இந்தச் சண்டாளர்கள் மரண தண்டனை விதித்து அதை நிறைவேற்றி யும் வைத்து விட்டார்களடா!"

பித்துப் பிடித்தவன் போல் அவன் வாசலில் நிற்பதைக் கண்டு திகைத்தான் டையென். பின்னர் ஒருவாறு தன் நிலை பெற்று அவன் கையைப் பற்றி அழைத்து வந்து உட்காரச் செய்தான். "என்ன நேர்ந்தது?"

"என்னவா?" என்று மெல்லக் கேட்டு விட்டு, "கொலை!" என்று அலறினான் வடிவேலு. 'படார் படார்' என்று தலையில் போட்டுக் கொண்டே அதை வார்த்தையை இடைவிடாமல் தொண்டை கிழியக் கத்தியவாறிருந் தான்.

கதவைத் தாளிட்டு விட்டு வந்து அவ னருகில் அமர்ந்து கண் துடைக்கப்போன அவன் கரங்களில் முகத்தைப் புதைத் துக் கொண்டு, "டையென்! ஒருவ ரில்லை, இருவரில்லை! நூற்றுக் கணக் கில் என் பாரத நாட்டுச் சகோதரர் களைக் கொன்று விட்டார்கள் டையென்!" என்று அழுது புலம்பினான். வீதியிலிருந்தவரை துக்கத்தை வெளிக் காட்டத் துணியாதவன், இங்கே தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் திணறினான்.

சுயராஜ்யம்

அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளி லிருந்து விடுபடுவதற்காகச் செய்யும் இடையறாத முயற்சியே சுயராஜ்யம் என்பது. அந்நியர் ஆட்சி போயவே நம்மவர் ஆட்சிக்கும் இது பொருந்தும். மக்கள் தமது வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கத்தை எதிர்பார்ப்பார்களே யானால் அந்நிலையில் 'சுயராஜ்ய' சர்க் காரும் வருந்தவேண்டிய விஷயமாகும்.

— காந்தியடிகள்

"என் நண்பர்கள் இந்தியாவுக்குக் கப்பலேறியதுடன் வெள்ளையர் தங்கள் மானமும் கப்பலேறி விட்டதாய் எண்ணி யிருக்க வேண்டும். ஆஸ்திரேலியாவுக் குப் போக மாட்டோம் என்றதற்காக அத்தனை பேரையும் கரு மீன்களுக்கு ஆகாரமாக்கி விட்டார்கள். நேரடி நடவடிக்கை எடுக்க முடியாதென்பதால் சதி செய்து சகலரையும் சாக அடித்து விட்டார்கள்!" விம்மல்களுக்கிடையில் வார்த்தைகள் வெளிப்பட்ட போது இருதயம் வெடித்து விடும் போலிருந் தது வடிவேலுவுக்கு. தன் வசமிழந்து அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

பக்கத்திலிருந்தவனின் கரங்களைப் பற்றித் தடுத்துக் கண் துடைத்தான் அவன். தோளில் அவன் சிரத்தைச் சாய்த்துக் கொண்டு ஆசுவாசப் படுத்தி னான். சிறிது சிறிதாக நடந்தவற்றைத் தெரிந்து கொண்டான்.

"வெள்ளைக்கார சாகேப்பினால் ஒரு தவறும் செய்ய முடியாதே!" என்றான் டையென்.

துயரத்தை மீறிக் கொண்டு கோபம் பொங்கியது வடிவேலுவுக்கு. "என்ன துணிச்சல் உனக்கு?" என்று துள்ளி எழுந்த அவன், பற்களை நறநறவென்று கடித்தான்.

டையென் அமைதி இழக்கவில்லை. "வெள்ளைக்கார சாகேப்பினால் ஒரு தவறும் செய்ய முடியாது! அவன் சொல் வதெல்லாம் வேதவாக்கு; செய்வதெல் லாம் தெய்வச் செயல்! இங்குள்ள மக்களின் மனங்களிலெல்லாம் அந்தக் கருத்தைத்தானே அரும்பாடு பட்டு ஆழப் பதிய வைக்க முயன்று அபார வெற்றி அடைந்திருக்கிறார்கள் ஆங்கி லேயர்கள்? அவ்வாறு இருக்க வெள்ளை யன் குற்றம் புரிந்தான் என்று நீ சொன் னால் யார் ஒப்புக் கொள்வார்கள்?"

"வாஸ்தவம்தான்" என்றான் வடி வேலு. "இந்தியச் சிப்பாய்கள் பலரே

உண்மை ஜனநாயகம்

அதிகமாக அரசாங்கத் தலையீடு இன்றியே தனது விவகாரங்களைச் சிக்கலின்றியும், திறமையாகவும் நிர்வகிக்கும் நாடுதான் உண்மையான ஜனநாயக நாடாகும். இந்நிலை கைகூடாவிடில் ஓர் அரசாங்க அமைப்பை ஜனநாயகம் என்று கூறுவது பெயரளவுக்குத்தான் சரியாகும்.

— காந்தியடிகள்

அத்தகைய பிரமையில் கட்டுண்டு கிடக்கிறார்கள். நீதியும் நேர்மையும் எங்கே நிலவப் போகிறது?'' வருத்தத்துடன் ஆசனத்தில் மீண்டும் அமர்ந்த அவன், வேதனையைத் தாங்க மாட்டாது தலை குனிந்து கரங்களுக்கிடையில் நெற்றிப் பொட்டுக்களை வைத்து அழுத்திக் கொண்டான்.

''நானறிந்து இதுவரையில் ஒருவெள்ளைக்கார சாஹேப் நிச்சயமாக ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறான். பிரிட்டிஷாரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் பங்கம் ஏற்பட்டு விட்டதாய் எண்ணி அவர்களுடைய போலிக் கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்தில் பழிவாங்கும் படலம் தொடங்கப் போகிறது இன்றைக்கு; இந்தியப் பட்டாளத்தினர் பலர் பலியாகப் போகிறார்கள் என்பதை முன்னதாகவே அறிந்திருக்க வேண்டும் மேஜர் ஸ்பென்ஸர். அவ்வாறு உயிர் துறக்கப் போகிறவர்களில் உன் நண்பனும் ஒருவனாக இருக்கப் போகிறான் என்பதையும் அவனைப் பறி கொடுத்து விட்டுப் பரிதவிக்கப் போகிறாய் நீ என்பதையும் அவன் உணர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் மிகுந்த அனுதாபத்தோடு இந்த 'சாம்பெயின்' பாட்டிலை இங்கே விட்டு வைத்து விட்டுப் போயிருக்கிறான்!'' என்றவாறே ஒரு கண்ணாடிக் கோப்பையில் மதுவை ஊற்றிக் கொடுத்தாள் அவள்.

மதுக் கோப்பையை அவன் வாங்கிக் கொள்ளாதது கண்டு அவள் தோள்கள் ஒரு முறை குலுங்கி விழுந்தன. அப்படியே அதனை அவள் தன் தொண்டையில் கவிழ்த்துக் கொண்டாள். மறுபடியும் கோப்பையை நிரப்பி அவனெதிரே வைத்தாள். ''இந்தா! இதுதான் உன்னுடைய கவலையைக் குறைக்கப்போகிறது.''

வடிவேலு வெறுப்புடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். ''உன் உடம்பு உணர்ச்சிகளேயற்று மரத்துப் போய் விட்டதா?''

சோபாவின் மறுமூலையில் அவள் சாய்ந்து கொண்டாள் ஒய்யாரமாக. ''கண்ணியமானவளாகப் பாசாங்கு செய்ய நான் ஆசைப்படவில்லை. உன் நண்பனுக்காகக் கண்ணீர் உருக்கவும் தயாராக இல்லை.''

''நீ சொல்லாமலே அது தாராளமாய்த் தெரிகிறது'' என்று எரிச்சலுடன் பேசினான் வடிவேலு. ''அதற்காக நானும் மதுவருந்தி மகிழ்ந்து நண்பனின் மறைவை மறக்க வேண்டுமென்கிறாயா? மனிதத் தன்மையை இழக்க வேண்டுமென்கிறாயா?''

''புதிதாக நீ ஒன்றும் மாறிவிடப் போவதில்லை!''


வடிவேலு அவள் கரத்தைப் பற்றி அருகில் இழுத்தான். முகவாயைத் தாங்கி வலுக்கட்டாயமாக உயர்த்தி நேருக்கு நேராக அவள் தன்னைப் பார்க்குமாறு செய்தான். ''நீ கூறியதற்கு என்ன அர்த்தம்? ஏற்கெனவே நான் விலங்கினத்தைச் சேர்ந்தவனாக விளங்குகிறேன் என்பதுதானே? இன்னும் ஒரு வார்த்தை இப்படி ஏதாவது ஏசினால் இரண்டு கன்னங்களும் வீங்கிக்கொள்ளும், ஜாக்கிரதை!'' என்று கூறிவிட்டு அவளைப் பின்னுக்குத் தள்ளினான்.

பழையபடி சொகுசாகச் சோபாவில் சயனித்துக் கொண்ட அவள், சற்றும் கலங்கவில்லை. ''இன்று நீ உன் நண்பர்கள்—பாரத நாட்டுச் சகோதரர்கள் இறந்ததற்காக அழுது புலம்புகிறாய். நாளை எத்தனை ஜப்பானியர்களை உன் கையினாலேயே கொன்று குவிப்பாய்? ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்துவாயா அப்போது?''

''உன் மூளை குழம்பிப் போயிருக்கிறது'' என்றான் அவன். ''கொலை புரிவது கோழைத்தனம்; யுத்தம் செய்வது வீரம்!''

''உக்கிரமான போர்முனையில் நானும் சிக்கியிருக்கிறேன். அதனால் நாடு நகரத்தில் ஒரு பாவமும் அறியாத சாதாரண மக்களிடையே ஏற்படுகிற விபரீத விளைவுகளை நேரில் நிறையக் கண்டிருக்கிறேன். வீரம் என்ற பெயரால் நடைபெற்ற அட்டூழியங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய அக்கிரமங்களுக்கு இடமளிக்கிற யுத்தம் அதர்மமானதுதான். என்னைப் போன்ற பைசாசங்களைச் சிருஷ்டிக்கிற சண்டை அநாகரிகமானதாகத்தான் இருக்க முடியும். ஆகவே அதில் பங்கு கொள்கிற சிப்பாய்கள் நாகரிக மற்றவர்கள்தான், கண்ணிய மற்றவர்கள்தான்'' என்றவாறே ராணி மதுக் கோப்பையை அவன் கரத்தில் திணித்தாள்.

(தொடரும்)



இளைப்பாறலாம்
உங்கள் ஆடைகள்
சிறிதும் கசங்காமல்
எடுப்பாக இருக்கும்



ஏனெனில்

மோடிக்ரான்

மடிப்புக் கலையாமல் எப்பொழுதும் புதிய சலவைத்
துணிகளைப்போலவே தோற்றமளிக்கிறது
தண்ணீரில் நனைத்துத் துவைத்து உடுத்தலாம். இஸ்திரி அவசியமில்லை

மோடி ரேயான் அண்டு ஸில்க் மில்ஸ்
உரிமையாளர்கள்
தி மோடி ஸ்பின்னிங் அண்டு வீவிங் கம்பெனி லிமிடெட்
மோடிநகர் (உத்திரப் பிரதேசம்)

NF/MSW/1


முன்னேறியவாறு சென்றார்...

1920ல் இளைஞர் பி.கே. சாட்டர்ஜி, பள்ளிப் படிப்பு முடிவடைந்ததும் டாடா ஸ்டீல் கம்பெனியில் திட்டப்படம் வரையும் (டிராஃப்ட்ஸ்மேன்) தொழில் பயிலுபவராக அமர்ந்தார்.

படிப்பிலே உற்சாகத்துடனும் வாழ்க்கையிலே முன்னேறும் லட்சியத்துடனுமாக அவர், ஓய்வு நேரங்களில் தொழிற்கலை கற்க வாய்ப்பு அளிக்கும் கம்பெனிப் பள்ளியில் சேர்ந்தார். இளைஞர் சாட்டர்ஜியே பொறியியல் கலையை மூன்று ஆண்டுகள் முற்றும் கற்றுத் தேர்ந்தவர்களுள் ஒருவர்!

அந்த நாட்களில் அவருக்கு அக்கறை மிகுந்திருந்த பொறி இயல் இலாகாவிலும் உருக்கு உலைகளிலுமாகப் பணியாற்றியிருக்கிறார். ஜம்ஷெட்பூர் தொழிற்சாலையில் உருக்கு உலைகளைப் புதுப்பிப்பதில் உதவி செய்திருக்கிறார். அந்த வகையிலே அவரது அமைப்புத்திறமைப்படி உருவாக்கிய நாளொன்றுக்கு 1,000 டன் உருக்கும் உலை, இந்தியாவிலேயே முதலாவது அரிய முயற்சியாகும்!

திரு சாட்டர்ஜி இப்பொழுது விசேஷமான திட்டங்களுக்கு துணைத் தலைமை என்ஜினியர் பொறுப்பு ஏற்று பணியாற்றிவருகிறார். பல இடங்களுக்கும் பிரயாணம் செய்திருப்பதுடன் உலக உருக்கு உலை அமைப்பாளர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளார்.



ஜம்ஷெட்பூரில் புதியன படைக்கும் திறமை, நன்கு மதிக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றது என்பதற்கு சாட்டர்ஜி மற்றொரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்! தொழில் நகரமாகிய ஜம்ஷெட்பூர் வெறும் ஜீவனோபாயத்திற்கு மட்டுமல்ல வாழ்க்கைக்கே ஓர் வழியாகத் திகழ்கின்றது.

ஜம்ஷெட்பூர்

எஃகு நகரம்



he Tata Iron and Steel Company Limited

JWTTN 3999A


ஓட்டப்பந்தயம்
-9-
கதை:
சித்திரம்: செல்வம்
என்ன அத்தான்! அப்படிப் பார்க்கிறீர்கள்? இவர் தான் என் அப்பா, அதாவது உங்களின் மாமா. நாங்கள் சென்னைக்கே குடிவந்து விட்டோம்.
அப்படியா? வணக்கம் மாமா.
உம். அடையாளமே தெரியவில்லையே! சின்ன வயசில் பார்த்தது.
பஞ்சு, உன்னிடம் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும்.
பஞ்சு, என் மகள் உன் மீது உயிராக இருக்கிறாள். நீ அவளை...
என்னை மன்னித்து விடுங்கள் மாமா. நான் வேறொரு பெண்ணைக் காதலிக்கிறேன்.
என் மகள் வேறொரு ஆணைக் காதலிக்கவில்லையே! பஞ்சு, நீ மறுத்தால் நான் கட்டாயப்படுத்த வேண்டியிருக்கும்.
அதெல்லாம் என்னிடம் ஒன்றும் நடக்காது.
பஞ்சு, உன் நிலையை மறந்து பேசாதே. நீ இப்போது போலீஸார் தேடும் ஒரு குற்றவாளி!
டாக்டர் சேகர் தான் இன்னும் உயிரோடு இருக்கிறாரே.


உயிரோடு இருந்தால் போதுமா? அவரைக் கொலை செய்ய முயன்றால் எந்த சட்டப்பிரிவு உன் குரல்வளையை நெருக்காமல் விடாது.
சேகர் பைத்தியம் தெளிந்து உண்மையைச் சொல்லிவிட்டால்?
பைத்தியம் தெளியாமலேயே இருக்கும்படி நான் ஆக்கிவிட்டால்?
வேண்டாம், மாமா. நம் சொத்து விவகாரத்துக்குச் சேகரைப் பலியாக்காதீர்கள்.
காமினி! உன் அத்தான் சம்மதித்து விட்டான். அடுத்த வாரம் கல்யாணம்.
ஹாய்யா!
பூரிக்காதும்! உன்னோடு பழகியதை நான் மறந்துவிட வேண்டுமென்கிறார்களே. நரகாசுரியாம் நரகாசுரி? நரபலி என்னுயிர் காவு கொடுக்கவேண்டும்.
ஆறுமுகம், இந்தக் கல்யாணத்தில் எனக்கு விருப்பம் கிடையாது. இது கட்டாயக் கல்யாணம்.
கட்டாயக் கல்யாணமாக இருந்தாலும் செட்டாகப் பாக்குணுபணம் எல்லாம் கிடைக்கிறதே.
உளறாதேடா. இதிலிருந்து தப்ப வழியா?
பார்க்கிறது என்ன- மறுபடியும் ஓட்டப்பந்தயம் ஆரம்பிப்போமா?
நாம் மட்டும் போய்ப் பயனில்லை. டாக்டர் சேகரையும் கூட்டிக்கொண்டு போகவேண்டும்.



பந்துவின் யோசனைப்படி சேகரின் மனைவி சுசீலாவைத் தனிமையில் சந்தித்து நரஹரியின் வஞ்சகப் பேச்சை விளக்குகின்றனர்.
சீ, டாக்டர் என்ற பட்டத்துக்கே நரஹரி ஒரு களங்கம். இப்போதே இன்ஸ்பெக்டரிடம் சொல்லி...
நில்லுங்கள். போலீஸில் சொன்னால் முதலில் என் கைக்கு விலங்கு மாட்டி விடுவார்கள்.
மாட்டட்டுமே. இந்தக் கட்டாயக் கல்யாணத்திலிருந்தும் தப்பலாம். நரஹரியால் ஒன்றும் செய்யமுடியாது. ஜெயில் ரொம்பப் பாதுகாப்பான இடம்.
ஆனால் சேகர்தான் பாதுகாப்பின்றிப் போவார். அவருடைய எதிரிகள் அவரைக் கண்டுபிடித்து...
ஐயோ, தொலைத்தீர்கள் அதை. இப்போது புரிகிறது நம்மை எதிர்நோக்கி இருக்கும் ஆபத்து.
ஒரு யோசனை. உங்கள் கணவரை, வேறுவழியாக ஒரு நர்ஸிங்ஹோமுக்கு நாமே அழைத்துப் போய்விட்டால்...
சுசீலா சம்மதித்து விட்டாள்.
அன்று மாலை...
அத்தான் இன்றைக்கு என்ன நிகழ்ச்சி, டிராமா, சினிமாவா?
சினிமாவுக்கு நாலு டிக்கட் ரிசர்வ் செய்தேன். மாலதியும் ஆனந்தும் கூட.
அவர்கள் எதற்கு?
வரட்டுமே... வேடிக்கையாகப் பொழுது போகும்.
அரை மணிக்குப் பிறகு
நர்ஸிங்ஹோமில் காத்திருக்கிறார்கள்!
மாமாவிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்லவேண்டும்.
ஐயா இங்கு இல்லை... டிரைவர் காரை விடப்பா.
அதேசமயம் மாலதி காமினியின் வாயை இறுகப் பொத்தினாள்.


(தொடரும்)

4	8	4	2	7	6
7	3	10	8	4	1
3	4	1	2	3	4
2	8	5	3	6	7

முயன்றால் முடியாததுண்டோ?

அருகேயுள்ள கட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வீடு. ஒவ்வொரு கட்டத்திலுள்ளிருக்கும் இலக்கமும் அந்த வீட்டிலுள்ள நபரைக் குறிக்கிறது. ஒரு ஜமீந்தார் தன் நிலத்தில் இப்படி 24 வீடுகளைக் கட்டிப் போட்டிருந்தார். ஒரு நாள் அவருக்கு ஒரு விநோதமான எண்ணம் தோன்றியது. தமது மொத்த வீடுகளை 8 பாகமாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் உள்ள வீடுகளில் இருக்கும் நபர்களின் எண்ணிக்கை பதினாலாகவும் இருக்க வேண்டும். முடியுமா என்று எண்ணமிட்ட ஜமீந்தாருக்கு அவரது கணக்குப்பிள்ளை அவர் விருப்பப்படி பிரித்துக் காட்டினான். எப்படி? உங்களால் முடியுமா என்று முயன்று பாருங்கள்.

ரமணிக்கு நாய்கள் என்றால் உயிர். விதம் விதமான நாய்களை எல்லாம் வாங்கி வளர்த்து வந்தான். அவனிடம் இப்போது ஆறு நாய்க்குட்டிகள் இருந்தன. அவைகளுக்குத் தனித் தனியே அழகிய வீடுகளைக் கட்டி இருந்தான். தோட்டத்தில் ஏழு வீடுகள் இருந்தன. ஆனால் நாய்களோ ஆறுதான். ஒவ்வொரு நாய்க்கும் ஒரு குறிப்பிட்ட எண் உண்டு. அதன் கழுத்தில் அதற்குரிய இலக்கம் பொறித்த தகடு தொங்கும். நாய் வீடுகளுக்கும் இலக்கம் உண்டு. ஒரு நாள் இரவு தெருவில் ஏதோ கூச்சல் கேட்டது. உடனே நாய்களெல்லாம் குரைத்தபடி தெருவுக்கு ஓடின. பிறகு அவைகள் திரும்பிய போது அவசரத்தில் வீடு மாற்றிப் புகுந்து விட்டன. ஒவ்வொரு வீட்டிலும் எந்த எண்ணுள்ள நாய் புகுந்திருக்கிறது என்பதைத்தான் மேலே காட்டி இருக்கிறது. ஒரு வீடு மட்டும் காலி. இப்போது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நாய்களை அதனதன் வீடுகளில் கொண்டு போய் அடைக்க வேண்டும். மிகக் குறைந்த அளவான பத்துத் தடவைகள் மட்டும் நகர்த்துவதன் மூலம் இதைச் செய்ய வேண்டும். இதற்குக் காலி வீட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




வட்டமான இலக்கங்களைக் கத்தரித்து, பழைய டிராயர் பித்தான்களை உன் அம்மா எடுத்து வைத்திருப்பாளல்லவா; அதன்மீது ஒட்டிக் கொள்ளுங்கள். பிறகு சதுரங்களில் குறித்துள்ள இலக்கங்களுக்குச் சரியான எண் ஒட்டியுள்ள பித்தான்களை அந்த இடத்தில் வைத்துக் கொண்டு நகர்த்த ஆரம்பியுங்கள். நினைவிருக்கட்டும், பத்துத் தடவைகள்தான் காய்களை நகர்த்தலாம். 5, 2, 4 உள்ள இடத்தில் 1, 2, 3-ம் 3, 1, 6 உள்ள இடத்தில் 4, 5, 6-ம் வர வேண்டும். நிதானமாக ஆடிப் பாருங்கள்.



நீங்கள் சேகரிக்க ஆரம்பித்திருக்கும் உலக மக்களும் அவர்களின் நாகரிகங்களும் என்ற பகுதிக்கு இந்த வாரத்துப் படம் என்ன, தெரியுமா? ஆப்பிரிக்கா தேசத்தில் வாழும் 'ஸூலு' என்ற இனத்தாரின் போர்த்தலைவர்தான் இவர். இவரது உடைகளுக்கு வர்ணம் தீட்டி அழகுபடுத்துங்கள், பார்க்கலாம்.

அடாக்ஸ் மான்


அருகேயுள்ளது ஆப்பிரிக்கப் பாலைவனப் பகுதிகளில் வாழும் ஒரு வகை மான். இந்த மானின் உயரம் மூன்றரை அடி. இதன் கொம்புகள் ரொம்ப அழகானவை. வளையம் வளையமான கணுக்களோடு கம்பீரமாக வளர்ந்து நீண்டிருக்கும். மான் வகைகளில் ஆண்களுக்குத்தானே கொம்பிருக்கும்? ஆனால் அடாக்ஸ் மான்களில் ஆண் பெண் இரண்டுக்குமே கொம்புகள் உண்டு. பாலைவனத்தில் வாழும் மானதலால் பல நாட்கள் தண்ணீரின்றி இதனால் வாழ முடியும். இது ரொம்பப் பயந்த சுபாவமுடையது. அதே போல



ஜாக்கிரதையானதும் கூட? வெகு வேகமாக ஓடக் கூடியது. பழங்காலத்தில் கதேசிகள் தங்கள் குதிரைகளின் ஓட்டத்தை நிர்ண யிக்க இந்த வகை மான்களைத் துரத்திச் செல்லுவார்களாம். இதன் ஓட்டத்தைக் குதிரைகள் மிஞ்சுமானால் அது சிறந்த குதிரை என்று தீர்மானிப்பார்களாம்.

மாரிக்காலத்தில் இந்த மானின் கழுத்திலும் தோளிலும் அடர்த்தியான சிவந்த பழுப்பு நிறமுள்ள பிடரி மயிர் வளரும். உடலின் மற்ற பாகங்களில் குட்டையானதும் மஞ்சள் கலந்த வெள்ளையுமான ரோமம் அடர்ந்திருக்கும். முகத்தின் குறுக்கே பாண்டேஜ் கட்டுப் போட்டது போல வெள்ளை ரோமம் வளர்ந்திருக்கும். அழகிய அடாக்ஸ் மானைப் பார்க்க ஆப்பிரிக்காவுக்குச் செல்லலாமா?

முயன்றால்......விடை.



1. கணக்குப்பிள்ளை தன் முதலாளியின் விருப்பப்படி வீட்டை எட்டுப் பாகமாக எப்படிப் பிரித்தார் என்பதைத் தான் மேலே காட்டியிருக்கிறது.

2. காலியான வீட்டிற்கு 2-ம் இலக்கமிட்ட நாயைக் கொண்டு வர வேண்டும். அப்போது காலியாகும் வீடுகளுக்குத் தொடர்ந்து 1, 6, 4, 1, 5, 3, 6, 5, 2 ஆகியவைகளை நகர்த்திக் கொண்டு வாருங்கள். நாய்கள் அதனதன் வீடுகளுக்குப் போய்ச் சேரும்.

என்ன விநோதம் பாரு!

கோழிச் சண்டையைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆட்டுச் சண்டையும் நம் நாட்டில் உண்டு. பொழுது போக்குக்காக இவைகளை ஒன்றோடு ஒன்று சண்டையிட விட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம். மனிதர்களின் மல்யுத்தமும், குத்துச் சண்டையும்கூட இதே ரகம்தான். ஆனால் மீன் சண்டையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். சயாம் தேசத்திலே இது பிரபலம். மீன்களில் சண்டையிடும் மீன்கள் என்றே ஒரு வகை. இந்த இனத்தின் ஆண் மீன்களுக்குத்தான் இத்தகைய குணம்.

ஆகவே சயாம் தேசத்தவர் இந்த வகை ஆண் மீன்கள் இரண்டை ஒரு நீர் நிறைந்த கண்ணாடித் தொட்டியில் போட்டுவிட்டு, அதைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்ப்பார்கள். இரண்டு மீன்களில் ஒன்றோ, இரண்டுமோ இறக்கும் வரை ஆக்ரோஷமாகச் சண்டையிடுவது பார்க்க ரஸமாக இருக்குமாம்.

சர்க்கஸிலே 'பபூன்' ஒற்றைச் சக்கர சைக்கிள் வண்டி விடுவதைப் பார்த்து நீங்கள் வியந்திருப்பீர்கள். சிறிது நேரம் தான் அவனும் அப்படிச் சுற்றி வரமுடியும். அதன் மீது உட்கார்ந்து சுற்றி வருவது ரொம் பக் கஷ்டம். ஆனால் வால்டர் நில்ஸன் என்பவர் எட்டடி உயரம் உள்ள ஒற்றைச் சக்கர சைக்கிளிலேயே 3386 மைல்களை 117 நாட்களில் கடந்திருக்கிறார். பொய்யல்ல, உண்மை! நியூயார்க் கடற்கரையிலிருந்து ஸான் பிரான்ஸிஸ்கோ கடற்கரையை இந்த விந்தை வாகனத்தில் உட்கார்ந்து சவாரி செய்தபடியே அடைந்திருக்கிறார்.



உலக ஜனத் தொகையில் பாதிப் பேர் 25 வயது வரைதான் வாழுகிறார்கள். மூன்றில் ஒரு பகுதிப் பேர் 52 வரை வாழுகிறார்கள். நான்கில் ஒரு பகுதிப் பேருக்கு 59 வயது. ஆறில் ஒரு பங்குப் பேருக்கு 67 வயது வரை வாழும் வாய்ப்புக் கிடைக்கிறது. பத்தில் ஒரு பங்குப் பேருக்கு 76 வயது. பன்னிரண்டில் ஒரு பங்குப் பேருக்குத்தான் 81 வயது வரை வாழும் பாக்கியம் கிடைக்கிறது. நூறு வயது வரை வாழும் மனிதனே கிடையாதா என்று கேட்கிறீர்களா? இருக்கிறார்கள், பத்தாயிரம் பேர்களுக்கு ஒருவர் நூறு வயதை எட்டிப் பிடிக்கிறார்கள்!

உருளைக்கிழங்கின் கதை!


உருளைக்கிழங்கு என்றதும் உங்கள் உள்ளத்தில் சுவையான ஆகாரப் பொருள்களைப் பற்றிய எண்ணம் உருண்டு வருகிறதல்லவா? உலகத்திலுள்ள எல்லா மக்களும் விரும்பிச் சாப்பிடும் ஓர் உணவு வகையான இந்தக் கிழங்கின் பிறப்பிடம் எது தெரியுமா? இந்தியா அல்ல. ஆனால் இதை முதலில் பயிரிட்டவர்கள் இந்தியர்கள் — அதாவது செவ்விந்தியர்கள். தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்ற நாட்டில் வாழும் இன்கா இந்தியர்களிடமிருந்து தான் இது உலகமெங்கும் பரவியது. இதை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் ஸ்பானிஷ்காரர்கள். இன்றைக்கு நானூறு வருஷங்களுக்கு முன்னால் நாடு பிடிக்கும் ஆசையோடு கிளம்பிய ஸ்பானிஷ்காரர்கள் இன்கா இந்தியர்களை வெற்றி கொண்டார்கள். ஆண்டஸ் என்ற மலை மீது ஏறிய போது பெரு நாட்டின் மலைப் பிராந்தியமான அங்கு மக்கள் இந்தக் கிழங்கைப் பயிரிட்டு உணவாகப் பயன்படுத்துவதைக் கண்டார்கள். இப்போது நாம் பயன்படுத்துவது போலவா அவர்கள் அதைப் பயன்படுத்தினார்கள்? அதுதான் இல்லை. அவர்களின் முக்கிய உணவு சோளம்தான். ஆனால் அவ்வளவு உயரத்தில் சோளம் விளையாது. அங்கு மிகக் குளிர் அல்லவா? ஆகவே இன்கா இந்தியர்கள் உருளைக்கிழங்கைப் பயிர் செய்து அதைச் சேகரித்து வைத்துக் கொண்டார்கள். அதை உலர்த்திக் காய வைத்தும் கூடச் சேமித்து வைத்திருந்தார்கள். காய வைத்த உருளைக்கிழங்கு இன்றைக்கும் கூட அவர்களின் சுவையான உணவுதான்.

ஸ்பானிஷ்காரர்கள் பெரு நாட்டின் இந்தியர்களிடமிருந்து இந்தக் கிழங்கை ஐரோப்பாவுக்குக் கொண்டு போனார்கள். பிறகு இது இத்தாலியில் பயிராக்கப்பட்டது. ஜெர்மானியர்கள். ஸர் பிரான்ஸிஸ் டிரேக் என்பவர் தான் ஐரோப்பாவுக்கு இதைக் கொண்டு வந்தவர் என்று அவரைக் கௌரவிக்க அவருக்கு ஒரு சிலையைக்கூட எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் ஸர் வால்டர் ராலே என்பவர்தான் புகையிலையோடு இந்தக் கிழங்கையும் ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்தவர் என்பது பலரின் நம்பிக்கை.


ஆரம்பத்தில் ஐரோப்பாவில் இது வேகமாகப் பரவவில்லை. மேரி அண்டாய்னட் என்ற பிரெஞ்சு அரசி இதன் பூக்களைக் கூந்தலில் சூடிக் கொண்டு மகிழ்ந்தாளாம். பிரஷ்யாவின் மன்னர் மாட்சிமை பொருந்திய பிரடரிக் உருளைக்கிழங்கைத் தமது அரண்மனைத் தோட்டத்தில் பயிரிடச் செய்தாராம். இவருடைய பேரன் உருளைக்கிழங்கு பயிரிடாதவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று அறிவித்தானாம்.

உருளைக்கிழங்குச் செடி இரண்டடி உயரம் வளரும். இதன் பூக்கள் வெண்மையானவை. பழம் பச்சையாக இருக்கும். வேரில் கிழங்குகள் உண்டாகும். இதனால் கிழங்கு வேரின் பாகமல்ல. செடியின் தண்டு தான். உருளைக்கிழங்கில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. கிழங்குகளைச் சேகரித்துக் குவித்து மண்ணாலும் மூடி வைப்பார்கள். உஷ்ணமும் வெளிச்சமும் படுமானால் கிழங்குகள் பச்சையாக மாறி விடும். அல்லது முளை விட்டுக் கொள்ளும். கிழங்கின் பச்சைப் பகுதி விஷமுடையது; சுவையற்றது. உருளைக்கிழங்கில் நான்கு பாகம் நீரும் ஒரு பாகம் கெட்டியான பொருளுமிருக்கின்றன. கெட்டியான பொருளில் 80-லிருந்து 88 சதவிகிதம் வரை மாவுப் பொருளும், 3-லிருந்து 8 சதவிகிதம் வரை சர்க்கரையுமிருக்கின்றன. கொழுப்பு, எண்ணெய்ச் சத்துக்கள் இதில் கிடையாது. தாவர உப்புக்களான பாஸ்பரஸ், கால்சியம், பொட்டாசியம், இவை சிறிதளவும் இரும்பு, சோடியம், குளோரின், கந்தகம் இவை இருப்பதன் அறிகுறியும் உருளைக் கிழங்கில் உண்டு. வைட்டமின் 'C' யும் 'B2' வின் கலப்பும் இதில் இருக்கின்றன.

உருளைக்கிழங்குப் பயிருக்குப் பலவித தொத்துநோய்கள் வருவதுண்டு. அவைகளிலிருந்து அதைக் காப்பாற்றவும் அதன் தரத்தை உயர்த்தவும் இடைவிடாமல் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்த வண்ணமிருக்கிறார்கள். மேல்நாட்டில் கால்நடைகளுக்குக் கூட இதை உணவாகக் கொடுக்கிறார்கள்;











இன்று
உங்கள் ஊருக்கே
வருகிறது ஹகோபா
கண்டவுடனேயே உங்கள்
நெஞ்சம் கவருவது
ஹகோபா
எல்லா பிரபல ஸ்டோர்களிலும் கிடைக்கும்
பூரண விற்பனை உரிமைகளுக்கு விசாரிக்கவும்
எம்பிராய்டரி மார்ட், M. J. மார்க்கெட், பம்பாய் - 2


K C P
அனைவரும் விரும்புவது
கிருஷ்ணா மிட்டாய்கள்.
கிருஷ்ணா மிட்டாய்கள் சுகாதார முறைப்படி கைபடாமல் கரும்புச் சாற்றிலிருந்து தயார் செய்யப் பட்டது. குழந்தைகளுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.
குழந்தைகள் விரும்புவது பெரியவர்கள் புகழ்வது கிருஷ்ணா மிட்டாய்களே.
Krishna
SWEETS
தயாரிப்பவர்கள்:
தி கே. ஸி. பி. லிட்.
38, மவுண்ட் ரோடு, சென்னை-6


"போனவாரம் தான் பெரிசா
வந்து ரூபாய் பத்தாயிரம்
போட்டு வியாபாரம் பண்ண
போறேன் என்றீர்கள்!
இப்ப வந்து இரண்டு ரூபாய்
கடன் கேட்கிறீர்களே?"
"பத்தாயிரத்துக்கு இரண்டு
ரூபாய் குறையறது சார்!"
"ஏன் டாக்டர்! பல் பிடுங்
கும் போது வலி இல்லாமல்
பிடுங்குவீர்களா?"
"சொல்வதற்கில்லை. போன
வாரம் ஒருவருக்குப் பல்
பிடுங்கினேன். என் மணிக்
கட்டு சுளுக்கிண்டு ஏக
வலி உண்டாகிவிட்டது!"
"சார்! என் சம்பளத்தை நான்கு
மாதத்திற்கு ஒருமுறை கொடுக்க
முடியுமா?"
"ஏனய்யா அப்படி?"
"சம்பளத்தை வீட்டுக்குக்
கொண்டு போனவுடன்
செலவுக்குப் போதவில்லை
என்று என் மனைவி ஒவ்வொரு
மாதமும் சண்டை பிடிக்
கிறாள். அதனாலே சண்டையை
ஒரு நாலு மாதத்துக்கு
ஒத்திப் போடலாம் என்று தான்
பார்க்கிறேன்!"
நீங்கள் எல்லோரும் வருவீர்கள்
என்று தான் நான் கொள்ளுச்
சுண்டல் பண்ணி வச்சிருக்கேன்!
டிராபிக் இன்ஸ்பெக்டர்:- இன்னும்
ஐந்து நிமிஷத்தில்
வந்துவிடும் சார்!
பஸ்ஸுக்காகக் காத்திருக்
கும் பிரயாணி:- என்ன
வந்து விடும்?
டிராபிக் இன்ஸ்பெக்டர்:-
மழை!



வட்ட மேஜை

தர்மத்தின் குரல்

இது நாள்வரை நம் நாட்டிலிருந்தபடியே தர்மத்தின் அடிப்படையில்தான் எந்தக் காரியமும் இயங்க வேண்டும் என்ற மாபெரும் உண்மையை உலகுக்கெல்லாம் அறிவுரைத்து வந்தார்கள். நம் அன்புக்குரிய ராஜாஜி அவர்கள் இப்போது வல்லரசுகளின் தலைநகரங்களிலிருந்தே தர்மத்தின் குரலை எழுப்ப அவர் செல்லவிருப்பது பேரானந்த மளிக்கிறது. அஹிம்ஸா மார்க்கத்தை விளக்கவும், அணு சோதனைகளால் உலக மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தவிர்க்கவும் அவர் வாஷிங்டன் செல்கிறார் என்னும் செய்தி நமக்குப் பெருத்த ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

'தர்மம் என்றும் வென்றே தீரும்.' ஆகவே ராஜாஜி அவர்களின் அமெரிக்கப் பிரயாணம் வெற்றிகரமாக முடிந்து, உலகுக்கு அதனால் பெருத்த நன்மை உண்டாக இறைவனை வேண்டுவோமாக!

பம்பாய்
8-9-62 கல்யாணபுரம் அமுதன்

மீட்டர் அளவுகோல்கள்!

அக்டோபர் முதல் தேதியிலிருந்து கெஜக் கோல்களை யெல்லாம் மீட்டர்கோல்களாக மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அப்படித் தேவைப்படும் மீட்டர் அளவு கோல்களை ஒரு சில லைசென்ஸ் பெற்ற வியாபாரிகளிடமே வாங்க வேண்டிக் கட்டாயப் படுத்துகிறார்கள். இதனால் அரைமீட்டர் அளவுள்ள சிறிய மீட்டர்கோல் ஒன்றுக்கு மூன்றரை ரூபாயிலிருந்து ஐந்து ரூபாய் வரை விலை சொல்லுகிறார்கள். தெருவில் ரிப்பன் விற்கும் சாதாரண வியாபாரி எப்படி நாலு ஐந்து ரூபாய் கொடுத்து வாங்குவார்? அவரது முதலுமே அவ்வளவு இருக்காதே! ஏகபோக விற்பனைக்கு ஏற்பாடு செய்து அரசாங்கம் சிலரை அதிக லாபம் அடிக்க விட்டது ஏன்? சாதாரணமாக இரும்புக் கடையில் அதே அரை மீட்டர் அளவு கம்பி வாங்கினால் எட்டணாதான் ஆகும். அதைத் தாலுக்கா ஆபீஸில் முன்போல் சர்க்கார் முத்திரையிட்டுக் கொள்ள இரண்டணா கூலி ஆகும். பழைய கெஜக்கோல் முறை இப்படித்தான். அவரவர் இஷ்டப்படி தயாரித்து வைத்துக் கொள்ள அனுமதித்து வந்தார்கள். இதில் என்ன தவறு வந்தது? புதிய முறையிலும் இதையே பின்பற்றலாமே! தவிர இப்போது வெளியிட்டுள்ள அங்கீகாரம் பெற்ற மீட்டர்கோல் துணி, ரிப்பன் முதலான விற்பனைக்கு லாயக்கானதில்லை. இரும்பு அளக்கத்தான் பயன்படும். ஏனெனில் புதிய மீட்டர்கோல் கால் அங்குல கனம் வரையில் இருக்கிறது. துணிகளை இருபுறமும் மடித்து மடித்து அளக்கும் போது, மீட்டருக்கு அரை அங்குலம் சேர்ந்து போய் விடும். பத்து மீட்டருக்கு எவ்வளவு போகும்? தாங்குமா? ஆகவே, சன்னமான தகட்டில் சரியான மீட்டர்கோலைக் குறைந்த விலையில் வெளியிடச் செய்ய வேண்டும். அல்லது அவரவர்களே தயாரித்துக் கொண்டு முத்திரையிட்டுத் தரவாவது அனுமதிக்க வேண்டும்.

1-9-62
இராசை ப. தனுஷ்கோடி

> **என் பயம்**
>
> நான் மிகமிக அஞ்சுவது அரசாங்கத்தின் அதிகாரம் அதிகரிப்பதைக் கண்டேயாகும். அரசாங்கம் நிறைய அதிகாரங்களை எடுத்துக் கொள்வதால் மக்கள் ஒருவரையொருவர் சுரண்டுவதைக் குறைக்க முடியும் என்பதாக வெளிப் பார்வைக்கு ஒரு நன்மை தெரியும். எனினும் சர்க்கார் தனது சக்தியை வலுவாக்கிக் கொள்வதால் எல்லா வித முன்னேற்றங்களுக்கும் ஆணிவேரான தனி நபர்களின் விசேஷத் திறன்களை அடிநாசமாக்குகிறது. இது மாபெரும் தீமையாகும்.
>
> —காந்தியடிகள்

மாற்றம் அவசியமா?

பஞ்சாயத்துப் பள்ளிகளைப் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தது முதல் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், கமிஷனர்களும் பள்ளிகளின் நிர்வாக விஷயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு ஆசிரியர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்து வருகின்றனர். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களை அடிக்கடி மாறுதல் செய்து தொந்தரவு அளிக்கிறார்கள்.

கிராமங்களில் வீடு வாடகைக்குக் கிடைப்பது மிகவும் அரிதாகும்.

இம்மாதம் முதல் வாரத்தில் புதுப்பாளையம் பஞ்சாயத்து யூனியன் பிறப்பித்த உத்தரவின் படி அநேகமாய் எல்லாப் பள்ளிகளிலும் வேலை செய்யும் ஆசிரியர்களில் 80 சதவிகிதத்துக்கு மேல் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். பள்ளிக்கூடங்கள் திறந்து இரண்டு மாதங்களுக்குப் பிறகு இவ்வாறு எண்ணற்ற மாற்றங்களைச் செய்திருப்பது ஆசிரியர்களுக்குப் பிரச்னைகளை உண்டாக்கியிருக்கிறது. இதனால் ஆசிரியர்களின் குடும்ப நலனும் அவர்கள் குழந்தைகளின் கல்வியும் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கின்றன.

ஆசிரியர்களை அடிக்கடி மாற்றாமல் ஒரே கிராமத்தில் வைத்திருந்தால்தான் அவ்வாசிரியர்களுக்கும், கிராம மக்களுக்கும் இடையே நல்லுறவு ஏற்பட்டு, கல்வி வளர்ச்சிக்கும் உதவியாயிருக்கும். இதை அதிகாரத்திலுள்ளவர்கள் என்று உணர்வார்களோ?

எரையூர்
19-8-62 க. முத்துசாமி




செப்டம்பர் 28 ம் முதல்
கௌசல்யா புரொடக்ஷன்ஸ்...
நீயா-நானா?
டைரக்ஷன் : A.சேஷகிரி ராவ்
வசனம்:
அய்யாப்பிள்ளை
பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்
சங்கீதம்:
K.V.மஹாதேவன்
தயாரிப்பு S.பவநாராயணா-P.C.பாலகிருஷ்ணராஜா



மகள் : "இந்த முறையும் பேட்டி சுவாரஸ்யமில்லை. பேட்டிக்கு வந்திருந்த மற்றவர்களை நீ பார்த்திருக்கவேண்டுமே! தூயவெண்மை உடைகளில் அவர்கள் எவ்வளவு எடுப்பான தோற்றத்துடனிருந்தார்கள்! என் உடைகளுக்கும் நீ ஏதாவது செய்யக்கூடாதா?"
தாய், ஒரு கடையில்: "ஏதாவது புதிய சலவை சோப் இருந்தால் கொடுங்கள். எத்தனையோ தினுசுகளை உபயோகித்துப் பார்த்துவிட்டேன். ஒன்றுமே துணிகளை நல்ல வெண்மையாக வெளுக்கவில்லை."
கடைக்காரர் : "அம்மா, உங்களுக்கு தேவையானது புதிய சோப்பு அல்ல, ராபின் ப்ளூவே தேவை. சோப் துணியிலுள்ள அழுக்கை அகற்றும். ராபின் ப்ளூ சேர்க்கையினால்தான் ரம்மியமான வெண்ணிறம் உண்டாகிறது."
எனவே அன்று முதல் ராபின் ப்ளூ உபயோகிக்கத் தொடங்கினாள். அவளது மைந்தனும் தூயவெண்மை ஆடைகள் அணிந்து ஒய்யாரத் தோற்றத்துடனும் அற்புதமான உத்தியோகமும் அடைந்தான். எல்லாம் ராபின் ப்ளூவின் மகிமை.
ராபின் ப்ளூ
இயற்கையில் கவர்ச்சிகரமான வெண்மை யளிப்பது
Robin Ultramarine
STANDARD QUALITY



எழுதுவதில் கவர்ச்சியும் இன்பமும் பெறுவதற்கு
Iris INKS
இரிஸ் இங்குகள்
5 மங்காத நிறங்களில்
ROYAL BLUE
Iris
RECHLABS
Iris
INK
MADE IN INDIA
ரிஸர்ச் கெமிகல் லாபரட்ரீஸ்
ராட்டிலர்ஸ் பிரிட்ஜ் ரோடு, சென்னை-20
550, எட்டாவது மெயின் ரோடு, மல்லேஸ்வரம், பெங்களூர்-12



நன்றி: ஒரு சங்கடம்!

'வியார்ஜி'

ஞாயிற்றுக்கிழமை. வாரத்தில் ஒரு நாளான அன்று தான் பள்ளிக்கூட ஆசிரியர் ராமபத்திரனுக்கு ஓய்வான நாள்.

பிற்பகல் மூன்றுமணிக்கு இன்னும் பத்தோ பதினைந்தோ நிமிடங்கள்தாம் இருக்கும். ராமபத்திரன் அப்பொழுதுதான் கட்டையைச் சாய்த்துச் சற்றுக் கண் அயர்ந்திருந்தார்.

அவருடைய தூக்கத்துக்கு இடைஞ்சலாக வீட்டில் ஒரே சத்தம்! ஊரிலிருந்து அவருடைய மூத்த பெண், குழந்தைகளோடு வந்திருப்பதால் குழந்தைகள் ஏதோ இரைச்சல் போட்டு விளையாடிக் கொண்டிருப்பதாக நினைத்துப் புரண்டு படுத்தார். ஆனால் சத்தம் ஓய்ந்தபாடில்லை !

அதற்குள், ''எழுந்திருங்களேன், விஜயாவைக் காணோமாம்'' என்று அவருடைய மனைவி அவரை வந்து எழுப்பினாள்.

''என்னது? விஜயாவைக் காணோமா?'' என்று தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தார் ராமபத்திரன்.

விஜயா, ராமபத்திரனுடைய மூத்த பெண்ணுடைய மூன்று வயதுக் குழந்தை. ஊரிலிருந்து வந்து மூன்று நாட்கள்தான் ஆகியிருந்தன.

வீட்டிலுள்ளவர்கள் ஆளுக்கொரு பக்கம் கலவரத்தோடு அரற்றிக்கொண்டிருந்தார்கள்.

''வீட்டிலுள்ளேயே நன்றாகப் பாருங்கள்.''

''மாடியிலே நன்றாகத் தேடினீர்களா?''

''பக்கத்து வீட்டிலே பல்லாங்குழி ஆடிக் கொண்டிருந்தாளே காமு, மீனு எல்லாரும். அங்கே போய் நின்றுகொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கப் போகிறது.''

ராமபத்திரனுடைய மனைவி மிகுந்த வியாகுலப்பட்டு அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள். குழந்தை பதினைந்து நிமிஷமாகக் காணோமாம். அக்கம் பக்கம் எல்லா இடத்திலும் தேடிப் பார்த்து விட்டுப் பிறகுதான் அவரை எழுப்பியிருக்கிறார்கள். கோவில், குளம், கடைத்தெரு என்று நாலைந்து பேர்கள் தேடுவதற்காகச் சைக்கிளை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள்.

''குழந்தை வாசல்படியிலேதான் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. நிமிஷத்துக்குள்ளே காணோமே?'' என்று அங்கலாய்த்தாள் குழந்தையின் தாய். அவள் கண்களும் மூக்கும் ஓயாது சிந்தின. பிழியப் பிழியப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள்.

''ஆமாம்! குழந்தையினுடைய நகை நட்டு எல்லாத்தையும் கழற்றித்தானே வைத்திருந்தாய்?'' என்றார் ராமபத்திரன்.

அவருடைய மனைவி பதில் சொன்னாள். ''இல்லையே. அதுதானே இப்ப பயமா இருக்கு. இந்தப் பாவிகிட்டே அப்பவே அடிச்சிண்டேன். காதிலே, கழுத்திலே, காலிலே எதையுமே கழற்றலையன்னு ! நகைக்கு ஆசைப்பட்டுக் குழந்தையை எவனாவது கொண்டு போயிருக்காமல் இருக்கணுமே. அம்பிகே, நீதாண்டியம்மா, எங்களுக்கு....'' என்று சொல்லிக் கொண்டே பூஜை அறைக்குள் சென்று கீழே மண்டியிட்டு நமஸ்கரித்தாள். பெண்ணும் தாயைப் பின்தொடர்ந்தாள்.

ராமபத்திரனுக்கும் அடிவயிற்றைச் சங்கடப்படுத்தியது. இருந்தாலும் அவர் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. ''எங்கே போயிருக்கப் போகிறாள். இங்கேதான் எங்காவது பராக்குப் போக்கில் போயிருக்கப் போகிறாள். எல்லாம் கண்டு பிடித்துவிடலாம். நீங்க வீணுக்குக் கலவரப்படாமல் இருங்கோ'' என்று சொல்லிக் கொண்டே தாமும் சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே கிளம்ப ஆயத்தமானார். தாமும் தேடி விட்டுத் தேவையானால் அப்படியே போலீசில் தகவல் கொடுத்து விட்டு வரலாம் என்று நினைத்தார்.

அதற்குள் வெளியில் ''விஜயா கிடைத்து விட்டாள்!'' என்ற கூக்குரல் கேட்கவே எல்லாரும் வாயிலுக்கு விரைந்தார்கள்.

ஆம்! குழந்தை விஜயாதான் அகப்பட்டு விட்டாள்.

குழந்தையை அழைத்துக் கொண்டு வந்த பையன் கிச்சாமி என்ற கிருஷ்ணசாமி ராமபத்திரனுடைய வகுப்பில் படிக்கின்ற பையன்தான்.

குழந்தை தெருவில் இறங்கி நீள நடந்து போய்க் கொண்டிருந்ததாம். கிட்டத்தட்ட முக்கால் மைலுக்கு மேலே ஊரைத் தாண்டிப் போகிற மெயின் ரோட்டில் போய்விட்டதாம். லாரியில் அகப்பட்டுக் கொள்ள இருந்த குழந்தையை எதேச்சையாக அந்த வழியாக வந்த கிச்சாமி காப்பாற்றியிருக்கிறான். ஊருக்குள் வந்து விசாரித்த பிறகு தான் அது வாத்தியார் ராமபத்திரனின் பேத்தி என்று தெரிந்ததாம்.

குழந்தை காணமற் போய் வெகுநேரமான பிறகுதான் வீட்டிலுள்ளவர்கள் விழித்துக் கொண்டனர் என்று தெரிந்தது.

''என்னமோ அப்பா! நீ மகாராஜனாக இருக்கணும். எங்க வயத்திலே பாலை வார்த்ததற்கு உனக்குக் கனகாபிஷேகம் பண்ணினாலும் தகும்'' என்று வீட்டுப் பெண்மணிகள் கிச்சாமிக்குப் பலவிதமாக நன்றி தெரிவித்தனர்.

ராமபத்திரனும், ''நல்ல வேளை. கடவுள்தான் அப்பா உன்னைச் சமயம் பார்த்து அனுப்பியிருக்கணும்'' என்று சொன்னார்.

அவருக்குத் தமது பேத்தியைக் கிச்சாமி காப்பாற்றி வீட்டில் கொண்டு விட்டது பற்றிச் சற்று வியப்பே. ஏனென்றால் கிச்சாமி அவருடைய வகுப்பிலேயே பெரிய போக்கிரி என்றும், மக்கு என்றும் பெயர் எடுத்தவன். அவனுக்கு அந்த வகுப்பில்

அது இரண்டாவது வருடப் படிப்பு! பாடங்களை ஒழுங்காகப் படித்தான் என்ற பெயரே கிடையாது! எதையும் அக்கறையோடு செய்யவும் மாட்டான். வீட்டுக் கணக்குப் போடற வழக்கம் அவனிடமில்லை. வீட்டில் எழுதிக் கொண்டு வரும் பாடங்களை ஜன்மத்தில் செய்ய மாட்டான்!

இப்படி முழுப் பள்ளிக்கூடத்தின் வெறுப்புக்கே பாத்திரமாகி, ஒன்றுக்கும் உதவாதவன் என்று 'தண்ணீர் தெளித்து' விடப்பட்ட ஒரு பையன் மூலம் எத்தனை பெரிய மனிதாபிமானமான காரியம் நிகழ்ந்திருக்கிறது என்று அவர் திரும்பத் திரும்ப வியந்து கொண்டிருந்தார்.

அவரையும் மீறி அவனிடம் இப்பொழுது புதிதான ஏதோ ஒரு மதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாதது போலிருந்தது.

அவரும் மற்றவர்களோடு சேர்ந்து கொண்டு அவனைக் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகும்படி வற்புறுத்திய போது பிச்சாமிக்கே அது ராமபத்திரன்தானா என்று ஆச்சரியமாக இருந்தது!

மறுநாள் திங்கட்கிழமை.

கணக்கு வகுப்பில் ராமபத்திரன் ஒரு தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு மீள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்.

கண்டிப்புக்கு எப்போதுமே பெயர்போனவர் ராமபத்திரன். அவருடைய வகுப்பில் எல்லாமே ஒழுங்குமுறைப்படிதான் நடக்க வேண்டும். அவர் யாருக்கும் சிறிதும் தாட்சிண்யம் காட்ட மாட்டார்!

அவருடைய வகுப்பில் திங்கட்கிழமை தோறும் வகுப்பு ஆரம்பமானவுடன் வீட்டுக் கணக்கு போட்டுக் கொண்டு வராதவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும். பிரம்பினால் 'சுளீர் சுளீர்' என்று மூன்று முறை அடிப்பார். கையை மாற்றுமலோ, பின்னுக்கிழுத்துச் சட்டையில் துடைத்துக் கொள்ளாமலோ ஓர் அடிக்கு மேல் வாங்க முடியாது!

ஆனால் அன்று பையன்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்!

வழக்கம் போல் வகுப்பு ஆரம்பமானவுடன் நடக்கும் வீட்டுக் கணக்குப் பரிசீலனையே அன்று நடக்கவில்லை. 'வாத்தியார் மறந்து விட்டாரா?' ராமபத்திரனா மறந்துபோவார்? இருந்தாலும் பையன்களுக்குக் கணத்துக்குக் கணம் வியப்பு அதிகமாகிக் கொண்டே வந்தது.

ராமபத்திரனின் முகமும் உற்சாகமின்றிச் சற்றே சோர்ந்திருப்பது போல்தான் காணப்பட்டது. உண்மையும் அதுதான். ராமபத்திரன் அன்று வீட்டுக் கணக்கு விஷயத்தையே நினைவுபடுத்தாமல் விட்டு விடலாம் என்றுதான் எண்ணியிருந்தார். அப்படி விடா விட்டால் பிச்சாமிக்கு அவர் கையால் மூன்று பிரம்படிகள் 'சுளீர் சுளீர்' என்று விழுந்தாக வேண்டுமே!

பிச்சாமியை, முதல் நாள் நிகழ்ச்சிக்குப் பிறகு அப்படிக் குரூரமாக அடிப்பது நன்றி கொல்லும் காரியமாகப் பட்டது அவருக்கு. ஆனால் அதற்காக எப்பொழுதும் செய்யும் கடமையிலிருந்து வழுவுவது பெரிய அபசாரமாகவும் தோன்றியது. பிச்சாமியை மட்டும் அடிக்காமல் விடுவது முடியாத காரியம். விட்டால் எல்லாரையும்தான் விட வேண்டும். அதற்காகத்தான் வீட்டுக் கணக்கு பற்றிய நினைவே இல்லாதவர் மாதிரி நடிக்கலானார்.

தானாகக் கழன்று விட்டால் பாதகமில்லை. ஆனால் போலியாக அதைச் செய்வதற்கு அவர் நிரம்பவும் சங்கடப்பட்டார். தாம் செய்து கொண்டிருப்பது சரியான காரியமில்லை என்றே தோன்றியது.

கடைசியாக வகுப்பு முடிவதற்கான மணி அடிப்பதற்கு பத்து நிமிடங்கள் இருந்த போது ராமபத்திரன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டார். களம் புகுந்த வீரனைப் வழக்கம் போல் அவருக்கே உரிய தோரணையில் பிரம்புப் பிரயோகம் நடத்தினார்.

'ஜன்மத்தில் திருந்த முடியாத வழக்கமான குற்றவாளிகள்' என்று சிலர் உண்டு. அந்த வரிசையில்தான் பிச்சாமி இருந்தான். பிச்சாமியின் முறை வந்த போது அவன் ஏதோ சொல்ல முயன்றது போல் பட்டது ராமபத்திரனுக்கு. ஆனால் ராமபத்திரன் முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு. ''உம், நாழியாகிறது. நீட்டு கையை'' என்று அதட்டி விட்டு மூன்று அடி அடித்து விட்டுத் தம் இடத்தில் வந்து உட்கார்ந்தார். அவர் முகத்தில் வழக்கமான ஒளி வீசியது. ஆனாலும் அவரால் பிச்சாமியின் பக்கம் திரும்ப முடியவில்லை. அவரை அதிகமான தர்மசங்கடத்தில் ஆழ்த்தாமல் மணியும் அடித்தது.

ராமபத்திரன் போனபிறகு பிச்சாமி தனது வீட்டுக் கணக்கு நோட்டிலிருந்து நான்கு பக்கங்களைக் கிழித்துக் கசக்கிக் கொண்டிருந்தான். ஆம்! முதல் முறையாக அவன் வீட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டு வந்திருந்தான் அன்று.

முதல் நாள் ராமபத்திரன் நன்றிப் பெருக்கில் தவித்தபோது இம்மாதிரியான தர்ம சங்கடம் மறுநாள் ஆசிரியருக்கு ஏற்படக் கூடும். 'அதற்கு இடங் கொடாமல் தானே வீட்டுக் கணக்கைச் செய்து கொண்டு போவோம்' என்று நினைத்தே அவன் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து கொண்டு வந்திருந்தான். ஆனால் சந்தர்ப்பம் சதி செய்து விட்டது.

பிச்சாமிக்கு அதனால் சிறிதும் வருத்தமில்லை. வகுப்பு தொடங்கியதிலிருந்து அவனும் ராமபத்திரன் முகத்தைப் பார்த்துக் கொண்டு தானே வந்திருந்தான். கடைசி நேரத்தில் ராமபத்திரன் முகத்தில் தோன்றிய பிரகாசத்தைப் பார்த்ததும் அவனுக்கும் நெஞ்சம் நிறைந்தது. அவன் ஒழுங்கானவன் ஆகி விட்டான் என்பது ஒரு வேளை ஆசிரியரின் முகத்துக்கு இன்னும் பிரகாசம் சேர்க்கலாம்! பாதகமில்லை! அவன் அதற்காக இன்னும் ஒரு வாரம் காத்திருக்க முடியும்.

''அப்பேன்! எங்களையெல்லாம் விட்டு விட்டு நீ மட்டும் ஒழுங்கான பையன் என்று பேர் வாங்க ஆசைப்பட்டே பாரு. அதான் அந்தச் சிடுமூஞ்சி கணக்கு வாத்தியார் நீ சொல்ல வந்ததைக் காதிலே வாங்கிக் கொள்ளாமலே விளாசிவிட்டுப் போயிட்டார்'' என்று அவனது சகபாடிகள் கேலி செய்த போது பிச்சாமி வேதாந்தபரமாகச் சிரித்துக் கொண்டான்.

அந்தச் சிரிப்பின் பொருள் விளங்காமல் மற்றவர்கள் விழித்தனர்!



சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங் சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினால் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்



விநாயகர் சாட்சி சொன்னார்

ர. வேங்கடரத்தினம் —

வானம் கறுத்துக் கொண்டு வந்தது. 'சில்'லென்ற ஒரு மண்வாடைக் காற்றும் கூடவே கிளம்பியது. செவந்தியின் கால்கள் விரைந்து நடக்கலாயின.


'போதும், பத்து சுத்து வந்தாச்சு' என்று அவள் தானே கூறிப் பிரதட்சிணத்தைக் குறைத்துக் கொண்டு, சந்நிதிக்கு எதிரே வந்து தரையில் விழுந்து கும்பிட்டாள். 'நாயினு வர்ர நாழியாச்சு' என்ற எண்ணம் அவளது நடை வேகத்தில் நன்கு தெரிந்தது.

'நம் பிள்ளையார் தானே? எங்கேயாச்சும் ஓடிப் போயிடப் போறாரா? நாளைக்கி வந்து நாலு சேர்த்து சுத்திக்கிட்டாப் போச்சு' என்று உறவு முறையுடன் சொல்லிக் கொண்டே நடந்தாள். ஆமாம்! செம்பாக்கத்துச் செல்வ விநாயகர் அந்தண்டை இந்தண்டை நகரப் போகிறவரல்லவே? சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட சர்ப்பம் போல், இறுகிப் போன கல்லுப் பிள்ளையாருக்கு அசைவு ஏது, ஆட்டம் ஏது? மோனத் தவம் என்பது இந்தக் கடவுளின் நிலைக்குத்தான் பொருத்தமான பெயர்!

கோவிலுக்கு மேற்கே உள்ள தெருவில் மூன்றாவது வீட்டை ஒட்டிச் செல்லும் சந்திலே நாலு எட்டுச் சென்றால் உள்ள குடிசை தான் செவந்தியின் இருக்கை. 'இன்னுமா நாயினு வரல்லே?' என்ற திகைப்போடு குடிசையின் புறக்கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள். வலக்கைப் புறம் கூரையின் இறக்கத்தில் செருகி வைத்திருந்த காடாவிளக்கைக் கையில் எடுத்து, தீக்கொளுத்தி முதற்காரியமாக உள்ளே கனிந்திருந்த இருளை அகற்றினாள். 'நாயினு ஏன் இன்னும் வரல்லே? பொழுது ஏகத்தாறு ஆகிப் போச்சே' என்று முணுமுணுத்தாள். 'இந்நேரத்துக்கு நெதம் வந்திடுமே? வழியிலே ஏதாச்சும் விபத்துக் கிபத்து ஆகியிருக்குமோ?' இப்படி ஒரு கவலைத் துளிர் மனக்காற்றிலே அசைந்தது.

விளக்கை எடுத்து மையமாய் வைத்து விட்டு, குடிசையின் முகப்பில் வந்தமர்ந்தாள். அவளையறியாமலேயே ஒரு நெடுமூச்சு வெளி வந்தது. தன் வயதுப் பெண் பிள்ளைகள் எல்லோரும் இருக்கும் நிலை என்ன? அடுத்தார் போல் தன் நிலைமை என்ன? அவர்கள் எல்லோரும் கட்டிய புருஷன் வீட்டில் வாழத் தான் மட்டும் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு இங்கே வந்து அப்பனோடு உயிர் வாழ வேண்டிய நிலைமையில் இருப்பானேன்?

மறுகணம் அவள் தன்னையே தடுத்து நிறுத்தினாள். ஏனும், இதில் என்ன குறைந்து போய் விட்டது? வயதுக் காலத்தில் தகப்பனுக்குச் சோறாக்கிப் போட்டுக் கவனித்துக் கொள்வதிலே தவறு என்ன? செய்யக் கூடாத காரியம் அல்லவே? கழுத்திலே கயிற்றைக் கட்டியவன் என்ற ஒரே காரணத்துக்காக எந்தக் கயவனுக்கோ கட்டுப்பட்டு நடந்தால் தான் வாழ்வா? தள்ளாத வயதில் அப்பனை வைத்துப் படைப்பது தப்பான செய்கை என்று எந்தச் சாத்திரமும் சொல்லவில்லையே?







செவந்தியின் வாழ்க்கையே ஒரு வேடிக்கையாகப் போய் விட்டது. எல்லாருக்கும் நடக்கிறாற் போல் அவளுக்கும் ஒரு கல்யாணம் நடந்தது; கணவனும் கிடைத்தான். அவ்வளவு தான். அதற்கு மேல் ஒன்றும் ஒழுங்காக அமைய அவளுக்குக் கொடுத்து வைத்திருக்கவில்லை. அவளுக்குப் புருஷனாக வாய்த்தவன் லாரி ஓட்டி. குடியாத்தத்துக்கும் சென்னைக்கும் பெங்களூருக்கும் சித்தூருக்கும் என்று ஊர் ஊராக லாரி 'சர்வீஸ்' நடத்தி வந்த கம்பெனி ஒன்றில் கௌரவமான வேலைதான். அவளும் எவ்வளவோ ஆசையோடு தான் கணவன் வீட்டில் காலெடுத்து வைத்தாள். வீட்டில் அவனுடைய அத்தை தான் செவந்திக்குத் துணை. கட்டிய புருஷன் வீட்டுக்கு வருவதே அரிது. வந்தாலும் தரித்துத் தங்காமல் கூச்சல் போட்டு விட்டுப் போவான்.

முதலில் செவந்திக்கு ஒன்றுமே விளங்காமலிருந்தது. ஒரு நாள் அத்தையிடம் கேட்டாள். அந்தப் புண்ணியவதி கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னாள் — ''செவந்தி! நீ என்னை வேணுமானாலும், போட்டு உதை, குத்து. நான் பட்டுக்கறேன். அவன் திருந்த மாட்டானா என்கிற ஆசையிலே நான்தான் கல்யாணம் பண்ணி வச்சேன். அப்பக் கூட அவன் மாட்டேன், மாட்டேன்னு கண்டிப்பாகச் சொன்னான். 'வீணா ஒரு பொண் வாழ்க்கையைக் கெடுக்காதே, அத்தை! எனக்கும் புட்டி இருந்தா, எந்தக் குட்டியும்வேணும்' என்றே சொன்னான். நான்தான், செவந்தி, நம் பானையிலே கட்டி வச்சுத் திருத்தப் பார்க்கலாமின்னு செஞ்சேன்.''

செவந்திக்குத் தன் கணவனின் நடத்தையும் போக்கும் நன்றாகப் புரிந்து விட்டன.

துக்கம் தொண்டையை அடைக்க அவள் வினவினாள். ''நம்ம பக்கத்துக்கெல்லாம் கள்ளை ஒழிச்சு ரொம்ப நாளாச்சே. கள்ளுக்கடை எடுத்தாச்சு என்பாங்களே. இவருக்குமட்டும் இன்னமும் எப்படிக் கிடைக்குதாம்?''

அத்தை பதில் என்ன சொல்வாள்? அரசாங்கம்

சொல்ல வேண்டிய விளக்க மல்லவா? ''என்ன, செவந்தி! நீ குழந்தைப் பிள்ளையா இருக்கே? திருடக் கூடாதின்னு கூடத்தான் சட்டம் இருக்கு. ஊர்லே, உலகத்திலே திருட்டே நடக்கலேன்னு அர்த்தம்?''

செவந்திக்கு எதிர்காலம் முழுதும் கண் எதிரிலேயே தெரிகிறாற் போலத் தோன்றியது—ஒரே இருள், காரிருள், பயங்கர அந்தகாரம்.

''கண்ணைத் துடைச்சிக்கோம்மா, செவந்தி: என்னை மன்னிச்சிடு. நான் தெரிஞ்சு செய்யல்லே இந்தக் காரியம். என்னவோ, வளர்த்த பாசம் அறிவையே மழுங்கச் செஞ்சிடுத்து. என்னை மன்னிச்சேன்னு சொல்லு.''

செவந்தி பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அத்தை அப்படியே உட்கார்ந்தாள். படுத்த படுக்கையாகக் கிடந்தாள் பத்துப் பன்னிரண்டு நாட்கள். ''அவன் வரட்டும். உன்னை அவன்கிட்டே சொல்லி ஒப்படைச்சிட்டுத்தான் போகணும்'' என்று அரற்றிக் கொண்டே இருந்து விட்டுக் கிழவி ஒருநாள் மண்டையைப் போட்டு விட்டாள். செய்தி கேட்டு மறுநாள் குடிகாரன் வந்தான்.

''உங்கப்பனுக்குச் சொல்லி யனுப்பிச்சிடு. அவன் வந்து உன்னை ஊரோடே அழைச்சிக் கட்டும். போயிடு.'' அவன் அவளிடம் பேசிய வார்த்தைகள் ஒரு சில உண்டு. அவற்றில் இவை பிரதிநிதி போல.

''என்ன நிக்கறே? காதிலே விழுதில்லே என் பேச்சு?''

செவந்தியின் உதடுகள் துடித்தன. கண்கள் நீரைக் கக்கின.

''இதைப் பாரு. அழுது, கிழுது செய்யாதே ஒண்ணும். என்னவோ வைத்தியக்காரி என் அத்தை நான் திருந்திப்புடுவேன்னு நம்பி என்னையும் கட்டிக்கச் சம்மதிக்க வச்சா. ஆச்சு, அவளும் நான் குடித்தனம் நடத்தற அழகைக் கண் குளிரப் பார்த்திட்டுப் போய் விட்டா. இனி மேலே நீ ஒண்டியா என்னப் பண்ணுவே? வாயா, வார்த்தையா சொல்றேன். பேசாமெப் போயிடு.''

செவந்திக்குப் பேச எப்படித்தான் துணிவு வந்ததோ? ''நான் ஊரிலே போய் என்னங்க பண்ணுவேன்? நான் இங்கிட்டுத் தானே இருக்க வேண்டியது?''

அவள் பேச்சைக் கேட்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''நீ என்ன, பொண்ணு, அசல் குழந்தை கணக்காப் பேசறே? நானோ குடிகாரன். என்னோடே நல்லபடியா வாழ முடியுமா? வீட்டைப் பார்க்கப் போய்ச் சேர்ந்திடு நல்ல வேளையிலே.''

துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது செவந்திக்கு.

குடித்து விட்டுத்தான் வந்திருக்கானோ என்னவோ? பளாரென்று அவளுடைய கன்னத்தில் ஒன்று சாத்தினான். ''மரியாதையாச் சொன்னால் புரியாது உங்களுக்கெல்லாம். வர்ற புதன் மதியத்துக்கு வருவேன். அதுக்குள்ளாறே ஓடிப் போ. இல்லாட்டி, ஒசிஞ்சு சொன்னு வச்சிக்க.''

கன்னத்தைத் தடவிக் கொண்டே, இரண்டு நாட்கழித்த பின் அப்பன் துணையுடன், கரங்களில் பெட்டி படுக்கையும் கண்களில் நீருமாக அவள் சேம்பாக்கத்துக்கு வந்து சேர்ந்தாள். இந்த மாலை நேரம் போன்ற வேளைதான் அன்று அவள் புறப்பட்டு வந்த போதும், கன்னத்து வீக்கம் சமனப்பட்டு விட்டது. கண்ணீரும் வற்றி விட்டது. இப்போது அப்பனுக்குச் சோறாக்கிப் படைத்துத் தன் வயிற்றையும் பார்த்துக் கொண்டு காலம் தள்ளுகிறாள். ஒழிந்த நேரத்துக்கு இருக்கவே இருக்கிறார் அடுத்தாற் போலக் கோயிலினுள் கல் வடிவில். அவரை வலம் வந்து, வணங்கி வழிபட்டுக் கொண்டிருந்தால், குறைவேது?—இப்படி ஆறுதல் சொல்லி மனச்சாந்தி பெறக் கற்றுக் கொண்டு விட்டாள் அவள்.

திடீரென்று, அவளுக்கொரு திகைப்பு உண்டாகியது. சேம்பாக்கத்துச் செல்ல விநாயகர் மகாசக்தி வாய்ந்தவர், கேட்டதெல்லாம் தந்தருளும் கண்கண்ட தெய்வம்—இதெல்லாம் மிகவும் சரி. ஆனால், அவரைப் போய்ப் போய் விழுந்து வணங்கிக் கும்பிட்டுத் தனக்கு ஆக வேண்டிய காரியம் தான் என்ன? அவரை வேண்டிக் கொள்ளத் தன்னிடம் கோரிக்கை என்ன உள்ளது? புருஷனோ குடிகாரன், சேர்ந்து உடன் வாழ வகையில்லாதவன் என்பது தீர்ந்து போய் விட்டது. அவன் நல்ல புத்தி வந்து அழைத்தால் கூடப் போயிருந்து அடியும் உதையும் பட்டுச் சாகத் தனக்குத் திராணி இல்லையே?

செல்ல விநாயகரது சந்நிதியே சோதனை இடுகிறாற் போல் தன் கணவன் குடிகாரனாக இருப்பினும் அடி, உதை ஏதும் வழங்காமல் நல்ல நிறுசாக அவனை மாற்றியமைக்குமாறு பிள்ளையாரிடம் வேண்டிக் கொள்வதா? அல்லது, குடியையே நிறுத்தித் திருந்த வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதா? சீ! அப்படியும் ஓர் ஆசையா?

அவளுக்கு அவனை நினைக்கவே கூசியது. 'நாயினுக்குச் சோறாக்கிப் போட்டுக் கவனிச்சிக்கிட்டு வாழறதுலே என்ன குறைஞ்சு போச்சு?' என்று அவள் தனக்குத்தானே பேசியது கேட்டு விட்டுத்தானோ என்னவோ, அப்போது உள்ளே நுழைந்த அவளுடைய தகப்பன் ''என்னம்மா, என் பேரு அடிபடுது?'' என்று கேட்கலானான்.

''ஏன் நாயினா, இன்னிக்கு இத்தினி நேரம்?'' என்று அவள் விசாரித்தவாறு எழுந்து, விளக்கின் திரியைச் சற்றுப் பெரிதாக்கினாள்.

''வழியிலே ஒரு விபத்து ஆயிப் போச்சு; மூன்னிப்பாளையம் கொட்டகைகிட்டே.''

''என்னாச்சு?''

தலை முண்டாசை அவிழ்த்துத் துண்டாக்கித் தோளில் போட்டுக் கொண்டே கிழவன் பேசினான் — ''என்னாகும்? உயிர் ஒன்னு போச்சு.''

''பஸ்ஸா? பிளஷர்க் காரா அல்லது?....''

அவள் குரலில் ஓர் இனம் புரியாத துடிப்பு.

கிழவன் கதறினான்.—''அது ரெண்டுமில்லே. நீ எதைச் சொல்லாமே விட்டியோ, அது தான். ஒரு ஆள் மேலே ஏறிக் கொன்னு போட்டுடுச்சு.''

செவந்தியின் இரத்தம் கொதிக்கிறாற்போல இருந்தது அவள் பேச்சு. ''எல்லாம் அந்த லாரிக்காரப் படு பாவிக பண்ணற வேலைதான்; குடிச்சிப்பிட்டு, தலை தெறிக்க வண்டி ஓட்டுறு, வழியிலே இருக்கிறவங்க எப்படிக் கண் தெரியும்?''

''நீ ஏன், புள்ளே, சகட்டுமேனிக்கு அவங்க எல்லாரையும் இட்டறே?''

இலவசம்

கவர்ச்சி மிகுந்த

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள்


தேவைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மன மகிழ்வு பெறலாம்.



★ ஓ. கே. வனஸ்பதி ★ ஓ. கே. டபிள் ரிஃபைண்ட் ஆயில்
★ கோல்டன் ஸாலட் ஆயில் ★ ஓ. கே. சந்தன சோப்
★ ஓ. கே. ஓரியண்டல் ரோஸ் சோப் ★ ஓ. கே. நீம் சோப்
★ மியோகே சோப் ★ சோப் சிப்ஸ்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு ஓ. கே. தயாரிப்புகளிலும் உள்ள பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள். அவற்றிற்குப் பதிலாக, உங்கள் அருகிலுள்ள ஓ. கே. வியாபாரியிடமிருந்து, நீங்கள் விரும்பும் அளவிலும், வடிவிலும் கவர்ச்சி மிகுந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களைப் பெறுங்கள்.

இந்த விசேஷமான பரிசுத் திட்டம் பற்றிய இதர விவரங்களை அறிய உங்கள் ஓ. கே. வியாபாரியிடமிருந்து, படங்களோடு கூடிய 'போல்டரை' (folder) வாங்கிப் பாருங்கள்.



EP-EAC 2-TAM

தயாரிப்பாளர்கள் :

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

சென்னை, மதுரை, கோவை & ஆந்திர ராஜ்யங்களிலுள்ளவர்கள் மாத்திரம் இந்தப் பரிசுத் திட்டத்தில் கலந்துகொள்ளலாம்

''அது உண்மை, நாயினு!'' அவன் உள்ளத்தில் திடீரென்று ஒரு மகத்தான யோசனை தோன்றினாற் போல இருந்தது. 'அதுதான் சரி. என்ன வேண்டிக்கறதுன்னு திண்டாடிகிட்டேனே சித்தே முன்னாலே!' அவன் முகத்தில் புன்னகை ஒன்று தோன்றிப் படர்ந்தது.

''என்னம்மா, செவந்தி, என்னவோ சொல்லிச்சிரிக்கக்கிட்டியே தனக்குள்ளாறே?'' இழவன் கூட அவள் முகத்து மாறுதலைக் கவனித்து விட்டான்.

''அது கெடக்கட்டும். லாரி ஓட்டினது யார், தெரியுமா, நாயினு?''

''யாரோ விரிஞ்சிபுரத்துக்காரராம். போலீசு வந்து எல்லாம் குறிச்சிக்கிட்டாங்க. லாரியைச் சுத்தி ஒரே கூட்டம். டிரைவரைப் போலீசிலே இட்டுக்கிட்டுப் போயிருக்காங்க.''

செவந்தி நாக்கைச் சப்புக் கொட்டினாள். ''அந்தக் குடியாத்தக்காரரா இருந்தால், நல்லாயிருக்குமேன்னு கேட்டேன்.''

இழவனுக்கு அவள் பேச்சுக் கவைக்கவில்லை.

''நாயினு! நம் பிள்ளையார் இருக்காரில்லே? அவரிட்டே என்ன வேண்டிக்கறதுன்னு கூடத் தெரியாமே தவிச்சுக்கிட்டிருந்தேன். நீ வந்து சொன்ன சமாசாரம் ஒரு யோசனை தருது. என்னது தெரியுமா?''

இழவன் கர்மயோகி போலக் கீதை பேசினான் — ''இல்லே, செவந்தி. நீ ஒண்ணும் வேண்டிக்காமே வெறுமனே கடவுளைப் பார்த்துக் கும்பிட்டுட்டு வரியே. அதுதான் சரி. நமக்கு என்ன வேணும், வேணுங்கறது கடவுளுக்குத் தெரியாதா, என்ன? நாம கேட்கவே வேணும். அவரா கொடுப்பார்.''

''போ, நாயினு. நீ இப்பத்தான் என்னென்னவோ பேசறே. நான் சொல்றதைக் கேட்டிட்டுச் சொல்லு.''

அவள் முகத்தைக் இழவன் மங்கிய ஒளியிலும் ஆவலோடு நோக்கினான்.

''நான் நெதம் ரெண்டு வேளையும் கோயிலுக்குப் போறேனில்லே. இனிமேலே, ஒண்ணு வேண்டிக்கிடப் போறேன். நீ சொன்னே பார், யாரோ விரிஞ்சிபுரக்காரர் ஆள் மேலேத்தி மாட்டிக்கிட்டாரின்னு. நம் குடியாத்தக்காரர் இதே கணக்கா ஒருநாள் மாட்டிக்கிடணும். போலீசுலே அவரை இட்டுக்கிட்டுப் போகணும்.''

அவள் குரலில் ஒரு வெறி — தன் வாழ்வே அழிந்து போனதின் துக்க எதிரொலி!

''ஏதாச்சும் உளறாதே, பிள்ளே! நம் விநாயகர் ரொம்ப சக்தி வாய்ஞ்சவரிப்பாங்க. அந்த மாதிரித் தப்பான மனசோட வேண்டிக்கிடாதே....''

''போ, நாயினு! நீ ஒண்ணு!''

''உன் புருசன்?மனம் மாறிப் போய் நல்லவனு வந்து உன்னைக் கூட்டிக்கணுமின்னு வேண்டிக்க. அதை விட்டுப்புட்டு, என்னவோ பேசறியே?''

இப் பேச்சு அவள் காதில் விழவேயில்லை.

''அவர் மனம் மாறி வரணுமின்னு இங்கே யாரோ அடிச்சிக்கிட்டிருக்கிறாப் போல் பேசறியே, நாயினு!''

''சரி, வேணுமின்னு, வெறுமனே இருன்னுமே வேண்டிக்க வேணும். இப்பமாதிரியே, சும்மாக் கும்பிட்டுட்டு வா போதும்!''

''நான் மாட்டேன். அந்த ஆள் எங்கேயாவது விபத்திலே மாட்டிக்கணும். போலீசுக் காரங்க வந்து இழுத்துக்கிட்டுப் போய் ஜெயிலே உள்ளே தள்ளணும். ரெண்டு வருசம், நாலு வருசங்கள் கம்பி எண்ண வைக்கணும்.''

இழவனுக்குத் தன் பிடிவாதக்காரப் பெண்ணுடன் பேசப் பிடிக்கவில்லை. ''பின்னே யாரோ பெரிய பேர்வழி. நீ வேண்டிக்கிட்டாப் போலவே, பண்ணிப்புடுவார். ஜாக்கிரதை. உன் புருசன் லாரியை என் மேலேயே ஏத்திப் புடும்படியா ஏதாச்சும் பண்ணிப்புடுவார். அப்பத்தான் உனக்குப் புத்தி வரும்.''

''உளறாதே, நாயினு, ஏதாச்சும்.''

இருவருமே வாய் அடங்கிப் போயினர்.

இடையில் இரண்டு மூன்று நாட்களுக்குப் பெண்ணும் தகப்பனும் பேசவே யில்லை.

அன்று மாலை இழவன் வரும் நேரம் ஆகிவிட்டது. அப்படியும் அவன் வருகிற வழியாக ஒன்றும் தோன்றவில்லை. செவந்திக்கு வயிற்றிலே புளியைக் கரைக்கத் தொடங்கியது. விளக்கை ஏற்றி வைத்து விட்டு, வழி வைத்தமர்ந்தாள். திடீரென்று யாரோ விரைந்தோடி வரும் கலவரம் கேட்டுப் பதறி எழுந்தாள்.

''செவந்தியக்கா, செவந்தியக்கா!''

ஓடி வந்தவன் அவளுக்குத் தெரிந்த பையன் தான்; தெருக் கோடி வெற்றிலைப் பாக்குக் கடையில் எப்போதும் தென்படுவான்.

''என்ன தம்பி?'' என்று விழுக்கடித்துக் கொண்டு நின்றாள்.

''நம் தாத்தா மெயின் ரோடு திருப்பத்திலே லாரி மோதி அரைபட்டுக் கிடக்கார். அதான் ஓடியாந்தேன். ஒரே கூட்டம் அங்கே.''

செவந்திக்குக் கண்களை மறைத்துக் கொண்டு வந்தது. குடிசைக் கதவைக் கூட அடைத்து சாத்தாமல் ஓடினாள். அவளது நெஞ்சம் என்னதை எண்ணமெல்லாம் பின்னிப் பின்னி வதைத்தது. லாரி அரைத்தால், சாகத்தான் வேண்டுமா? காயம் பலமாகப் பட்டிருந்தாலும், ஏதோ ஒரு மாதம் ஆசுபத்திரியில் இருந்து குணமாகி உயிர் பெற்று வரக் கூடாதா? ஆனால் தன் தகப்பனோ, வயதான இழவன் ஆயிற்றே!

'செம்பாக்கம் விநாயகரே, என்னென்னவெல்லாமோ உங்களிடம் வேண்டிக் கொண்டிருக்கிறேன். நாயினுவை மட்டும் காப்பாற்றிக் கொடுத்து விடுங்கள்.' இப்படி வழி நெடுக அரற்றிய வண்ணம் ஓடினாள். கூட்டம் பெரிதாகத்தான் சேர்ந்திருந்தது. போலீசுக்காரர் ஒருவர் வந்து என்னென்னவோ குறித்துக் கொண்டிருந்தார். இழவன் உடலெல்லாம் ஒரே உதிர வெள்ளம். யாரோ இரண்டொருவர் அவன் வாயில் தண்ணீர் வார்த்தனர். செவந்தியின் கால்கள் தள்ளாடின.

''நாயினு பிழைச்சிடுமில்லே?'' என்று தன் முகத்தருகே வந்து கேட்ட செவந்தியைப் போலீசுக்காரர் பொருட்படுத்தாமல், ''நீ ஏன் பிள்ளே, இப்ப வந்து உசிரை வாங்கறே? நான் டாக்டரா அல்லது கடவுளா உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல?'' என்று எரிந்து விழுந்தார். இடையில் அவன் பெயர் விலாசமும் பதிவு ஆயிற்று.

செவந்தியின் செவிகளில் அங்கு கூட்டத்தில் யாரோ - ''காயம் முதுகில்தான் பட்டிருக்கு. நல்ல ...ம்து ..., நல தப்பியது'' என்று

பேசிக் கொண்டது விழுந்தது. ''பிழைச்சாப் போதுமின்னு சொல்லு.'' இப்படி இன்னொரு பேச்சு.

''இந்தாப்பா, டிரைவர், வண்டியை எடு. ஸ்டேஷனுக்குப் போகலாம்'' என்று போலீஸ்காரர் கூறிய குரலைக் கேட்ட பின்புதான் செவந்திக்கு லாரி ஓட்டியைப் பார்க்கிற எண்ணமே பிறந்தது. அவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. அதே குடிவெறி ஏறிய கோவைப் பழம் போல் சிவந்த காட்டுப் பூனையின் கண்கள் குத்திட்டு நின்றன. அதே பேர் வழிதான்; குடியாத்தத்து ஆளேதான்!

செவந்திக்கு அங்கே அவனைப் பார்த்ததிலிருந்தே ஓர் இனம் புரியாத இன்ப வெறி. இரத்தத்தில் ஒரு விஷமத் துடிப்பு. தன்னை நீதி மன்றத்துக்குச் சாட்சி கூற அழைக்கப் போகிறார்கள் என்று தெரிந்தது முதல் அவள் நூறு தரமாவது பல்லைக் கடித்திருப்பாள். பக்கத்து டவுனுக்கே நடந்து யார் மூலமாகவோ ஒரு வக்கீலைக் கூடக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். சாட்சியெல்லாம் சரியாக வைத்துக் குற்றம் தீர்மானமாக நியமிக்கப்பட்டு விட்டால், இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு உள்ளே தள்ளி விடலாம் என்பதைக் கேட்டதைத் தொட்டு, அவளுக்கு அப்படியே ஆகி விடாதா என்று ஓர் ஆசை.

அவள் எதிர்பார்த்த நாளும் வந்தது. நீதி மன்றம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. 'கணவன் குற்றவாளி, மனைவி சாட்சியம் கூறும் ருசிகர வழக்கு' என்ற தலைப்புக் கொடுத்து, உள்ளூர்த் தினசரி ஒன்று விளம்பரம் கூடச் செய்து விட்டது. குற்றவாளிக் கூண்டில் லாரி ஓட்டி நின்றிருந்தான். எதிரே செவந்தியைக் கொண்டு வந்து நிறுத்தினர். உண்மையே உரைப்பதாக உறுதி மொழி ஆயிற்று.

செவந்தியின் உதிரம் கொதித்துக் கொண்டிருந்தது. தன் கணவனின் புறமே பார்க்காது பேசலானாள். நீதி மன்றம் முழுதுமே அவளை உற்றுக் கவனிக்கிறாற் போலிருந்தது.

சர்க்கார் வக்கீல் கேள்விவிட்டார்–''கிழவர் மேல் லாரி-ஓட்டி வண்டியை ஓட்டி அரைத்துக் காயப்படுத்தியதற்குப் பழைய குடும்பத் தகராறு பகைமை ஏதும் காரணமாய் இருக்க முடியுமோ ?''

இதற்கு மேல் குற்றவாளித் தரப்பு வக்கீல் பேசினார்: ''கோர்ட்டார் அவர்களே, இந்தக் கேள்வியையே நான் ஆட்சேபிக்கிறேன்.... அஜாக்கிரதையாக வண்டியை ஓட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு என் கட்சிக்காரர் கூண்டில் நிற்கிறாரே ஒழிய, கொலை முயற்சியில் ஈடுபட்டதாக அவர் மீது சர்க்கார் வக்கீல் புதிய குற்றச்சாட்டு புரிவது வழக்கத்துக்கே புறம்பானது. அந்தக் கேள்வியே இங்கு எழ முடியாது.''

இக்கேள்வி-பதில்கள் இரண்டுமே செவந்தியின் செவிகளில் புகவில்லை. அவள் தலையை நிமிர்த்தாள். நீதி மன்றத்தில் கூட்டம் நிரம்பியிருந்தது. அத்தனை பேரில் யாருமே அவள் கண்களுக்குத் தெரியவில்லை. குற்றவாளிக் கூண்டில் நின்ற தன் புருஷனின் கண்களை ஒரு கணம் அவள் நோக்கியதில் அவளது இரத்தக் கொதிப்பெல்லாம் திடீரென்று அடங்கிப் போய்விட்டாற் போலிருந்தது. அவளுடைய கண்களில் குடிகொண்டிருந்த வெறி எங்கே ஓடி ஒளிந்து கொண்டதோ?

''நீதிபதி துரையே!''

மன்றமே அவள் குரல் கேட்டு, ஒடுங்கிப் போய் மௌனத்தோடு விளங்கியது. நீதிபதி முதல் அவள் நீங்கலாக அங்கு குழுமியிருந்த அவ்வளவு பேரும் அவளை நோக்கினர்.

தெளிந்த குரலில் செவந்தி பேசினாள்: ''இந்த விபத்துக்கு லாரி ஓட்டுபவர் பொறுப்பில்லீங்க.''

'' அப்படியானால்....?'' சர்க்கார் வக்கீலுக்கு நிலை கொள்ளவில்லை.

''அந்தக் கிழவருக்கே வாழ்க்கை பிடிக்காமல் போயிருந்ததுங்க. தன் ஒரே மகனோடே வாழ்க்கை வீணாகப் போயிருச்சின்னு அடிக்கடி புலம்பிக்கிட்டிருந்தார். அதனாலே அவரே மனசு ஒடிஞ்சு போய், நடு ரோட்டிலே போகிற லாரி முன்னாலே விழுந்திட்டாரின்னு தான் நெனைக்கக் கூடாதுங்களா?''

மறு விநாடி நீதி மன்றத்தில் ஒரே கர கோஷம். பின் நடந்ததைச் சுருங்கச் சொல்லலாம். வழக்குத் தள்ளுபடி ஆயிற்று என்று ஒரே வரியில்.

இதெல்லாம் நிகழ்ந்து ஒரு மாதம் ஆகியிருக்கும்.

சேம்பாக்கத்துக் குடிசையில்!

செவந்தி மூட்டை-சட்டி யெல்லாம் கட்டிக் கொண்டிருந்தாள்.

''ஆமாங்க. இப்பவே சொல்லிப்புடுங்க. உறுதி மொழிப்படி நடப்பீங்க இல்லே?''

''நிச்சயம் செவந்தி.'' – பேசியது வேறு யார்? அவள் புருஷன்தான்.

''அப்படி நம்பிக்கிட்டுத்தான் குடியாத்தத்துக்கு வரச் சம்மதிச்சேன். சாக்கிரதை பழைய படி கள்ளுப் புட்டியைத் தேடிக்கிட்டுப் போனீங்க, அப்புறம் தெரியும், சேதி! நினைப்பு இருக்கட்டும். இப்ப நீங்க கம்பி எண்ணிக்கிட்டு இருக்க வேண்டியவங்க என் தயவுலே வெளியிலிருக்கீங்க. அதை மறந்துடாதீங்க.''

''மறக்க மாட்டேன், செவந்தி. நீ பயப்பட வேணாம்.''

உள்ளேயிருந்து அவர்கள் பேச்சைக் கிழவன் கேட்டுக் கொண்டுதானிருந்தான்.

''ஆமாம், செவந்தி, உன்னை ஒன்னு கேக்கறேன். உன்னை நான் படுத்தி வைச்ச பாட்டுக்கு அதெப்படி உனக்கு என்னைக் காப்பாத்தத் தோணிச்சு? மூணு வருசமோ, முப்பது வருசமோ உள்ளாறப் போட்டிருந்தால் கூட நான் திருந்தியிருக்கமாட்டேன். உன் பதிலைக் கேட்ட பிற்பாடுதான் என்னவோ சம்மட்டியாலே அடிபட்டாப்பலே இருந்துச்சு. அது என்னு நீ அப்படிச் சொன்னே, கோர்ட்டிலே?''

''அதுதாங்க எனக்கும் விளங்கல்லே. உங்களைக்கொன்னுப் போட்டாக்கூடத் தேவலாம் காட்டிடும்னு நறநறன்னு பல்லைக் கடிச்சுக்கிட்டே இருந்தேன். கோர்ட்டிலே எப்படி அந்த மாதிரி சொல்ல வந்திச்சுன்னு எனக்கே புரியல்லீங்க.''

கிழவன், ''அப்ப நீயா பேசினே? நம் சேப்பாக்கத்துப் பிள்ளையாரில்லே பேசினார்? அவர் சொன்ன சாட்சி இல்லே அது?'' என்றான்.

அடுத்தாற்போல் இருந்த கோவிலினுள் சந்நிதியில் எழுந்தருளியிருந்த விநாயகப் பெருமான் எப்போதும் போல் ஒன்றும் தெரியாதவர்போல் காட்சி தந்தார்.


புதிய பெரிய டப்பாவில்
கால்கேட்
பேபி பவுடர்
அதிகப் பவுடர்...
அதிகச் சிக்கனம்...
புதிய சுலபமாக
அழுந்தும் மூடி!
குழந்தையின் நளினமான
சருமத்திற்கு இதமளிக்கிறது!
New
COLGATE
BABY
POWDER


க்ளூகோவிடா விரைவில்
தருவது
கூடுதலான
சக்தி
Glucovita
GLUCOSE-D
அன்றாடம் அருந்துவீர்!
க்ளூகோவிடா

பசி

டன் டன், டன் டன், டன் டன், டாண் டாண்!

"வயிறு பன்னிரண்டு மணிக்கே சாப்பாட்டு மணி அடித்துவிட்டது; இவன் என்னடா வென்றால் ஒரு மணிக்கு அடிக்கிறான்!" என்று சொல்லிக் கொண்டே, கையிலிருந்த 'ஸ்டிக்'கைக் 'கே'ஸின்மேல் வைத்துவிட்டுக் கையைக் கழுவுவதற்காகக் குழாயடியை நோக்கி வேகமாகச் சென்றான் கதிர்வேலு.

"எத்தனை மணிக்கு அடித்தால் என்ன, நம்மைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றுதானே? – செய்தால் கூலி; செய்யா விட்டால் வயிறு காலி!" என்று சொல்லிக் கொண்டே அவனைத் தொடர்ந்தான் கோவிந்தசாமி.

அப்போது, "பசி ஒரு வரப்பிரசாதம்!" என்று சொல்லிக்கொண்டே அங்கு வந்து சேர்ந்தான் ஆரோக்கியசாமி.

"யாருக்கு?" என்று அவனுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த அருணாசலம் கேட்டான்.

"போயும் போயும் அதை உன்னிடம்தானா சொல்ல வேண்டும்?" என்றான் ஆரோக்கியசாமி, அப்போதுதான் காரை விட்டுக் கீழே இறங்கி உள்ளே நுழைந்து கொண்டிருந்த முதலாளியைக் கடைக்கண்ணால் கவனித்துக் கொண்டே.


அதற்குள், "ஏண்டா, மெஷின்களெல்லாம் நின்றுவிட்டன?" என்று யாரையும் குறிப்பிட்டுக் கேட்காமல், எல்லோருக்கும் பொதுவாக இரைந்தார் அவர்.

"ஆபீஸ் கடிகாரம் அரை மணி நேரம் 'ஸ்லோ' என்பதற்காக அவர்களெல்லாம் பன்னிரண்டரை மணிக்கே சாப்பாட்டுக்குப் போய் விட்டார்கள், ஸார்!" என்றான் அருணாசலம், வழக்கம் போல் எல்லோரையும் தள்ளிக் கொண்டு முன்னால் வந்து நின்று.

பீதாம்பரத்துக்கு இது பிடிக்கவில்லை; "இதோ வந்து விட்டாரேடா, 'போர்மேன் பொன்னையா' புனர்ஜன்மம் எடுத்து!" என்று ஏகாம்பரத்தின் காதோடு காதாகக் கிசுகிசுத்தான்.

அருணாசலத்தின் 'எலிக் கா'தில் அது விழுந்துவிட்டது; அவன் விடுவானா, அந்தச் சந்தர்ப்பத்தை?– "தட்டிக் கேட்க ஆளில்லாமல் போனதால்தான் எல்லோரும் சண்டப் பிரசண்டர்களாகிவிட்டார்கள்!" என்று 'போர்மேன்' இல்லாத குறையை நாசூக்காகத் தெரிவித்துக் கொண்டான், முதலாளியிடம்.

"ஆமாமாம், நாமெல்லாம் 'எக்ஸ்ட்ரா கம்போஸிட்டர்'கள்தானே? அதைக் கூட மறந்து விட்டேன், பசியில்!" என்று கதிர்



வேலு தனக்குத் தானே அசடு வழியச் சிரித்துக் கொண்டான்.

அவரோ அதைக்கூடப் பொருட்படுத்தாமல், ''சாப்பாடு, சாப்பாடு, சாப்பாடு! எப்போது பார்த்தாலும் சாப்பாட்டு நினைவு தான் இந்தப் பயல்களுக்கு!'' என்று தம்மைப் பொறுத்தவரை அந்த நினைவே இல்லாதவர் போலச் சாப்பிடப் போய்விட்டார்!

எப்படி யிருக்கும், அருணாசலத்துக்கு? அவருக்காகத் தான் எடுத்துக் கொண்ட சிரமத்துக்கு, அவரிடமிருந்து கேவலம் ஒரு 'சபாஷ்' கூடவா கிடைக்கக் கூடாது, தனக்கு?– இதை நினைத்ததும், அழுகையே பொத்துக் கொண்டு வந்து விடும்போலிருந்தது. அவனுக்கு; முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு திரும்பினான்.

''கவலைப்படாதே! போர்மேன்போன்னையா செத்ததே உனக்காகத்தானே? அவருடைய பதவிக்கு உன்னை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள், இங்கே? கவலைப்படாதே தம்பி, கவலைப்படாதே!'' என்று அவனுடைய தோள்களில் ஒன்றைப் பற்றி அவனைத் தேற்றினான் கோவிந்தசாமி.

''அவன் என்ன செய்வான், பாவம்!'' என்று சொல்லிக் கொண்டே அருணாசலத்தின் இன்னொரு தோளைப் பற்றி, ''பதவி மோகம் ஒருவனைப் பிடித்துவிட்டால், அது அவனை என்னவெல்லாம் செய்ய வைத்து விடுகிறது!'' என்று கதிர்வேலுவும் கோவிந்தசாமியுடன் சேர்ந்துகொண்டு அவனைத் தேற்றினான்.

''என்னை யாரும் தேற்ற வேண்டாம்; எட்டிப் போங்கள்!'' என்று அவர்களுடைய கையைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டு, 'விடுவிடு'வென்று வெளியே போய்விட்டான் அருணாசலம்.

அவன் தலை மறைந்ததும், 'நரிப் பயல்!' என்று கறுவிக் கொண்டே, கையோடு கொண்டு வந்திருந்த கட்டுச் சோற்றை எடுத்துத் தன் கேஸாக்கு அடியிலேயே உட்கார்ந்து அவிழ்த்தான் கோவிந்தசாமி.

அப்போதுதான் வழக்கமாகத் தனக்குப் பக்கத்தில் உட்காரும் கதிர்வேலு அங்கே உட்காரவில்லை என்பது அவனுக்குத் தெரிந்தது.

தனக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்தவன் என்ன ஆனான்? – ''கதிர்வேல், கதிர்வேல்!'' என்று குரல் கொடுத்துப் பார்த்தான் கோவிந்தசாமி; பதில் இல்லை.

எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு மூலையில் ஓர் ஆள் உயரத்துக்கு மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த 'ரீம்'களின் மேல் அவன் கவிழ்ந்து படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''அட, பாவி! இன்று நீ சோறு கொண்டு வரவில்லையா, என்ன?– ம், கொண்டு வந்திருந்தால் படுப்பதற்கு அந்த மூலையை ஏன் தேடியிருக்கப் போகிறாய்?''– அவிழ்த்த கட்டுச் சோற்றை அப்படியே கட்டி வைத்துவிட்டுச் சென்று அவனை எழுப்பினான் கோவிந்தசாமி.

''ஏண்டா, இன்னுமா நீ சாப்பிடவில்லை?'' என்று தான் ஏற்கெனவே சாப்பிட்டு விட்டது போல் அவனைக் கேட்டுக் கொண்டே எழுந்து உட்கார்ந்தான் கதிர்வேலு.

''உன்னை விட்டுவிட்டுச் சாப்பிடும் அளவுக்கு நான் இன்னும் 'பெரிய மனித'னாகி விடவில்லையே? இறங்கி வா, இருப்பதை இருவரும் பகிர்ந்து கொள்வோம்.''

''வேண்டாம். அது உனக்கும் போதாது; எனக்கும் போதாது!''

''மனம் 'போதும்' என்று சொல்லும்போது வயிறு 'போதாது' என்று சொல்லாது; நீ வாடா!'' என்று அவனை இழுத்துக் கொண்டு வந்தான் கோவிந்தசாமி.

இருவரும் உட்கார்ந்தார்கள்; ''இருப்பதைப் பகிர்ந்து கொள்வதற்குக் கூட இன்னொரு இலை வேண்டுமே?'' என்றான் கதிர்வேலு.

''ஏன், இருவரும் ஒரே இலையில் சாப்பிட்டால் என்னவாம்?''

''அது அவ்வளவு நன்றாயிருக்குமா?'' என்றான் அவன் கொஞ்சம் அருவருப்புடன்.

''ஓட்டலில் எத்தனையோ பேர் சாப்பிட்ட எச்சில் தட்டில் நாமும் சாப்பிடுகிறோமே, இங்கே ஒருவருடைய எச்சில் இலையில் இன்னொருவர் சாப்பிடக் கூடாதா?'' என்றான் இவன் கொஞ்சம் விறுவிறுப்புடன்.

''அது நாகரிகம்; இது அநாகரிகமில்லையா?'' என்றான் கதிர்வேலு, சிரித்துக்கொண்டே.

''அந்த நாகரிகத்துக்கு இந்த அநாகரிகம் ஒன்றும் கெட்டுப் போய்விடாது; நீ சாப்பிடு!'' என்றான் கோவிந்தசாமி.

இருவரும் இடம் மாறி, எதிரும் புதிருமாக உட்கார்ந்தார்கள்; ஆளுக்கு நாலு கவளம் எடுத்து விழுங்கி விட்டு வெளியே வந்தார்கள்.

''உனக்குத் தெரியுமா, அடுத்த முதல் தேதியிலிருந்து நம் அனைவரையும் மாதச் சம்பளத்துக்கு அமர்த்திக் கொண்டு விடப் போகிறார்களாம்!'' என்றான் கோவிந்தசாமி.

''ஏனாம்?'' என்று கதிர்வேலு கேட்டான்.

''மெஷின் மெக்கானிக்குக்கு வேலை குறைவாகவும், கம்

விருந்தன்



போலீஸ் லைசென்ஸுக்கு வேலை அதிகமாகவும் இருப்பதால்!''

''அதனால் என்ன?''

''இத்தனை வாரங்களாகப் பத்துப் பன்னிரண்டு என்று கூலி வாங்கிக் கொண்டிருந்த நாம், இந்த வாரம் இருபது ரூபாய் வாங்கி விடவில்லையா, அது முதலாளிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை!''

''அப்படியானால் கம்போஸிட்டர்கள் 'பெர்மெனென்ட்' ஆகும் போது, 'மெஷின்மென்'களெல்லாம் 'டெம்பரரி'யாகி விடுவார்களா, என்ன?''

''ஆனாலும் ஆவார்கள், யார் கண்டது?''

''அநேகமாக அருணாசலம் தான் நமக்கெல்லாம் 'போர்மே'னாக நியமிக்கப் படுவான், இல்லையா?'' என்று கதிர்வேலு கேட்டான்.

''அவன் என்னமோ அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான்; முதலாளி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ?'' என்றான் கோவிந்தசாமி.

''நினைப்பதென்ன? — அவரும் அநேகமாக யாராவது ஓர் 'ஆமாம் சாமி'யைத் தான் தேடிப் பிடிப்பார்; அதற்கு நம் அருணாசலம் தான் லாயக்கு!''

''அவருக்குத் தெரியாது. வேறு எவனைப் பிடித்துப் போட்டாலும் அவனும் உடனே 'ஆமாம் சாமி'யாகிவிடுவான் என்று!''

''இதனால் என்ன ஆகிறது, தெரியுமா?— திறமைக்கு இடம் இல்லாமற் போய் விடுகிறது, அப்பா!''

''திறமைக்கு இடம் கொடுத்தால் 'ஆமாம் சாமி'க்கு இடம் இல்லாமற் போய் விடுகிறதே! இவ்வளவு பெரிய உலகத்தில் தன்னைப் 'புத்திசாலி' என்று ஒப்புக் கொள்ள 'ஒரே ஒருவ'னாவது வேண்டாமா, முதலாளிக்கு?''

''ம், எவன் வந்தாலும் அவன் தலை கனக்கப் போவது மட்டும் நிச்சயம்!''

''தலை கனத்தால் கனத்து விட்டுப் போகட்டும்; தன்னுடைய பதவியை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக மற்றவர்களுடைய வாயில் அவன் மண்ணைப் போடாமலிருந்தால் சரி!''

''அப்படித்தான் நினைத்தான் போர்மேன் பொன்னையா — ஆனால் என்ன ஆயிற்று? ஒரே நாள் காய்ச்சலில் ஆளே அவுட்!''

''அவன் மட்டுமா?—பொழுது விடிந்தால் அவனைப்போல் எத்தனையோ பேர் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் புத்தி வருகிறதா, எவனுக்காவது?— ஊஹூம்!''

''நான் வாழ்ந்தால் போதும் என்று எவன் நினைக்கிறானோ, அவன் தலையில் இடியாவது விழுகிறதா?—அதுவும் இல்லை!''



''நான் வடக்கே போயிருந்தேன். இந்தி பேசறவாளோடு நான் சரளமா இந்தி பேசினேன். கொஞ்சம் கூடச் சிரமப்படவில்லை!''

''அவர்கள்தான் சிரமப்பட்டார்களாக்கும்!''

''எங்கே விழுகிறது?—அது கூட நல்லவர்களைத் தான் விரும்புகிறது; கெட்டவர்களை விரும்பமாட்டேன் என்கிறது!''

''அதைச் சொல்லு, முதலில்!'' என்று சொல்லிக் கொண்டே கதிர்வேலு ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்தான்.

''ம், எல்லாம் முதல் தேதி பிறந்தால் தெரிந்து விடாதா?—நீ எனக்கும் ஒரு பீடி இருந்தால் கொடு!'' என்றான் கோவிந்தசாமி.

''இதிலும் இருப்பதைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது தான், இருவரும்!'' என்று தான் பிடித்துக் கொண்டிருந்த பீடியில் பாதியைப் பிட்டு அவனிடம் கொடுத்தான் கதிர்வேலு.

இன்றைய நேற்றைய நட்பா, அவர்களுடையது? கடந்த இருபது வருட காலத்திய நட்பாயிற்றே!— எதையும் பகிர்ந்து கொள்ளத் தயாராயிருந்தார்கள் அவர்கள், தங்கள் மனைவிமார்களைத் தவிர!

★

முதல் தேதி பிறந்தது. ஆனால் கதிர்வேலு எதிர்பார்த்தபடி அருணாசலம் 'போர்மே'னாக நியமிக்கப்படவில்லை; கதிர்வேலே போர்மேனாக நியமிக்கப்பட்டான்.

காரணம், மற்றவர்களுக்குப் பிடிக்காத அருணாசலத்தை விடப் பிடிக்கும் கதிர்வேலே மேல் என்று முதலாளி நினைத்ததுதான்!

புறாவைப் பிடிக்க வேண்டுமென்றால் புறாவைக் காட்டித்தானே பிடிக்க வேண்டும்? காக்கையைக் காட்டிப் புறாவைப் பிடிக்க முடியுமா?

இது தெரியாத அருணாசலம் முதலில் கொஞ்சம் புழுங்கினான். பிறகு, 'பகையாளியின் குடியை உறவாடிக் கெடு!' என்று எண்ணித் துணிந்தவனாய் வழக்கம்போல் எல்லோரையும் தள்ளிக் கொண்டு முன்னால் வந்து நின்று, ''என்ன இருந்தாலும் அதிர்ஷ்டக்காரர் நீங்கள்; உங்களுக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்!'' என்றான், வாயெல்லாம் பல்லாக.

''அப்படி என்று ஒன்று இருக்கிறதா என்ன, உனக்கு?'' என்று வியப்புடன் கேட்டான் ஆரோக்கியசாமி.

''எப்படியென்று?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான் அருணாசலம்.

''ஒன்றுமில்லை!'' என்று சொல்லிக் கொண்டே அவனை விட்டு அப்பால் சென்ற ஆரோக்கியசாமி, ''இவனுக்காவது, இதயம் என்று ஒன்று இருப்பதாவது!'' என்று தனக்குத் தானே முனகிக் கொண்டான்.

ஆரோக்கியம் பெற ஒரு ஸ்பூன் அளவுடன் இன்றே ஆரம்பியுங்கள்



க்ருஷன் ஸால்ட்ஸ் மட்டுமே அளிக்கக்கூடிய 7 வகைச் செய்கைகள்:-

சிறந்த உடல் நலம் பெறச் சாப்பிடுங்கள்

க்ருஷன் ஸால்ட்ஸ்

K.S.G 17 TM ஒரு நிக்கொலஸ் தயாரிப்பு • தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள் பெறும் உத்தரவாதம்

எதிர்பாராதவிதமாகக் கதிர்வேலுக்குக் கிடைத்த பதவி, கோவிந்தசாமியை ஒரே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிட்டது. ஒரு கணம் ஒன்றும் பேச முடியாமல் தழுதழுத்து நின்ற அவன், மறுகணம் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டு, ''வாழ்த்தாதே! முதலில் உன் வாயால் அவனை வாழ்த்தாதே!'' என்று கத்தினான்.

''ஏன், அவரை நான் வாழ்த்துவது உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கொஞ்சம் 'பொடி' வைத்து சுனினான் அருணாசலம்.

அதைப் புரிந்து கொள்ளாத அப்பாவி கோவிந்தசாமியோ, ''ஆம், அவனை நீ வாழ்த்துவது எனக்குப் பிடிக்கத்தான் இல்லை. அதிலும், அவனுக்குக் கிடைத்த பதவி அதிர்ஷ்டத்தால் கிடைத்தது என்று நீ சொல்வது, அவனுடைய திறமையைக் குறைத்துப் பேசுவது போலிருக்கிறது. போ, எட்டிப் போ!'' என்று அவனைப் பிடித்து அப்பால் தள்ளிவிட்டுத் தன் நண்பனை அப்படியே அணைத்துக் கொண்டு விட்டான்!

இந்தச் சமயத்தில், ''முதலாளி உங்களைக் கூப்பிடுகிறார்!'' என்று ஏவலாள் வந்து சொல்லவே, ''விடு, என்னை!'' என்று முகத்தில் அடித்தாற்போல் சொல்லிக் கொண்டே அவனுடைய பிடியிலிருந்து அவசரம் அவசரமாக விலகி, அவருடைய அறையை நோக்கி நடந்தான் கதிர்வேலு.

அவனுடைய 'அவசரம்' கோவிந்தசாமியை என்னவோ செய்வது போலிருந்தது. 'ஏன் இந்த மாறுதல்? ஒரு வேளை இவனையும் அந்தப் பாழும் பதவி 'ஆமாம் சாமி' யாக்கி விடுமோ? தான் வாழப் பிறர் வாயில் மண்ணைப் போட வைத்து விடுமோ?' என்று தனக்குத்தானே கேள்விமேல் கேள்வியாக எழுப்பிக் கொண்டு நின்றான்.

அவனுடைய நிலையை ஒருவாறு புரிந்து கொண்டவன்போல், ''பதவி வேலை செய்ய ஆரம்பித்து விட்டதப்பா, பதவி வேலை செய்ய ஆரம்பித்து விட்டது!'' என்றான் ஆரோக்கியசாமி, பெருமூச்சுடன்.

★

ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பிறகு முதலாளியின் அறையை விட்டுக் கதிர்வேலு வெளியே வந்தபோது, ''விழுந்தது; முதலாளி சொன்னதெல்லாம் என் காதிலும் விழத்தான் விழுந்தது. அதிலே ஒரு 'பியூட்டி' என்னவென்றால், எல்லாவற்றுக்கும் என்னைப் போல் நீங்களும் 'ஆமாம்' போட்டுக் கொண்டிருந்தீர்கள் பாருங்கள், அதுதான் அங்கே பாயிண்ட்!'' என்று அவனுக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான்; கையோடு கையைச் சேர்த்துப் பிசைந்தபடி அருணாசலம் அவனுக்குப் பின்னால் கூனிக் குறுகி வந்து கொண்டிருந்தான்.

''நீதானா!'' என்றான் கதிர்வேலு—அவன் குரலில் இப்போது அவனையும் அறியாமல் 'அலட்சிய பாவம்' இடம் பெற்றிருந்தது.

''ஆமாம் ஸார், நானேதான் ஸார்!'' என்றான் அருணாசலம், இத்தனை நாட்களும் இல்லாத 'ஸார்'ரைப் போட்டு!

இந்த 'ஸார்' தன் தலையைச் சற்றே கனக்க வைப்பதைக் கதிர்வேலு உணர்ந்தான்; ஆனால் தன் மார்பு அதனால் விம்மிப் புடைத்ததை அவன் அறியவில்லை.

''அவர் சொன்னவை யெல்லாம் உங்களுக்குப் பிடித்ததுபோல் எனக்கும் பிடிக்கத்தான் பிடித்தன; ஆனால் ஒன்றே ஒன்று மட்டும் பிடிக்கவில்லை!'' என்று மேலும் கொஞ்சம் 'பொடி' வைத்து சுனினான் அருணாசலம்.

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை; ''என்ன அது?'' என்று உடனே கேட்டு விட்டான் கதிர்வேலு.

அது போதாதா, அவனுக்கு? ''ஆளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் சம்பளம் என்று பேசி ஆறு பேரை வைத்துக் கொண்டு இப்பொழுதுள்ள வேலையைச் செய்து முடித்தால் உங்களுக்கு மாதம் ரூபாய் இருநூறு சம்பளம் கொடுக்கிறேன் என்று சொன்னாரே, அதைத்தான் சொல்கிறேன்!'' என்று தன் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டான்.

''ஏன், எனக்கு மாதம் இருநூறு ரூபாய் சம்பளம் தருகிறேன் என்று அவர் சொன்னது உனக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டான் கதிர்வேலு, பகவான் பக்தனைச் சோதிப்பதுபோல!

அந்தப் பக்தனா அதற்கெல்லாம் அயர்ந்து விடக் கூடியவன்? ''நன்றாய்ச் சொன்னீர்கள்! உங்களுடைய அந்தஸ்துக்கு மாதம் ரூபாய் முந்நூறாவது சம்பளம் தருகிறேன் என்றல்லவா அவர் சொல்லியிருக்க வேண்டும்? தவறி விட்டார்; அந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவர் தவறித்தான் விட்டார்!'' என்று சொல்லி, பகவானின் அருளுக்கு உடனே தன்னைப் பாத்திரமாக்கிக் கொண்டுவிட்டான்!

உச்சி குளிர்ந்த பகவான், ''ஓ, அதற்குச் சொன்னாயா?'' என்று தம் தலையை ஆட்டினார்!

''ஆமாமாம், அதற்குத்தான் சொன்னேன்! இப்போதுகூட ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை; ஆறு பேரை வைத்துக் கொண்டு அவர் முடிக்கச் சொன்ன வேலையை ஐந்தே பேரை வைத்துக் கொண்டு முடித்து விடுகிறேன் என்று சொல்லிப் பாருங்கள்—இன்னும் ஓர் ஐம்பது ரூபாயாவது உங்களுக்குக் கூடக் கிடைக்கும்!''

இதைக் கேட்டதும், 'சொல்லிப் பார்க்கலாம் போலிருக்கிறதே!' என்று உள்ளூற நினைத்தான் கதிர்வேலு; ஆனால், அதை அவன் வெளியே சொல்லவில்லை.

நம்பிக்கை

பகுத்தறிவைக் கொண்டே விளக்கம் பெற முடியாத பல விஷயங்களும் உண்டு. நம்பிக்கையைக் கொண்டே அவைகளை நாம் ஏற்க வேண்டும். இவ்வாறு நோக்கினால், நம்பிக்கை என்பது பகுத்தறிவுக்கு விரோதமானதல்ல; பகுத்தறிவுக்கு மேம்பட்டதே அது என்பது புரியும். பகுத்தறிவின் எல்லைக்குட்படாத விஷயங்களை விசாரித்து உணரும் ஆறுவது உணர்வே நம்பிக்கை.

—காந்தியடிகள்

''அப்புறம் போக்குவரவு சௌகரியத்துக்காக உங்களுக்கு ஒரு 'ஸைக்கிள்' வாங்கித் தருகிறேன் என்று சொன்னார் பாருங்கள், அதுவும் எனக்குப் பிடிக்கவில்லை. உங்களுடைய அந்தஸ்துக்குக் கேவலம் ஒரு 'ஸ்கூட்டர்' கூடவா வாங்கிக் கொடுக்கக் கூடாது?''

'கொடுக்கலாம் போலிருக்கிறதே!' என்று நினைத்தான் கதிர்வேலு; ஆனால் அதையும் அவன் வெளியே சொல்லவில்லை.

''சொல்கிறேன் என்று கோபித்துக் கொள்ளக்கூடாது; இனி உங்களுடைய அந்தஸ்தை நீங்கள்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நேற்றுவரை நீங்கள் எந்தச் சக்தியும் இல்லாத எக்ஸ்ட்ரா கம்பாஸிட்டராக இருந்திருக்கலாம் — இன்றோ நீங்கள் போர்மேன்; எல்லாச் சக்தியும் வாய்ந்த போர்மேன். அவர்தான் சொல்லிவிட்டாரே, நீங்கள் விரும்பினால் யாரை வேண்டுமானாலும் வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம்; விரும்பாவிட்டால் யாரை வேண்டுமானாலும் வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று. அப்புறம் என்ன? முதலில், உங்களை விடத் திறமைசாலிகள் வேறு யாராவது இங்கே இருந்தால் அவர்களை ஈவிரக்கமின்றி வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்; அப்போதுதான் உங்களுடைய பதவி நிலைக்கும். அடுத்தாற் போல் உங்களை இனி யாராவது, 'வாடா, போடா' என்று மரியாதைக் குறைவாகப் பேசினால், அவர்களையும் தயவு தாட்சண்யமின்றி வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்; அப்போதுதான் உங்களுடைய அந்தஸ்து பரிமளிக்கும்!''

'அனுப்ப வேண்டியதுதான்; தன்னுடைய பதவிக்கும் அந்தஸ்துக்கும் யார் பங்கம் விளைவித்தாலும் சரி, அவர்களை உடனே வீட்டுக்கு அனுப்ப வேண்டியதுதான்!' என்று சொல்ல நினைத்தான் அவன்; ஆனால் சொல்லவில்லை!

இத்தனைக்கும் மௌனம் சாதித்த பிறகு இனி பொறுப்பானேன் என்று, ''ஆமாம், அவர் சொன்ன அந்த ஆறு பேர் — அந்த ஆறில் 'நமக்'காக ஒன்றைத் தள்ளி விட்டால் ஐந்து பேர், 'யார், யார்' என்று தீர்மானித்து விட்டீர்களா, நீங்கள்?'' என்று மெல்ல விஷயத்துக்கு வந்தான் அருணாசலம், அந்த 'நமக்'கில் தன்னையும் அவனையும் மட்டுமே சேர்த்துக் கொண்டு !

''அதெல்லாம் தீர்மானித்தாகி விட்டது; என்னுடைய மேஜைக்குச் சென்றதும் எழுதி அனுப்ப வேண்டியதுதான் பாக்கி!'' என்றான் கதிர்வேலு.

★

சிறிது நேரத்துக்குப் பிறகு 'கம்போஸிங் செக்ஷ'னுக்குள் நுழைந்த கதிர்வேலுவை 'வாடா வா!' என்று வழக்கம்போல் 'டா' போட்டு வரவேற்று, ''இவ்வளவு நேரமாகவா முதலாளியும் நீயும் பேசிக்கொண்டிருந்தீர்கள்?'' என்று கேட்டான் கோவிந்தசாமி.

அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, காதோரத்தில் செருகி வைத்திருந்த பென்சிலை எடுத்தான் கதிர்வேலு.

அதற்குள் ஒரு காகிதத்தை எடுத்துப் படு பவ்வியமாக அவனிடம் நீட்டினான் அருணாசலம். அதை வாங்கி, '1. அருணாசலம்' என்று எழுதினான் அவன்!

''பிள்ளையார் சுழிக்குப் பதிலாக அவனுடைய பெயரை எழுதவே எழுதினாய், குறைந்த பட்சம் மூன்று குட்டும் மூன்று தட்டும் மூன்று தோப்புக்கரணமுமாவது போட்டுவிட்டு எழுதக் கூடாதா?'' என்றான் ஆரோக்கியசாமி.

''மறந்து விட்டிருப்பான்!'' என்றான் பீதாம்பரம்.

''அப்பொழுதே ஞாபகப்படுத்தியிருக்கலாம்!'' என்றான் ஏகாம்பரம்.

அவர்கள் அனைவரையும் சேர்ந்தாற்போல், ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, '2. குமாரசாமி, 3. முத்தையா, 4. நாராயணன், 5. பஞ்சாட்சரம்' என்று எழுதி, ''இந்தாப்பா அருணாசலம், இதை எடுத்துக்கொண்டு போய் முதலாளியிடம் கொடுத்துவிடு; 'ஆறாவது பெயரைக் காணுமே?' என்று கேட்டால், 'ஐந்துபேரே போதுமாம்!' என்று சொல்லிவிடு!'' என்றான் கதிர்வேலு.

''சரி, ஸார்!'' என்று அதை வாங்கிக்கொண்டு சிட்டாய்ப் பறந்த அருணாசலம், 'தொலைந்தான்; இனி கதிர்வேலு தொலைந்தான்! 'எல்லோருக்கும் வேண்டியவர்' என்பதற்காகத்தானே அவருக்குப் போர்மேன் பதவி? இப்போதோ, அவர் யாருக்கும் வேண்டாதவராகி விட்டார்! இனி, நான் 'எல்லோருக்கும் வேண்டிய'வனாவதற்கு வழி வகைகளைத் தேட வேண்டும்! வெற்றி, எனக்கே வெற்றி!' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் !

அதற்குள் விஷயத்தை ஒருவாறு புரிந்து கொண்ட ஆரோக்கியசாமி, ''நாங்கள்?'' என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு, கதிர்வேலுவின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

''நீங்கள் வீட்டுக்குப் போகலாம்!'' என்றான் அவன் துணிந்து.

''நான் கூடவா?'' என்றான் கோவிந்தசாமி, 'கூடவா' என்பதற்கு மட்டும் கொஞ்சம் கூடுதலான அழுத்தம் கொடுத்து!

''ஆம், முதலாளியின் உத்தரவு அது !'' என்றான் கதிர்வேலு, தன்னை அவனிடம் காட்டிக் கொடுத்துக் கொள்ள விரும்பாமல்!

கோவிந்தசாமி சிரித்தான்; சிரித்து விட்டு, ''ஆஹா! பதவி மோகம் ஒருவனைப் பிடித்து விட்டால், அது அவனை என்னவெல்லாம் செய்ய வைத்துவிடுகிறது!'' என்று அன்றொரு நாள் அவன் சொன்னதை அவனிடமே திருப்பிச் சொல்லிவிட்டு நடந்தான்.

அதற்குள் முதலாளியைப் பார்த்துவிட்டு அவனுக்கு எதிர்த்தாற்போல் வந்த அருணாசலம், ''பார்த்தாயா, அவன் உன்னையே வீட்டுக்கு அனுப்பிவிட்டான்!'' என்று தன் அடுத்த முயற்சியை அன்றே ஆரம்பித்து வைத்தான் !

அதற்கும் சிரித்தான் கோவிந்தசாமி ; சிரித்து விட்டு, ''அவன் என்னை வீட்டுக்கு அனுப்பவில்லை; தன்னைத் தானே அனுப்பிக் கொண்டிருக்கிறான் !'' என்றான், தீர்க்க தரிசனத்துடன் !

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர்
உபயோகித்து நாள் முழுவதும் குளுமையையும்
நறுமணத்தையும் அனுபவியுங்கள்
பட்டுப்போன்ற மென்மை, அன்றலர்ந்த மலரின்
குளுமை, துல்லிய நறுமணம்—இவற்றின் சேர்க்கைதான்
பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர்!
அசௌகரியமான வியர்வையை விரைவில் உறிஞ்சு
கிறது...நாள் முழுவதும் நறுமணத்தோடு இதமாக
இருக்க உதவுகிறது. அதை வருஷம் பூராவும்
உபயோகித்துப் பரவசமடையுங்கள்!
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.யில் இணைக்கப்பட்டது)
JWT-P 3274


REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

யாரோ இவள் யாரோ?

என யாரும் கேட்க, எவரும் வியக்க...



உங்கள் மேனியெழிலை மிளிரச் செய்வது
செங்கமல வண்ண ப்ரீஸ்



இணங்கி இணைபிரியா நறுமண நலங்களோ...
எழிலுக்கொரு செவ்வண்ண நீராஞ்சனமோ...
செங்கமல வண்ண ப்ரீஸ் ஸ்நானமோ!
அரவணைத்து உங்கள் உரிமைப் பொலிவுக்கு
மெருகிழைக்க உருவெடுத்த அழகுசாதன சோப்...
உங்கள் வனப்புக்கு வனப்பு... ஒளிச் சிறப்பு!

BZ. 22-X52 TM

இந்துஸ்தான் லீவர் லிமிட்டெடினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.